*அத்தியாயம் 2*

# தேசிய உற்பத்தியும் செலவினமும்

## 2.1 பொதுநோக்கு

- **மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொ.உ.உ) 2004 இன் 5.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2005 இல் உண்மை நியதிகளில் 6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** விசேடமாக, மீன்பிடி மற்றும் சுற்றுலாத் துறைகளில் ஏற்பட்ட எதிர்க்கணிய விளைவின் காரணமாக சுனாமி முதலாம் காலாண்டிலான பொருளாதார வளர்ச்சியை 4.4 சதவீதத்திற்குக் குறைத்தது. எனினும், பொருளாதாரத்தின் தாக்குப்பிடிக்கக் கூடிய தன்மையானது இவ்வாண்டின் எஞ்சிய மூன்று காலாண்டுகளிலும் 6 சதவீதத்துக்கும் கூடுதலாக வளர்ச்சியடைவதை இயலச்செய்தது. இவ்வளர்ச்சி அதிகரித்துச் செல்லும் எண்ணெய் விலைகள் மற்றும் ஏற்றுமதிகளுக்கான பலமான பன்னாட்டுப் போட்டி என்பவற்றிற்கு மத்தியிலும் அடையப்பட்டமையால் பாராட்டத்தக்கதாகும். இவ்வாண்டின் நான்காம் காலாண்டளவில் சுனாமியின் பாதகமான தாக்கங்கள் ஓரளவிற்கு குறைவடையத் தொடங்கின.

- **மூன்று முக்கிய பொருளாதாரத் துறைகளினுள் கைத்தொழிற்றுறை 2005 இல் ஆகக்கூடிய வளர்ச்சி வீதமான 8.3 சதவீதத்தை அடைந்து பொதுவான வளர்ச்சியின் 36.3 சதவீதத்துக்குப் பங்களிப்புச் செய்தது.** இவ்வளர்ச்சி பரந்த தளத்தைக் கொண்டு விளங்கியதுடன், தயாரிப்பு, சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும், கட்டடவாக்கம் மற்றும் மின்வலுவும் நீரும் ஆகிய சகல நான்கு துணைத்துறைகளிலும் மேம்பட்ட செயலாற்றத்தைப் பிரதிபலித்தது. உயர்ந்த எண்ணெய் விலைகள் மற்றும் பல்நூலிழை உடன்படிக்கை முடிவுற்றமை என்பவற்றால் எழும் சவால்களுக்கு மத்தியிலும் தொழிற்சாலைக் கைத்தொழிற்றுறை துணைத்துறை சிறப்பாகச் செயலாற்றியது. பன்னாட்டுச் சந்தைகளிலும் உள்நாட்டுக் கேள்வியிலும் ஏற்பட்ட தொடர்ச்சியான விரிவாக்கம் அதேபோன்று ஏற்றுமதித் தயாரிப்புத் துறையின் மீள்எழுச்சியும் இவ்வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தன.

- **பணிகள் துறை 6.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்து, பொதுவான வளர்ச்சியில் 59.3 சதவீதத்துக்குப் பங்களிப்புச் செய்தது.** இத்துறையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முக்கியமாக சுற்றுலா நடவடிக்கைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் இறக்குமதி வர்த்தகத்தின் குறைந்த வளர்ச்சியும் முக்கிய காரணங்களாக அமைந்தன. தொடர்பூட்டல்கள், நிதியியற் பணிகள் மற்றும் உள்நாட்டு வர்த்தகம் ஏனைய இத்துறையின் பொதுவான வளர்ச்சிக்கு மிகக்கூடிய அளவில் பங்களிப்புச் செய்தன.

- **வேளாண்மைத்துறை 1.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்ததுடன், சுனாமியைத் தொடர்ந்து மீன்பிடித் துணைத்துறையின் செயலாற்றத்தில் கடுமையான மெதுவடைந்த போக்குக் காணப்பட்ட போதும் 2004 இற்கு மாறாக, வேளாண்மைத்துறை பொருளாதார வளர்ச்சிக்கு 4.4 சதவீதத்தால் சாதகமாகப் பங்களிப்புச் செய்தது.** பெரும்போக மற்றும் சிறுபோக நெல் அறுவடைகள் சாதனை மட்டங்களை அடைவதற்கு சாதகமான காலநிலை நிலைமைகள் உதவின. சாதகமான வானிலை நிலைமைகளின் பயனாக சிறு ஏற்றுமதிப் பயிர்கள், துணை உணவுப் பயிர்கள் மற்றும் மரக்கறிகள் என்பவற்றின் உயர் செயலாற்றமும் நெல் போன்று வேளாண்மைத் துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்வதை இயலச்செய்தது.

- **நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2005 இல் ரூ.2,366 பில்லியனாக மதிப்பிடப்பட்டதுடன் பெயரளவு நியதிகளில் 16.6 சதவீத அதிகரிப்பை பதிவு செய்தது.** இவ்வதிகரிப்பு வீதம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பொதுவான விலை மட்டத்தில் பெற்ற உயர் அதிகரிப்புடன் இணைந்து உண்மைப் பொருளாதார வளர்ச்சி விரைவடைந்தமையைப் பிரதிபலித்தது.

- **மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியால் அளவிடப்பட்டவாறு பொதுவான விலைப்**

வரைபடம் 2.1
ஆண்டு வளர்ச்சி வீதங்கள்



**அட்டவணை 2.1**
**நிலையான (1996) விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும்**

| துறை | மாற்ற வீதம் (%) | | மொத்த உள்நாட்டு உற்பத்தி மாற்றங்களுக்கான பங்களிப்பு(%) | | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கு (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2004(அ) | 2005(ஆ) | 2004(அ) | 2005(ஆ) | 2004(அ) | 2005(ஆ) |
| **வேளாண்மை** | **- 0.3** | **1.5** | **- 1.2** | **4.4** | **17.9** | **17.2** |
| **1. வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றொழில்** | **- 0.3** | **1.5** | **- 1.2** | **4.4** | **17.9** | **17.2** |
| 1.1 வேளாண்மை | - 0.9 | 8.8 | - 2.3 | 20.2 | 13.9 | 14.2 |
| தேயிலை | 1.5 | 2.5 | 0.4 | 0.5 | 1.3 | 1.2 |
| இறப்பர் | 3.2 | 10.8 | 0.2 | 0.6 | 0.3 | 0.4 |
| தெங்கு | 0.1 | - 2.2 | 0.0 | - 0.5 | 1.2 | 1.1 |
| நெல் | - 15.1 | 24.4 | - 8.8 | 10.4 | 2.6 | 3.0 |
| ஏனையவை | 3.7 | 6.5 | 5.9 | 9.2 | 8.5 | 8.5 |
| 1.2 காட்டுத்தொழில் | 1.3 | 1.7 | 0.4 | 0.5 | 1.7 | 1.7 |
| 1.3 கடற்றொழில் | 1.6 | - 42.2 | 0.7 | - 16.3 | 2.3 | 1.3 |
| **கைத்தொழில்** | **5.2** | **8.3** | **25.4** | **36.3** | **26.4** | **27.0** |
| **2. சுரங்கத் தொழிலும் கல்லுடைத்தலும்** | **7.9** | **14.1** | **2.5** | **4.0** | **1.7** | **1.9** |
| **3. தயாரிப்புத் தொழில்** | **5.1** | **6.0** | **15.3** | **16.3** | **16.3** | **16.3** |
| 3.1 தேயிலை, இறப்பர், தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் பதனிடல் | 1.3 | 2.7 | 0.4 | 0.8 | 1.7 | 1.7 |
| 3.2 தொழிற்சாலைக் கைத்தொழில் | 6.1 | 6.1 | 14.9 | 13.6 | 13.4 | 13.4 |
| 3.3 சிறு கைத்தொழில் | 0.0 | 9.8 | 0.0 | 1.9 | 1.2 | 1.2 |
| **4. மின்வலு, நீர்** | **- 2.5** | **23.3** | **- 0.7** | **5.6** | **1.5** | **1.7** |
| 4.1. மின்வலு | - 3.6 | 26.3 | - 0.9 | 5.5 | 1.3 | 1.5 |
| 4.2. நீர் | 5.2 | 3.8 | 0.2 | 0.1 | 0.2 | 0.2 |
| **5. கட்டடவாக்கம்** | **6.6** | **8.9** | **8.3** | **10.3** | **7.0** | **7.2** |
| **பணிகள்** | **7.6** | **6.4** | **75.8** | **59.3** | **55.6** | **55.8** |
| **6. மொத்த சில்லறை வர்த்தகம், சுற்றுலாவிடுதி,உணவகங்களும்** | **6.1** | **2.6** | **24.7** | **9.5** | **22.3** | **21.6** |
| 6.1 இறக்குமதி வர்த்தகம் | 9.0 | 2.3 | 16.3 | 3.8 | 10.2 | 9.8 |
| 6.2 ஏற்றுமதி வர்த்தகம் | 7.7 | 6.9 | 3.4 | 2.8 | 2.5 | 2.5 |
| 6.3 உள்நாட்டு வர்த்தகம் | 2.0 | 4.2 | 3.4 | 6.3 | 9.0 | 8.8 |
| 6.4 சுற்றுலாவிடுதி, உணவகங்கள் | 13.1 | - 29.0 | 1.6 | - 3.4 | 0.7 | 0.5 |
| **7. போக்குவரத்து,களஞ்சியப்படுத்தல்,தொடர்பூட்டல்** | **13.7** | **12.7** | **33.9** | **30.8** | **14.6** | **15.5** |
| 7.1 போக்குவரத்து | 4.2 | 3.3 | 6.3 | 4.5 | 8.1 | 7.9 |
| 7.2 சரக்குகையாளல் களஞ்சியப்படுத்தல், பண்டகசாலை | 12.8 | 9.8 | 2.1 | 1.6 | 0.9 | 1.0 |
| 7.3 தபால், தொலைத் தொடர்பூட்டல் | 31.4 | 27.0 | 25.5 | 24.7 | 5.5 | 6.6 |
| **8. நிதியியல்பணிகள், உண்மைச்சொத்து, வர்த்தகப் பணிகள்** | **5.6** | **6.5** | **12.0** | **12.7** | **11.7** | **11.7** |
| 8.1 நிதியியல் பணிகள் | 6.6 | 7.5 | 11.2 | 11.6 | 9.3 | 9.5 |
| 8.2 உண்மைச்சொத்து, வாடகை மற்றும் வர்த்தகப்பணிகள் | 1.7 | 2.8 | 0.8 | 1.1 | 2.4 | 2.3 |
| **9. பொது நிருவாகம், ஏனைய அரச பணிகளும் பாதுகாப்பும், ஏனைய சமூகங்கள், சமூக தனியாளப் பணிகள்** | **3.9** | **5.4** | **5.1** | **6.4** | **7.1** | **7.0** |
| 9.1 பொதுநிருவாகம்,ஏனையஅரச பணிகளும் பாதுகாப்பும் | 2.0 | 5.1 | 1.7 | 3.7 | 4.4 | 4.3 |
| 9.2 ஏனையசமூகங்கள், சமூக தனியாள் பணிகள் | 7.1 | 6.0 | 3.4 | 2.6 | 2.7 | 2.7 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **5.4** | **6.0** | **100.0** | **100.0** | **100.0** | **100.0** |
| **வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருவாய்** | 19.3 | 46.2 | | | | |
| **மொத்த தேசிய உற்பத்தி** | **5.3** | **5.5** | | | | |

(அ) திருத்தியமைக்கப்பட்டது　　　　மூலம்: இலங்கை மத்திய வங்கி
(ஆ) தற்காலிகமானவை.

**பணவீக்கம் 2004 இல் பதிவு செய்யப்பட்ட 9.3 சதவீதத்தை விட உயர்வாக 9.9 சதவீதமளவில் காணப்பட்டது.** இவ்அதிகரிப்பு, அதிகரித்துச் செல்லும் எண்ணெய் விலைகள் உள்ளடங்கலான உயர் உள்ளீட்டு விலைகளாலும், உயர் கொடுகடன் வளர்ச்சியால் உந்தப்பட்ட விலைகள் மீதான கேள்வித் தாக்கத்தாலும் மற்றும் அரசதுறைக் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பாலும் ஏற்பட்டது. 2004 இற்கு முரணாக, இவ்வாண்டில் இலங்கை ரூபா சராசரியாக 0.7 சதவீதத்தால் பெறுமானத்தில் உயர்வடைந்து, சார்புரீதியில் தொடர்ந்து உறுதியாக விளங்கியதுடன் உள்நாட்டு விலைகள் மீது அழுத்தம் எதையும் ஏற்படுத்தவில்லை.

- **2005 இற்கான தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ.120, 282 ஆக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இது முன்னைய ஆண்டை விட 15.4 சதவீத அதிகரிப்பாகும்.** ஐ.அ.டொலர் நியதிகளில் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி 2004 இன் ஐ.அ.டொலர்கள் 1,030 இலிருந்து ஐ.அ.டொலர்கள் 1,197 இற்கு 16.1 சதவீதத்தால் அதிகரித்தது.
- **2005 இல் நுகர்வு மற்றும் முதலீடு உள்ளடங்கலாக, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நுகர்வுகள் இரண்டிலிருந்தும் எழுகின்ற கேள்வி மொ.உ. உற்பத்தியின் வளர்ச்சிக்குப் பங்களித்தது.** 2005 இன் சகல நான்கு காலாண்டுகளிலும்

பொருட்களுக்கான ஏற்றுமதி வளர்ச்சி உண்மை நியதிகளில் 6 சதவீதத்துக்கும் கூடுதலாக அதிகரித்திருக்கையில், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளுக்கான உள்நாட்டுக் கேள்வியும், வளர்ச்சியடைந்த போதிலும் 2002 இல் மேற்கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த மன நிறைவு காணப்பட்ட முன்னைய இரு ஆண்டுகளிலும் பார்க்க மிக மெதுவான போக்கிலேயே காணப்பட்டது. முன்னைய இரு ஆண்டுகளுக்கு மாறாக, உண்மை நியதிகளான உள்நாட்டு உற்பத்தி இறக்குமதிகளினை விட விரைவான வீதத்தில் வளர்ச்சியடைந்து கேள்வியிலான வளர்ச்சியினை பூர்த்தி செய்தது.

- **2005 இல் நுகர்விலேற்பட்ட வளர்ச்சி மிதமாக்கப்பட்டது.** உயர்ந்த சம்பளப் பட்டியல்களை ஈடு செய்வதற்காகவும் சுனாமியைத் தொடர்ந்து மனித நேயத் தேவைகளுக்காகவும் அரச செலவினம் உயர்வடைந்தமையால் தனியார் நுகர்வினை விட அரச நுகர்வு உயர்ந்த வீதத்தில் காணப்பட்டது.

- **2003 இன் பின்னரைப் பகுதியிலிருந்து குறிப்பிடத் தக்களவுக்கு மேம்பாடடைந்த முதலீட்டுக்கான சூழல் 2005 இலும் தொடர்ந்தது.** சுனாமித் தாக்கத்தினை உடனடுத்து பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சார்ந்த மக்களின் வாழ்க்கையை வழமைக்குக் கொண்டு வருவதற்காக தனியார் துறை, அரச துறை இரண்டினதும் முதலீட்டில் ஒரு பகுதி அவசரமாகத் தேவைப்பாடாக உள்ள புனரமைப்பு மற்றும் புனர் நிர்மாணப் பணிகளுக்கு நெறிப்படுத்தப்பட்டது. அதே வேளை, பாதிக்கப்படாத பிரதேசங்களிலான முதலீட்டு நடவடிக்கைகள் தொடர்ந்தன.

- **மொ.உ. உற்பத்தியின் விகிதமாக மொத்த முதலீடுகள் 25 சதவீதத்திலிருந்து 26.5 சதவீதத் திற்கு உயர்வடைந்தமைக்கு அரச முதலீடுகளே முழுக் காரணமாகும்.** அரச முதுலீடுகள் 119.4 சதவீதத்தினால் உயர்வடைந்தமையின் மூலம் மொ.உ. உற்பத்திக்கான இதன் விகிதம் பெரும்பாலும் இருமடங்காக 4.2 சதவீதமாகியது. இவ்வதிகரிப்பு பொதுக்கூட்டுத்தானங்கள் மற்றும் தனியார் முதலீடுகளிலான விகிதங்களின் சிறியளவிலான வீழ்ச்சியினைவிட கூடுதலாக ஈடுசெய்தது.

- **வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு கேள்விகள் இரண்டினதும் வளர்ச்சியிலிருந்து பெற்ற நன்மைகளினால் தனிநபர் முதலீடு தொடர்ந்த போதும் அளவு முன்னைய இரு ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தது.** முன்னைய காலப்பகுதியில் தனியார் துறையின் முதலீடுகள் யுத்த நிறுத்தத்தினைத் தொடர்ந்து தொலைத் தொடர்பூட்டல், போக்குவரத்து மற்றும் தொழிற் சாலைக் கைத்தொழில்கள் போன்ற துறைகளில் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வடைந்ததுடன் பல் நூலிழை ஒழுங்கின் அகற்றலுக்கும் அவை ஆயத்தமாக இருந்தமையானது முதலீட்டு வளர்ச்சியின் மீது உயர்ந்த தள தாக்க மொன்றினையும் ஏற்படுத்தியது.

- **வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்துக்காகச் சீராக்கம் செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி என வரை விலக்கணம் செய்யப்படும் மொத்தத் தேசிய உற்பத்தி, உண்மை நியதிகளில் 5.5 சதவீதத்தால் மொ.உ.உ.வை விட குறைந்த வீதத்தில் வளர்ச்சியடைந்ததுடன் முன்னைய ஆண்டினை விட சிறிதளவு உயர்வாக இருந்தது.** வெளிநாட்டி லிருந்தான தேசிய காரணி வருமானம் தொடர்ந்தும் எதிர்க்கணியமாக விளங்கி 2005 இல் 46 சதவீதத்தால் தேய்வடைந்தது. படுகடன் சட்ட இசைவுத் தாமதத்தின் நன்மை காரணமாக வட்டிக் கொடுப்பனனவுகளின் வெளிப்பாய்ச்சல் குறைவடைந்த போதிலும், ரூபாவின் பெறுமதி உயர்வு மற்றும் தொடர்பான பெறுமதி இழப்புக்கள் என்பவற்றின் விளைவாக உட்பாய்ச்சல்கள் சார்புரீதியில் கூடியளவு வீழ்ச்சியடைந்தமையின் மூலம் மொத்த தேசிய உற்பத்தியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியினது உயர்ந்த வளர்ச்சியின் சாதகமான தாக்கத்தைத் தணித்துவிட்டது.

- **உள்நாட்டு மற்றும் தேசிய சேமிப்புக்கள் உயர்வடைந்தன.** கம்பனித் துறையின் உயர் இலாபத் தன்மை காரணமாக தனியார் உள்நாட்டுச் சேமிப்புக்கள் உயர்வடைந்த வேளையில் அரசின் சேமிப்பின்மை வீழ்ச்சியடைந்தன. அதேவேளை தனியார் மாற்றல் உள்பாய்ச்சல்களில் ஏற்பட்ட அதிகரிப்பு வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்திலேற்பட்ட வீழ்ச்சியை விஞ்சிக் காணப்பட்டதன் மூலம் தேசிய சேமிப்புக்களின் வளர்ச்சிக்கு உதவியது.

- **2004 திசெம்பர் 26 இல் நாட்டைத் தாக்கிய சுனாமி, பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் வளர்ச்சி வாய்ப்புக்களில் கணிசமானளவு தாக்கத்தைக் கொண்டிருந்தது.** இது, நாட்டின் வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் தென்மேற்கு கரையோரங்களின் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பகுதியையும்

குடித்தொகையின் 2 இலிருந்து 3 சதவீதமான அளவையும் கொண்டிருந்தது. சுனாமியால் அழிக்கப்பட்ட உயிர் மற்றும் ஜீவனோபாயத்தை ஒருபோதும் திரும்ப ஏற்படுத்த முடியாத போதிலும் சுனாமியால் ஏற்படுத்தப்பட்ட சேதம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.5 சதவீதமளவாக மதிப்பிடப்பட்டுள்ளது. எதிர்காலத்துக்கான பொருளாதாரத் தாக்கத்தின் முழுப்பலம் மீன்பிடி மற்றும் சுற்றுலாத் துறைகளில் உணரப்படுகையில் மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை மற்றும் போக்குவரத்து அதே போன்றே சிறு கைத்தொழில்களும் சார்புரீதியில் குறைந்த அளவில் பாதிப்புக்குள்ளாகின. மீன் உற்பத்தி 2006 இன் இறுதியளவில் சுனாமிக்கு முன்பான மட்டங்களுக்கு மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. மீட்சிபெறும் செயல்முறையில் சுற்றுலாப் பயணிகளின் உணர்வு மற்றும் மனப்பான்மையும் மிகமுக்கியமானவையாக இருந்தமையால் சுற்றுலாக் கைத்தொழிலிலான மீட்சி குறைந்த அளவிலேயே எதிர்வு கூறத்தக்கதாக விளங்குகிறது. தற்காலிக மற்றும் நிரந்தரமான உறைவிடங்களின் கட்டுமானம், போக்குவரத்துப் பாதைகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை பழைய நிலைக்குக் கொண்டுவரும் நோக்குடன் 2005 இல் மீள்நிர்மாணச் செயற்பாடுகள் இடம்பெற்ற போதிலும், முழுஅளவில் மீட்சி பெறுவதற்கும் முன்நோக்கிச் செல்வதற்கும் வரும் ஆண்டுகளில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பல வேலைகள் செய்யப்பட வேண்டி இருககின்றன. பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நிரந்தரமான வீட்டு அலகுகளை மீள்நிர்மாணிப்பதற்கும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் பல செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் பல செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் பல செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்துவதற்கு ஆயத்த நிலையில் இருக்கின்றன.

## 2.2 துறைவாரியான கொள்கைகளும் நிறுவன ரீதியான ஆதரவும்

- **2005 இல் தேசிய வெளியீட்டில் ஏற்பட்ட வளர்ச்சியானது பல பாதகமான அபிவிருத்திகள் மற்றும் சவால்களை எதிர்கொள்ளத்தக்க விதத்தில் பொருளாதாரத்தின் இயலாற்றலுடன், வளர்ச்சிக்கு ஆதரவளித்த சாதகமான உலகளாவிய மற்றும் உள்நாட்டுக் காரணிகள் இணைந்தமையின் விளைவாக ஏற்பட்ட தொன்றாகும்.** இப்பின்னணியில் இப்புதிய பொருளாதார பொதியின் கீழ் அரசின் துறைவாரியான கொள்கைகள் அதே போன்று அரசு மற்றும் தனியார்துறையில் வழங்கப்பட்ட நிறுவனரீதியிலான ஆதரவும், சாதகமான சூழலொன்றை ஏற்படுத்துவதுடன் இச் சூழ்நிலையில் பொருளாதார நடவடிக்கையும் வளம் பெற்றது. வேளாண்மை மற்றும் கைத்தொழில்துறைகளுக்கான நிறுவன ரீதியான ஆதரவு இப்பிரிவில் விவரிக்கப்படும் அதேவேளையில் அவற்றின் தாக்கமும் அவை தொடர்பான பிரச்சினைகளும் இதைத் தொடர்ந்துவரும் பிரிவுகளில் ஆராயப்படும்.

### வேளாண்மைக் கொள்கையும் நிறுவன ரீதியான ஆதரவும்

- **கடந்த ஐந்து தசாப்தங்களாக அடுத்தடுத்து வந்த அரசுகள் வேளாண்மையை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகள் மேற்கொண்டிருந்தன.** சுதந்திரம் அடைந்ததிலிருந்து வேளாண்மைத் துறையின் அபிவிருத்திக்கு, உதவும் விதத்தில் கணிசமான அரச முதலீடுகள் மேற்கொள்ளப் பட்டன. முதலீடுகள் விசேடமாக நீர்ப்பாசன உட்கட்டமைப்புக்கு, கொள்கை அபிவிருத்திகள், ஆராய்ச்சி விரிவாக்கற் பணிகள், சந்தைப்படுத்தல் உட்கட்டமைப்பினை வழங்குதல், உதவுதொகைகளின் ஏற்பாடுகள் மற்றும் ஏனைய துணைத்துறைகளின் குறித்துரைக்கப்பட்ட விசேட கொள்கைகள் என்பன மூலமாக அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக வேளாண்மை நிறுவனங்களின் வலையமைப்பை ஏற்படுத்துவதற்கும் கணிசமான அரச முதலீடு வழங்கப்பட்டது. இன்னமும், கேள்வியால் உந்தப்பட்ட ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் பணிகளினூடாக உயர் தொழில்நுட்பத்தை மேற்கொள்வதற்காக மிகக் கவனமானதும் காத்திரமானதுமான ஆதரவினை வழங்குவதற்கு வேளாண்மைத்துறை இந்த வலையமைப்பிற்குள்ளேயே சிறந்த இணைப்பினை ஏற்படுத்த வேண்டும்.
- **2005 நவெம்பரில் பதவிக்கு வந்த புதிய அரசு வேளாண்மைத் துறையை அபிவிருத்தி செய்வதற்காக அனைத்தையுமுள்ளடக்கிய கொள்கைப் பொதியொன்றை முன்மொழிந்தது.** வேளாண்மை வளர்ச்சியானது போதியளவு பாசன நீர், பயிர்ச் செய்கைக்கான காணி, நல்ல தரமுள்ள விதைகள், உதவு தொகையளிக்கப்பட்ட விலையிலான வளமாக்கி, வேளாண்மை - தொழில்நுட்பங்கள், நிதியியல் மூலவளங்கள், வேளாண்மை மதியுரைப் பணிகள், வேளாண்மை உற்பத்திகளைக் கொள்வனவு செய்வதற்கும்

களஞ்சியப்படுத்துவதற்குமான உட்கட்டமைப்பு, முதலீட்டுக்கான இறை ஊக்குவிப்புக்கள், சிறு உடமையாளர்களுக்கான ஊக்குவிப்புக்கள் மற்றும் உதவு தொகைகள் உள்ளடங்கலாக தேயிலை, இறப்பர், தெங்கு, பாற்பண்ணை மற்றும் மீன்பிடிக்கான குறித்துரைக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் ஊக்குவிப்புக்கள் என்பவற்றை வழங்குவதனூடாக அடையப்பட வேண்டும். அரசு வேளாண்மையை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் பலவற்றை 2006 இன் வரவு செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தியது. விசேடமாக இவை தற்போது நடைமுறையிலிருக்கும் சகல வேளாண்மையாளர்களுக்கும் ரூ.550 இல் கிடைக்கத் தக்கதாகவுள்ள 50 கி.கிறாம் யூரியா பொதிக்கு மேலதிகமாக நெல் வேளாண்மையாளர்களுக்கு 50 கிலோகிராம் வளமாக்கி பொதியினை ரூ.350 வீதம் வழங்குவதற்கான உதவுதொகையை வழங்குவது, 2005/06 பெரும்போகத்திலிருந்து நெல்லின் கொள்வனவு விலையை கிலோகிறாம் ஒன்றுக்கு ரூ.16.50–ரூ.17.50 இற்கு அதிகரித்தல்; வேளாண்மைத்துறைக்கு வழங்கப்படும் கொடுகடன் வசதிகளை மொத்தக் கடன்வழங்கலில் 10 சதவீதத்துக்கு அதிகரிப்பதற்கு வங்கிகள் மீது நிபந்தனைகளை நிர்ணயித்தல், வேளாண்மை முதல் உற்பத்தியை பதப்படுத்தலிருந்து கிடைக்கும் இலாபங்களிற்கு வரியிலிருந்து விலக்களித்தல்; பழங்கள், மரக்கறி, அரிசி, தண்டுடனான பூக்கள், இலைத் தொகுதிச் செடிகள் மற்றும் சேதன வேளாண்மை உற்பத்தி போன்ற வேளாண்மை உற்பத்திகளின் ஏற்றுமதியிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் மீதான 15 சதவீத வரியை நீக்கல்; சிறு உடமையாளர்கள் மீதான விசேட கவனத்துடன் பெருந்தோட்டத் துறையின் அபிவிருத்திக்காக ரூ.10 பில்லியன் கொண்ட சுழல் நிதியம் ஒன்றை நிறுவுதல்; தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கின் மீள்நடுகை மற்றும் புதிய நடுகைக்கான உதவுதொகைகளை 25 சதவீதத்தால் அதிகரித்தல்; தேயிலை, இறப்பர் மற்றும் தெங்கு மீதான பொருளாதாரப் பணிக்கட்டணத்தை 1 சதவீதத்திலிருந்து 0.5 சதவீதத்துக்குக் குறைத்தல்; பாலிற்கான அரசின் கொள்விலையை அதிகரித்தல்; பாற்பண்ணை வேளாண்மையாளர்களுக்கு உதவுவதற்காக விசேட கொடுகடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் பால் பதனிடும் பொறிக்கு இறக்குமதித் தீர்வை மற்றும் பெறுமதிசேர் வரியிலிருந்து விலக்களித்தல் என்பவற்றை உள்ளடக்கும்.

- **தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் கரும்புத் துறைகளை உள்ளடக்கும் வகையில் பெருந்தோட்டத் துறையின் அபிவிருத்திக்காக பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சால் தேசிய திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.** இந்நீண்ட கால அபிவிருத்தித் திட்டம் உற்பத்தித்திறன் மற்றும் தரத்தை மேம்படுத்தல் மற்றும் உற்பத்திச் செலவைக் குறைத்தலூடாக போட்டித்தன்மையை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பெறுமதி கூட்டலை அதிகரிப்பதற்கான உத்திகள்; உலகளாவிய வாய்ப்புக்களைப் பயன்படுத்தல்; தொழிற்சாலையை நவீனமாக்கல் மற்றும் சுற்றாடலுக்கான சேதத்தை மிகவும் குறைவாக ஏற்படுத்தும் மீள்நடுகை மற்றும் புதிய நடுகை நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன இத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- **இலங்கைத் தேயிலைச் சபை தேயிலை உற்பத்தி, விளைச்சல் மற்றும் தரத்தை அதிகரிப்பதற்கு பல வழிமுறைகளை மேற்கொண்டது.** புதிய தேயிலைத் தொழிற்சாலைகளை நிர்மாணிப்பதற்கு முன்கூட்டியே அனுமதி பெறுவதை இலங்கைத் தேயிலைச் சபை கட்டாயமாக்கியதுடன் பேணப்பட வேண்டிய ஆகக்குறைந்த நியமங்கள் மீதான அறிவுறுத்தல்களையும் வழங்கியது. இத்துடன் 'இலங்கைத் தேயிலை தரச் சான்றிதழ்' திட்டமென அழைக்கப்படும் பச்சை இலை தர நியமங்களையும் தரமான தேயிலையின் ஏற்றுமதியை மேம்படுத்துவதற்காக தேயிலை ஏற்றுமதியிலான ஆகக்குறைந்த தர நிர்ணயத்தையும் இலங்கைத் தேயிலைச்சபை அறிமுகப்படுத்தியது. 2006 யூனிலிருந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு தேயிலையை ஏற்றுமதி செய்வதற்கு தயாரிப்புச் செயல்முறையின் ஒவ்வொரு கட்டத்திலும் சிறந்த சுகாதாரம் மற்றும் பதனிடல் நியமங்களின் பேணலை உறுதிப்படுத்துவதற்காக தீங்கு பயப்பனவற்றைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் அபாயத்தைக் கட்டுப்படுத்துவதற்கான புள்ளியை கொண்டிருக்கும் தராதரப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு தேயிலை தொழிற்சாலைகள் கேட்டுக் கொள்ளப்பட்டன. தற்போது 25 தொழிற்சாலைகள் மட்டுமே இத் தராதரப் பத்திரத்தைப் பெற்றுள்ளன. இந்நோக்கத்துக்காக, தொழிற்சாலை நவீனமயமாக்கல் மற்றும் புத்தாக்கத்துக்காக பெருந்தோட்ட புத்தாக்கச் செயற்றிட்டத்தின் கீழ்

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு ரூ.250 மில்லியனை ஒதுக்கியது. இச்சபை தேயிலை இறக்குமதிகளை தீவிரமாகக் கண்காணிப்பதற்கும் நடவடிக்கைககளை எடுத்துள்ளது.

- **இயற்கை இறப்பருக்கான அதிகரித்துச் செல்லும் கேள்வியால் நன்மை அடைவதற்காக அரசு இறப்பர் பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்கான பல நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டது.** பால் எடுக்கும் தீவிரத்தை அதிகரிப்பதற்காக மழைத் தடுப்புக்களுக்கு உதவு தொகை வழங்கப்பட்டதுடன் “துருசவிய நிதியம்” இலிருந்தான நிதியுதவியின் கீழ் முதிர்ச்சியடைந்த பெருந்தோட்டங்களில் வளமாக்கிப் பிரயோகம் மேம்படுத்தப்பட்டது. வடமேல் மாகாணத்தில் இறப்பர் பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்வதற்காக பொல்காவலையில் இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் துணை நிலையத்தை நிறுவுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மொனறாகலை மற்றும் பதுளை மாவட்டங்களிலும் இறப்பர் பெருந் தோட்டத்தை விரிவாக்குவதற்கான செயற் திட்டத்தையும் அரசு ஆரம்பித்தது.

- **தெங்குத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.** இவை தென்மாகாணத்தில் மித்தெனிய, தங்காலை மற்றும் மாத்தறை ஆகிய இடங்களை உள்ளடக்கும். இரண்டாவது தெங்கு முக்கோணப் பிரதேசத்தை உருவாக்கல், தேங்காயத்துருவலுக்கான ஏற்றுமதி வரியை 2005 ஏப்பிறல் 1 இலிருந்து மெற்றிக் தொன் ஒன்றுக்கு ரூ.1,000 இலிருந்து மெற்றிக் தொன் ஒன்றுக்கு ரூ.2,000 இற்கு அதிகரித்தல் மற்றும் தெங்குத் தொழிற்சாலையின் மீள்எழுச்சிக்காக "கப்புறுக" நிதியத்தை நிறுவுதல் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன. தெங்கு நிலத்தின் அளவுக்கதிகமான துண்டாடலைத் தடுப்பதற்குத் தேவையான சட்டவாக்கமும் அறிமுகப்படுத்தப் பட்டது.

வரைபடம் 2.1
அரிசி: நிரம்பலும் கேள்வியும்




- **ஏற்றுமதி வேளாண்மைத்துறை உரிய நிறுவனங் களிடமிருந்து தொடர்ச்சியான உதவியைப் பெற்றன.** ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களம் அதன் கொத்தணி முறையின் கீழ், உள்ளீடுகளின் பகிர்ந்தளிப்பு, அறுவடைக்குப் பின்னரான கையாளல் வசதிகள் மற்றும் கருவியை வழங்கல், தொழில்நுட்ப மதியுரை, சந்தைப்படுத்தல் பிணைப்புக்களை நிறுவுதல் மற்றும் நிதியியல் வசதிகளை வழங்கல் என்பவற்றினூடாக இத்துறைக்கு உதவி செய்தன. தேர்ச்சியடைந்த கறுவாப்பட்டை உரிப்போரைக் கவனத்தில் கொண்டு ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களம் பட்டையுரிக்கும் வழிமுறைகள் மீது பயிற்சிகளை வழங்குவதற்கு கறுவா பதனிடும் பயிற்சி நிலைய மொன்றை கொஸ்கொடவில் 2005இல் நிறுவியது. வேளாண்மைத் திணைக்களம் பயிர்களின் சேதனப் பயிர்ச்செய்கையையும் சேதனப் பசளையின் உற்பத்திக்காகவும் தொழில்நுட்பம் மற்றும் பயிற்சி மற்றும் நிதியியல் உதவி என்பவற்றை வேளாண்மை யாளர்களிடையே மேம்படுத்தியது.

- **நெல் விற்பனையை அதிகரிப்பதற்கு பல ஊக்குவிப்புக்களை அறிமுகப்படுத்திய அரசு விலைகளை உறுதியாக வைத்திருப்பதற்கும், பல வழிமுறைகளை மேற்கொண்டது.** 2004/05 பெரும்போகத்தில் அரிசி ஆலையாளர்கள் வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட கடன்களின் மீளச்செலுத்தும் காலப்பகுதி 2006 மார்ச்சு வரை நீடிக்கப்பட்டது. விலைகளிலான வீழ்ச்சியுடன் இணைந்த நெல்லின் சாதனைமிகு உற்பத்தி 2005 இல் நெல் கொள்வனவுத் திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கு அரசை இட்டுச்சென்றது. கூட்டுறவுச் சங்கங்கள், கமத்தொழில் பணிகள் நிலையங்கள் மற்றும் வேளாண்மையாளர் அமைப்புக்களுடாக கிலோகிறாம் ஒன்றுக்கு ரூ.15.50 இலிருந்து (நாட்டரிசி) கிலோகிறாம் ஒன்றுகக்கு ரூ.16.50 (சம்பா மற்றும் பச்சை அரிசி) வீச்சினுள் அமைந்த பண்ணை மட்ட விலையில் கொள்வனவு செய்யும் பெரும்போகம் மற்றும் சிறுபோகத்தில் முறையே ரூ.1,325 மில்லியன் மற்றும் ரூ.1,251 மில்லியன் செலவில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும். இதன்படி, இத்திட்டத்தின் கீழ் பெரும்போகத்தில் கிட்டத்தட்ட 83,000 மெற்றிக் தொன் நெல்லும் (பெரும்போக அறுவடையின் 4 சதவீதம்) சிறுபோகத்தில் கிட்டத்தட்ட 52,000 மெற்றிக் தொன் நெல்லும் (சிறுபோக

அறுவடையின் 4 சதவீதம்) கொள்வனவு செய்யப்பட்டது. அனைத்தையும் உள்ளடக்கிய புதிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் நெல் கொள்வனவு செய்யும் கடன்களின் எல்லை பெரும்போகத்தில் கொள்வனவாளர் ஒருவருக்கு ரூபா 25 மில்லியனிலிருந்து ரூபா 50 மில்லியனுக்கும் சிறுபோகத்தில் கீழ்மட்ட விலைகளில் நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக கொள்வனவாளர் ஒருவருக்கு மேலும் ரூபா 75 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது.

- **அரிசி மற்றும் கரும்பு ஆராய்ச்சியில் சிறிதளவு முன்னேற்றம் ஏற்பட்டது.** அரிசி ஆராய்ச்சி நிலையம் பல குறுகிய காலப்பகுதியைக் கொண்ட புதிய அரிசி வகைகளை அபிவிருத்தி செய்து வரட்சிக்குத் தாக்குப் பிடிக்கத்தக்கதும் வெள்ளத்தால் பாதிக்கப்படாததும் 20 சதவீதம் கூடியளவு உள்ளார்ந்த வள விளைச்சலைக் கொண்டதுமான வகைகளை அறிமுகப்படுத்தியது. இத்துடன் விதை நெல் தேவையையும் கூலிச் செலவையும் கணிசமானளவு குறைக்கும் நெல் விதைகளுக்கான மேம்பாடடைந்த முறையொன்றை (பரசூட் முறை) அரிசி ஆராய்ச்சி நிலையம் அறிமுகப்படுத்தியது. உள்நாட்டு சீனிக் கைத்தொழிலை விரிவு படுத்துவதற்கு கரும்பு ஆராய்ச்சி நிலையம் அதன் ஆராய்ச்சிச் செயற்பாடுகள் மற்றும் விரிவாக்கப் பணிகளை தொடர்ந்தது. தெங்கு நிலையங்களின் இடையீட்டுப் பயிராக கரும்பைப் பயிரிடுவதற்கு சாத்தியமான கற்கைகள் நடாத்தப்பட்டன. விளைச்சலை 54 சதவீதத்தால் அதிகரிக்கக்கூடிய கரும்பின் உயர் விளைச்சல் வகையின் புதிய இனமொன்றை (எஸ்.எல்.94-3325) கரும்பு ஆராய்ச்சி நிலையம் அபிவிருத்தி செய்தது.

- **பாற்பண்ணைக் கைத்தொழில் அண்மைய ஆண்டுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைத் தொடருடன் மீள்எழுச்சி ஒன்றுக்கு இலக்கிடப் பட்டுள்ளது.** அரசு வேளாண்மையாளர்களுக்கு பயிற்சியை வழங்குவதற்காக பாற்பண்ணையாளர்களுக்கு உரிமையை அளிக்கும் செயற்றிட்டத்தை அறிமுகப் படுத்தியதுடன் சந்தைப்படுத்தலை மேம்படுத்தவும் விலங்குகளுக்கான விலங்கினைச் சிகிச்சையை நடாத்துவதற்கும் நடவடிக்கைகளை எடுத்தது. மேலும், ஒவ்வொரு கிராமத்திலும் ஆகக் குறைந்தது 20 பண்ணையாளர்களைக் கொண்ட 50 பாற்பண்ணைக் கிராமங்களை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பாற்பண்ணைத் தொழிலை ஊக்குவிப்பதற்கு அரசு இவ்வாண்டுக் காலப்பகுதியில் பாலின் கொள்வனவு விலையை இலீற்றர் ஒன்றிற்கு ரூ.18 இலிருந்து இலீற்றர் ஒன்றுக்கு ரூ.20 இற்கு அதிகரித்தது. உள்நாட்டு பால் உற்பத்தியை இருமடங்காக்கும் அரசின் 5 வருட அபிவிருத்தித் திட்டத்தை நனவாக்கும் விதத்தில் பால் பண்ணையை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக நல்லின இனப்பெருக்க விலங்குகளின் வழங்கலை விரிவாக்குவதற்கும், விலங்கு மருத்துவப் பணிகளை மேம்படுத்தவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

- **சுனாமியால் பாதிப்படைந்த மீன்பிடித்துறையை புத்துயிர் பெறச் செய்வதற்கான பல வழிமுறைகளை அரசு அறிமுகப்படுத்தியது.** கொடைநர்களின் உதவியுடன் அரசு படகுகளை பகிர்ந்தளித்ததுடன் பாதிப்படைந்த மீனவர்களுக்கான டீசல் உதவுதொகையையும் வழங்கியது. வரவு செலவுத் திட்டம் 2006. பல்நாள் படகு தயாரிப்புக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கும், கரைக்கப்பாலானதும் ஆழ்கடல் மீன்பிடியை மேம்படுத்துவதற்கு பலநாள் படகு தயாரிக்கும் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கும் அவ்வாறான படகுகளை மீனவர்கள் கொள்வனவு செய்வதற்கான இலகுவான கொடுப்பனவுத் திட்டங்களை வழங்குவதற்குமாக ரூபா 700 மில்லியனை ஒதுக்குவதன் மூலம் மீன்பிடி மேம்பாட்டு நிதியத்தை ஏற்படுத்துவதற்கு முன்மொழிந்தது. இவ்வாறான செயற்திட்டங்களினூடாக அலங்கார மீன் ஏற்றுமதிகளை மேம்படுத்துவதற்காக அரசும் ரூபா 50 மில்லியனை ஒதுக்கியது. இதேவேளை இறால் பண்ணைத் தொழிலை புத்துயிர் பெறச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் புத்தளம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் கூனி இறால் பண்ணைகளை மேம்படுத்துவதற்காக ரூபா 100 மில்லியன் ஒதுக்கப்பட்டது.

- **வனத்திணைக்களம் வெளிநாட்டுக் கொடைஞர்களின் உதவியுடன், குறிப்பாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் காடு வளர்ப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களை தொடர்ச்சியாக நடாத்தியது.** 2005 இன் காடு வளர்ப்புத்துறை முதன்மைத் திட்டத்துடன் இணைந்து செல்லும் வகையில், ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியிடப்பட்ட காட்டு மூலவளங்கள் முகாமைத் திட்டம் அமுல்படுத்தப்பட்டு நடைமுறையில் இருந்தது. சமுதாயத்தின் பங்கேற்புடன்

மரம் தறிக்கப்பட்ட பகுதிகளில் மீள்நடுகை, வீதியோரங்களில் மரங்களை நடல் மற்றும் கரையோரப்பகுதியில் மரங்களை நடல் போன்ற சில செயற்பாடுகள் மீள்காடாக்கலை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டன. திணைக்களம் கல்விக் கருத்தரங்குகள், செயலமர்வுகள், விரிவுரைகள், உயிரினங்களைப் பன்மைப்படுத்தல்; காடாக்கல்; சுற்றாடல் விஞ்ஞானம் மற்றும் சிங்கராஜ வனப் பாதுகாப்பு பற்றி பாடசாலை மாணவர்களுக்கும் ஏனையோருக்குமான வீடியோ படக்காட்சிகள், உள்ளிட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியது.

## கைத்தொழிற் கொள்கையும் நிறுவனரீதியான ஆதரவும்

- **2006 இன் வரவு செலவுத் திட்டத்தில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டவாறு அரசின் கைத்தொழிற் கொள்கையின் கருப்பொருள் யாதெனில் சமூகப் பொறுப்புடைய தனியார் துறை மற்றும் பலமான வசதிப்படுத்தக்கூடிய அரச துறை என்பனவற்றின் பங்கேற்புடன் அதிகரித்த முதலீடு மற்றும் நவீனப்படுத்தல் ஊடாக உலகளாவிய போட்டித் தன்மையுடையதும் சுற்றாடலுடன் இசைந்து செல்லக்கூடியதுமான கைத்தொழில் துறையைப் பாதுகாப்பதும் வசதிப்படுத்துவதுமாகும்.** கைத்தொழிற் கொள்கையானது உலகளாவிய சந்தைகளுக்குள் நுழையும் தன்மையினை விரிவாக்கம், முன்னேற்றங்கண்ட தொழில்நுட்பத்தை முன்னேற்றுதல், பிராந்திய கைத்தொழில் மயமாக்கல், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளை முன்னேற்றுதல், துணை உற்பத்திகளின் வழங்கிகளின் இணைப்புக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் உள்நாட்டு மூலவளங்களை அடிப்படையாகக் கொண்ட ஏறுமதிக் கைத்தொழில்களை ஊக்கப்படுத்தல் என்பவற்றை மேலும் வலியுறுத்துகின்றது. அரசின் வசதிப்படுத்தலானது சந்தை நுழைவை அதிகரித்தல், சட்ட மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தல் கட்டமைப்பை பலப்படுத்தல், கம்பனி ஆளுகையை மேம்படுத்தல், வெளிநாட்டுத் தொழில்நுட்பம் மறறும் வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கான வழிவகைகளை இலகுபடுத்தல், உறுதியான பேரண்டப் பொருளாதார கட்டமைப்பை வழங்கல் மற்றும் அறிவுசார் மற்றும் மனித மூலதனத்தில் முதலீடு செய்வதன் நன்மைகளைச் சரியான முறையில் பயன்படுத்தப்படுவதற்கு நிறுவனங்களை இயலச்செய்தல் என்பவற்றை இலக்காகக் கொண்டுள்ளது.

- **வெளிநாட்டுச் சந்தைக்கான நுழைவை அதிகரிப்பதில் கூடியளவு கவனம் செலுத்தப்பட்டது.** அரசு ஐக்கிய அமெரிக்காவிலும் முன்னுரிமையளிக்கப்பட்ட பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டத்தினூடாக ஐரோப்பிய சமூகத்திலும், சுதந்திர வர்த்தக உடன்படிக்கையூடாக பாகித்தானிலும், நடைமுறையிலிருக்கும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார கூட்டு உடன்படிக்கைக்கு விரிவாக்குவதன் மூலம் இந்தியாவிலும் "பிம்ஸ்ரெக்" மூலம் தெற்கு மற்றும் கிழக்காசிய நாடுகளிலும் மற்றும் "சவ்ரா" என அழைக்கப்படும் தென்னாசிய சுதந்திர வர்த்தகப் பிரதேச உடன்படிக்கை மூலம் சார்க் நாடுகளிலும் சந்தை நுழைவை அதிகரிப்பதற்கு கலந்தாலோசனைகளை மேற்கொண்டது.

- **அரசு முன்னேற்றமடைந்த தொழில்நுட்பத்தைப் பின்பற்றுவதற்காக வரவு செலவுத் திட்ட ஊக்குவிப்புக்களை வழங்கியதுடன் இலக்கிடப்பட்ட ஊக்குவிப்புக்களுடன் பிராந்திய கைத்தொழில் மயமாக்கத்தை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளையும் மேற்கொண்டது.** தொழில்நுட்ப ரீதியில் முன்னேற்றமடைந்த பொறிகளின் தீர்வையற்ற இறக்குமதிகளை அனுமதிக்கும் இறை ஊக்குவிப்புக்கள் தற்போதும் நடைமுறையில் உள்ளன. முன்னேற்றங்கண்ட தொழில்நுட்பங்களை பின்பற்றுவதற்கான ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கு இனங்காணப்பட்ட கைத் தொழில்களாக அச்சிடல், நலக்கவனிப்பு, இரத்தினக்கல் வெட்டலும் பட்டைதீட்டலும், பொதி செய்தல் மற்றும் அரிசி குற்றல் என்பன விளங்கின. இத் திட்டத்தின் கீழ் தொடர்பான அமைச்சுக்களின் மேற்பார்வைக்கு உட்படுத்தப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட பொறி மற்றும் கருவிகள் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்படுவதுடன், வரி செலுத்தற்குரிய வருமானத்தை மதிப்பிடுவதற்கான பெறுமானத்தேய்வப் படி 33 1/3 சதவீதத்துக்கு அதிகரிக்கப்படும். பிராந்திய கைத்தொழில் மயமாக்கத்தின் முதற்கட்டமாக கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்களுக்கு வெளியே 300 தொழிற்சாலைகளை ஒவ்வொரு பிரதேசச் செயலாளர் பிரிவிலும் ஆகக் குறைந்தது ஒரு தொழிற்சாலையையாவது ஏற்படுத்துவதாகும். ஊக்குவிப்புக்களைப் பெறுவதற்கு இத் தொழிற்சாலைகள் 2006 ஏப்பிறலிலிருந்து இரண்டு வருடங்களினுள் ஆகக் குறைந்த மூலதனமான ரூ.30 மில்லியனுடன் ஆகக் குறைந்தது 200 தொழிலாளர்களை தொழிலுக்கமர்த்த வேண்டும்.

ஊக்குவிப்புக்கள் 5-10 வருடங்களுக்கு வருமான வரியிலிருந்தான விலக்களிப்பையும் புதிய பொறி மற்றும் கருவிகளின் இறக்குமதிகள் மீதான எந்தவொரு தீர்வை மற்றும் பெறுமதிசேர் வரியிலிருந்தான விலக்களிப்பையும் உள்ளடக்கு கின்றது. தொழிற்சாலைகள் கொழும்பு மற்றும் கம்பகாவுக்கு வெளியே மீள அமைக்கும் செலவை வரி செலுத்தற்குரிய வருமானத்திலிருந்து கழிக்க முடியும். வரியிலிருந்து அவ்வாறான வட்டி வருமானங்களுக்கு விலக்களிப்பதன் மூலம் அத் தொழிற்சாலைகளுக்கு நிதியிடலை வழங்கு வதற்காக கடன் வழங்கும் நிறுவனங்கள் ஊக்குவிக்கப்பட்டன.

- **நடைமுறையிலிருக்கும் முயற்சிகளை மேலும் பலப்படுத்துவதற்காக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளை அபிவிருத்தி செய்வதற்கான அனைத்தையுமுள்ளடக்கிய பொதியொன்று 2006 இன் வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப் பட்டுள்ளது.** இது, மூலப்பொருட்கள் மற்றும் பொறிகளின் இறக்குமதிகள் மீதான தீர்வையை இல்லாதொழிப்பதை நோக்காகக் கொண்டு தீர்வை அமைப்பை ஒழுங்குபடுத்தி இலகுவாக்குவதனையும், நவீன வசதிகளின் வலையமைப்பினை நிறுவுவதனையும் பன்னாட்டு உறவுகள் மற்றும் உபாய கற்கைகளுக்கான நிறுவனத்தை நிறுவுதல் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான தொழிலாளர் உறவுகள் கல்வி நிறுவனத்தை நிறுவுதல் என்பவற்றை உள்ளடக்கு கிறது. ஈட்டுப் பிணையற்ற கடன்வழங்கும் கருவிகளூடாக சலுகை வட்டி வீதங்களில் நிதியினை வழங்குவதற்காக ரூ.5 பில்லியன் ஆரம்ப முதலீட்டுடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் வங்கி 2005 இல் நிறுவப்பட்டது. அலுவலக நடைமுறைகளை ஒழுங்குபடுத்தல், இலகுவாக்கப்பட்ட பெறுமதிசேர் வரியின் பிரயோகங்கள், சுங்க ஒழுங்கு விதிகள் மற்றும் ஏற்றுமதி நடைமுறைகள் என்பனவற்றை இலகுபடுத்தல் மற்றும் தொழில்நுட்ப இயலளவுகளை மேம்படுத்துவதற்கான நிறுவன ரீதியிலான ஆதரவை வழங்கல், தரத்தின் முகாமைத்துவம், உற்பத்தித் திறன் மேம்பாடு, இணையத்தைப் பெறும் வசதி மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் அபிவிருத்தியின் பொருட்டு தரச்சன்றிதழைப் பெற்றுக்கொள்ளல் போன்ற தற்போது நடைமுறை யிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள் 2005 இல் மேலும் வலுப்படுத்தப்பட்டன.

- **2006 இன் வரவு செலவுத் திட்டம் உள்நாட்டு புடவைக் கைத்தொழிலை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான வலியுறுத்தல்களை முன்வைத்தது.** அரசுக்கும் வங்கிகளுக்குமிடையே இடர்நேர்வைப் பகிர்ந்துகொள்ளும் அடிப்படையில் தற்போது நடைமுறையிலிருக்கும் புடவைத் தொழிற் சாலைகளின் படுகடனை மீளஒழுங்குபடுத்தும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்து இடம்பெறுவதையும், உள்நாட்டுத் தயாரிப்பாளர்களிடமிருந்து பாதுகாப்பான சந்தையை வழங்கும் நோக்கில் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆயுதப் படைகளுக்கான சீருடைத் துணிகளின் முழுத்தேவையையும், உள்நாட்டுத் தயாரிப்பாளர் களிடமிருந்து கொள்வனவு செய்வதற்கும் வரவு செலவுத் திட்டம் முன்மொழிந்தது. ஏற்கனவே இருக்கும் கொறண புடவைகள் பதப்படுத்தும் வலயத்திற்கு மேலதிகமாக, துல்கிரியா தொழிற்சாலை முதலீட்டுச் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட கைத்தொழில்களுக்கு வழங்கப்படுகின்ற அதேமாதிரியான ஊக்கு விப்புக்களின் மூலம் ஆதரவளிக்கப்பட்டு பிரத்தியேக புடவை வலயமாக அபிவிருத்தி செய்யப்படும்.

- **அனுமதிப்பங்கு முறைமை முடிவுறுத்தப்பட்டதன் காரணமாக கைத்தொழில் தற்போது உலகளாவிய தீவிர போட்டிக்கு முகங்கொடுக்க வேண்டி யுள்ளதால் ஆடைக் கைத்தொழிலின் போட்டித்தன்மையை அதிகரிப்பதற்கான ஏனைய பல வழிமுறைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.** பொருளாதார அபிவிருத்திக்கான தேசியசபையின் கொள்கை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டவாறு, அரசின் தொலைநோக்கு யாதெனில், ஆடைகள் கைத்தொழிலை ஒப்பந்த அடிப்படையிலான தயாரிப்பாளர்களிடமிருந்து அனைத்த முழுப் பணிகளையும் உள்ளடக்கிய பெறுமதி கூட்டப்பட்ட முழுமையான பணியினை வழங்குபவராக மாற்றுவதும் ஆடைக் கைத்தொழிலுக்கான ஐந்தாண்டு உபாயத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட வளர்ச்சி இலக்குகளை எதிர்கொள்வதுமேயாகும். முகாமைத்துவம், வடிவமைப்பு மற்றும் இறுதி மெருகூட்டல் என்பவற்றில் பயிற்சியளிப்பதற்காக இதே மாதிரியான பன்னாட்டு நிறுவனங்களுடன் இணைக்கப்பட்ட புடவை மற்றும் ஆடைகள் கல்லூரியை துல்கிரியவில் நிறுவுவதற்கு 2006 இன் வரவு செலவுத் திட்டம் முன்மொழிந்தது. மொறட்டுவ பல்கலைக்கழகமும் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி அபிவிருத்தி பட்டப்படிப்பு

நிகழ்ச்சித் திட்டத்தை 2005 இல் அறிமுகப்படுத்தியது. கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சும், ஆடைகள் சங்கங்களின் கூட்டமைப்பு நிறுவனமும் உற்பத்தித் திறன் மேம்பாடு, நன்மதிப்பைக் கட்டியெழுப்பல் மற்றும் தொழிற்சாலை மட்டத்திலான தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை மேற்கொண்டன. தொழிலாளர், சூழல் மற்றும் கம்பனி ஆளுகைகள் தொடர்பில் பன்னாட்டு நியமங்களைப் பூர்த்தி செய்யும் தயாரிப்பாளர்கள் தமது தொழிற்சாலைகளை மேம்படுத்துவதற்காக, அரசு அவர்களுக்கு உதவியது. இது பன்னாட்டுச் சந்தை நுழைவை விரிவுபடுத்த உதவும்

- **பிரதான கடல் மற்றும் வான் வழிகளுக்கு அண்மையாகக் காணப்படும் இலங்கையின் அமைவிடம், இப்பிராந்தியத்தில் எம்நாட்டை கவர்ச்சிகரமான ஆடை மையமாக அபிவிருத்தி செய்யப்படுவதற்கான விசேட வாய்ப்பை வழங்குகிறது.** இந்நோக்கத்திற்காக, ஆகக்குறைந்த ஏற்றுமதி அளவைப் பேணுவதற்கான தேவை மற்றும் பெறுமதிசேர் வரி செலுத்துவதற்கான பொறுப்பு என்பவற்றுக்குட்பட்டு கட்டுப்பாட்டு முதலீட்டுச்சபை ஊக்குவிப்புக்களை வழங்குவதனூடாக பாரிய சந்தைத் தொகுதிக்கான வெளிநாட்டு முதலீடு ஊக்குவிக்கப்படுகிறது. சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் சர்வதேச விமான நிலையத்துக்கு அண்மையில் கட்டுநாயக்கா இருப்பதனால் முன்மொழியப்பட்ட ஆடை மையத்துக்கும் பொருத்தமான இடமாக இது இனங் காணப்பட்டுள்ளது.

- **புடவைகளும் ஆடைகளும், காலணி, தோல் உற்பத்திகள், மட்பாண்டங்கள், இறப்பர் மற்றும் மரம் மற்றும் மரத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் ஆகிய இலக்கிடப்பட்ட முன்னணிக் கைத்தொழில்களின் போட்டித் தன்மையை அதிகரிப்பதற்காக 2004 இல் ஆரம்பிக்கப்பட்ட விசேட நிகழ்ச்சித் திட்டம் 2005 இலும் தொடர்ந்தது.** இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், 2005 இல் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சால் மேற் கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகள் தொழிற்சாலை விரிவாக்கம் மற்றும் நவீனமயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள், இயலளவைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டங்கள், வியாபார அபிவிருத்திப் பணிகள் மற்றும் ஏற்கனவேயிருக்கும் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்துவதற்கான தொழில்நுட்ப மதியுரைகளை வழங்கல் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

- **2006 இற்கான வரவு செலவுத் திட்டம், அச்சிடல் மற்றும் பொதியிடல் கைத்தொழிலை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான விசேட வழிமுறைகளையும் தீர்வை விலக்களிப்புக்களையும் முன்மொழிந்துள்ளது.** உள்நாட்டில் அச்சிடல் மற்றும் பொதியிடலின் உயர் செலவைக் குறைப்பதை நோக்காகக் கொண்டு இறக்குமதி செய்யப்படும் சகல வகையான தாள்கள் மீதான தற்போதைய 15 சதவீதத் தீர்வை நீக்கப்படவுள்ள அதே வேளையில் இறக்குமதி செய்யப்பட்ட தகரக் குவளைகள் மீதான தீர்வை 6 சதவீதத்துக்குக் குறைக்கப்படும். தற்போதைய தீர்வை அமைப்பிலுள்ள முரண்பாடுகளை திருத்தும் விதத்தில், மூலப்பொருட்கள் மீதான இறக்குமதித் தீர்வைகள் குறைந்த வரிப்பிரிவினுள் கொண்டுவரப்படும். இலங்கையில் அச்சிடல் மற்றும் பொதியிடல் கைத்தொழிலின் தரத்தை அதிகரிப்பதற்காக பரிசோதனை ஆய்வுகூடம் ஒன்றுடன் கூடியபொதியிடல் அபிவிருத்தி நிலையமொன்று அரசால் நிறுவப்படும்.

- **அரசு, 2004 இல் நிறுவப்பட்ட முதலீட்டாளர் வசதியளிக்கும் மன்றத்தினூடாக கைத்தொழிலதிபர்களதும் முதலீட்டாளர்களதும் தொழிற்பாட்டுப் பிரச்சனைகளுக்கு 2005 இலும் தொடர்ந்தும் தீர்வைக் கண்டது.** பாரிய அளவிலான முதலீட்டு செயற்றிட்டங்களுக்கு வசதியளிக்கவும் காணிக் கொள்வனவு, சூழல் அனுமதிப்பத்திரம் பெறல் மற்றும் உள்ளூராட்சி மன்றம் மற்றும் மத்திய அரசின் ஒப்புதல்கள் என்பவற்றில் கைத்தொழிலதிபர்களால் எதிர் கொள்ளப்படும் தடைகளை நீக்குவதற்காகவே முதலீட்டாளர் வசதியளிக்கும் மன்றம் நிறுவப்பட்டது. இந்நிறுவனத்துக்கு மேலதிகமாக ஏற்றுமதி அபிவிருத்திச் சபையும் ஏற்றுமதி யாளர்களின் பிரச்சனையை ஏற்றுமதியாளர்கள் மன்றத்தில் தொடர்ந்து தீர்த்துவந்தது.

- **2005 இல் ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி நிறுவனத்தின் தூய்மையான உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் அரசுடன் இணைந்து அதன் செயற்பாடுகளை தேசிய தூய்மையான உற்பத்தி இயலளவைக் கட்டியெழுப்பல், கைத்தொழிலுக்கும் அரசுக்குமிடையேயான கலந்துரையாடல்களைப் பேணல் மற்றும் சுற்றாடலுக்கு உகந்த தொழில்நுட்பங்களை மாற்றல் செய்வதற்கும் அபிவிருத்திச் செய்வதற்குமான முதலீட்டை அதிகரித்தல் என்பவற்றை நோக்கி அதன்**

**அட்டவணை 2.2**
வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் (1997-2000=100)

| விடயம் | 2004(அ) | 2005 (ஆ) | சதவீதமாற்றம் % 2005/04 |
|---|---|---|---|
| வேளாண்மை, மீன்பிடி | 102.7 | 103.7 | 1.0 |
| 1. வேளாண்மை | 102.4 | 110.1 | 7.5 |
| 1.1. வேளாண்மை உற்பத்திகள் | 100.4 | 108.7 | 8.3 |
| தேயிலை | 107.7 | 110.4 | 2.5 |
| இறப்பர் | 98.3 | 108.3 | 10.2 |
| தெங்கு | 93.3 | 90.6 | -2.9 |
| நெல் | 98.6 | 121.8 | 23.5 |
| ஏனைய பயிர்கள் | 101.0 | 106.4 | 5.3 |
| 1.2 கால்நடை | 121.0 | 122.8 | 1.5 |
| 2. மீன்பிடி | 104.9 | 59.8 | -43.0 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 2.3**
முதன்மை வேளாண்மைப் பயிர்களின் போக்குகள்

| வகை | அலகு | 2004(அ) | 2005(ஆ) |
|---|---|---|---|
| **1. தேயிலை** | | | |
| 1.1 உற்பத்தி (இ) | மில்.கி.கி. | 309.5 | 317.2 |
| 1.2 மொத்த நிலப்பரப்பு | '000எக்டேயர்கள் | 211 | 222 |
| 1.3 பயிரிடப்பட்ட நிலப்பரப்பு | '000எக்டேயர்கள் | 166 | 193 |
| 1.4 உற்பத்திச் செலவு(ஈ) | ரூபா/கி.கி. | 157.34 | 168.85 |
| 1.5 சராசரி விலை | | | |
| - கொழும்பு ஏலம் | ரூபா/கி.கி. | 180.74 | 185.84 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ.) | ரூபா/கி.கி. | 248.92 | 263.31 |
| 1.6 மீள்நடுகை | எக்டேயர்கள் | 1,245 | 1,333 |
| 1.7 புதிய பயிரிடுகை | எக்டேயர்கள் | 22 | 7 |
| 1.8 மொ.உ.உ.யின் வீதமாக கூட்டப்பட்ட பெறுமதி(உ) | | 2.2 | 2.0 |
| **2. இறப்பர்** | | | |
| 2.1 உற்பத்தி | மில்.கி.கி. | 94.7 | 104.4 |
| 2.2 மொத்த நிலப்பரப்பு(ஊ) | எக்டேயர்கள் | 115 | 116 |
| 2.3 பாலெடுக்கப்பட்ட நிலப்பரப்பு(ஊ) | எக்டேயர்கள் | 89 | 89 |
| 2.4 உற்பத்திச் செலவு | கி.கி.க்கு ரூபா | 73.40 | 76.12 |
| 2.5 சராசரி விலை | | | |
| - கொழும்பு ஏலம்(ஆர்.எஸ்.எஸ்.1) | கி.கி.க்கு ரூபா | 127.20 | 147.41 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ.) | கி.கி.க்கு ரூபா | 128.51 | 147.73 |
| 2.6 மீள்நடுகை (எ) | எக்டேயர்கள் | 820 | 1448 |
| 2.7 புதிய பயிரிடுகை(எ) | எக்டேயர்கள் | 518 | 504 |
| 2.8 மொ.உ.உ வின் % மாக கூட்டப்பட்ட பெறுமதி(உ) | | 0.7 | 0.7 |
| **3. தெங்கு** | | | |
| 3.1 உற்பத்தி | மில்.காய்கள் | 2,591 | 2,515 |
| 3.2 மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 395 | 395 |
| 3.3 உற்பத்திச் செலவு | காய்க்கு ரூபா | 7.50 | 9.50 |
| 3.4 சராசரி விலை | | | |
| உற்பத்தியாளர் விலை | காய்க்கு ரூபா | 9.83 | 12.46 |
| ஏற்றுமதி (க.ஏ.பெ.)(ஏ) | காய்க்கு ரூபா | 11.03 | 13.04 |
| 3.5 மீள்நடுகை/ கீழ் பயிரிடுகை(ஐ) | எக்டேயர்கள் | 1,226 | 1,668 |
| 3.6 புதிய பயிரிடுகை(ஐ) | எக்டேயர்கள் | 1,098 | 3,250 |
| 3.7 மொ.உ.உ வின் % மாக கூட்டப்பட்ட பெறுமதி(உ) | | 2.0 | 2.2 |

மூலங்கள்: இலங்கைத் தேயிலைச் சபை.
இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம்.
தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை
தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை.
பெருந்தோட்டக் கம்பனிகள்.
இலங்கை மத்திய வங்கி.
இலங்கைச் சுங்கம்

(அ) திருத்தியமைக்கப்பட்டவை.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) பச்சைத்தேயிலை உட்பட.
(ஈ) பச்சைத் தேயிலை வழங்குபவரின் இலாபம் உட்பட
(உ) வளர்த்தல் மற்றும் பதனிடல் மட்டும்
(ஊ) தொகை மதிப்புப் புள்ளி விபரத்திணைக்களம் மற்றும் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தால் 2003இல் நடாத்தப்பட்ட இறப்பரின் நிலப்பரப்பு அளவீட்டை அடிப்படையாகக் கொண்டது.
(எ) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிர்ச்செய்கை உதவித் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு
(ஏ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்
(ஐ) தெங்கு பயிர்ச்செய்கைச் சபையின் பயிர்செய்கை உதவித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.

**நடவடிக்கைகளை தொடர்ந்தும் விரிவாக்கியது.** இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக அரசு போட்டித்தன்மை வாய்ந்த கைத்தொழில் உற்பத்திக்கும் சுற்றாடல் தொடர்பான கரிசனைகளுக்கு மிடையேயான இடைவெளியை நிரப்பலாமென எதிர்பார்க்கிறது.

## 2.3 வெளியீடு

### வேளாண்மை

- ***2004 இல் அதன் பின்னடைவிலிருந்து மீட்சியடைந்து வரும் வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடித்துறை கூட்டப்பட்ட பெறுமதி நியதிகளில் 2005 இல் 1.5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.*** இவ்வளர்ச்சிக்கு பெரும்போகம் மற்றும் சிறுபோகம் இரண்டிலும் சாதனைமிக்க நெல் உற்பத்தியும் தேயிலையின் சாதனைமிகு உற்பத்தியும் முக்கியமாகப் பங்களித்தன. ஏனைய களப்பயிர்கள், மரக்கறிகள், இறப்பர் மற்றும் ஏனைய ஏற்றுமதி வேளாண்மைப் பயிர்களின் மேம்பட்ட செயலாற்றமும் இம்மீட்சிக்குப் பங்களிப்புச் செய்தன. 2004 இன் முற்பகுதியில் நிலவிய வரட்சியின் காலம் தாழ்த்திய தாக்கம் காரணமாக தெங்கு உற்பத்தி முழு அளவில் மீட்சியடையவில்லை. 2004 திசெம்பரில் ஏற்பட்ட சுனாமியால் மோசமாகப் பாதிக்கப்பட்ட மீன் உற்பத்தியும் 2005 இல் முழுஅளவில் மீட்சியடையவில்லை.

- ***வேளாண்மைத் துறையின் முக்கியத்துவம் 2004 இன் 17.9 சதவீதப் பங்கிலிருந்து 2005 இல் 17.2 சதவீதத்துக்கு மேலும் வீழ்ச்சியடைந்தது.*** பணிகள் மற்றும் கைத்தொழில் துறைகளின் வளர்ச்சியடைந்து வரும் முக்கியத்துவத்துவத்தின் காரணமாக வேளாண்மைத் துறையின் பங்கு சுருக்கமடைவது சுனாமிக்குப் பின் மீன்பிடித் துணைத்துறையில் ஏற்பட்ட வீழ்ச்சியால் மேலும்

மோசமடைந்தது.

**ஏற்றுமதி வேளாண்மை**

- **மொத்தத் தேயிலை உற்பத்தி 317 மில்லியன் கிலோகிறாம் கொண்ட சாதனை மட்டத்தை அடைந்து 2005 இல் 2.5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன் 2005 முழுவதிலும் உயர்ந்த பன்னாட்டு விலைகளையும் பெற்றுக்கொண்டது.** மொத்த தேயிலை உற்பத்தியும் உயர் நிலம் மற்றும் மத்தியநிலத் தேயிலைகளின் உற்பத்தியில் ஏற்பட்ட முறையே 8 சதவீத மற்றும் 11 சதவீத அதிகரிப்புக்களால் உயர்நிலம் மற்றும் மத்திய நிலங்களில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளுக்கு சாதகமாகச் ஏற்பட்டது. உயர் தேயிலை விலைகளால் தூண்டப்பட்டு கூடிய உற்பத்தியை அடைவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் உயர் உற்பத்தியினைப் பெறத் தூண்டின. எனினும், தாழ்நிலப் பிரதேசங்கள் விசேடமாக 2005 இல் முதலாம் காலாண்டில் போதியளவு மழைவீழ்ச்சியைப் பெறாததால் தாழ்நிலத் தேயிலையின் உற்பத்தி 1 சதவீதத்தால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகளில் தொழிலாளர் பிணக்குகள் மற்றும் வேலை நிறுத்தங்கள் குறை ந்தளவு காணப்பட்டமையும் இவ்அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்திருக்கக்கூடும். மொத்த உற்பத்தி 315 மில்லியன் கிலோகிறாம் கறுப்புத் தேயிலையும் 2 மில்லியன் கிலோகிறாம் பச்சைத் தேயிலை உற்பத்தியையும் உள்ளடக்குகிறது. 2005 இல் கறுப்புத் தேயிலை 299 மில்லியன் கிலோ கிறாம் மரபுவழித் தேயிலையையும் சிரிசி, தேயில என அழைக்கப்படும் வெட்டிக்கிழித்து சுருட்டப்பட்ட 16 மில்லியன் கிலோகிறாம் தேயிலையையும் உள்ளடக்கியுள்ளது.

- **முன்னைய ஆண்டுகளைப் போன்றே சிறு உடமையாளர் தேயிலைத் துறை, கூடியளவு காணி பயன்படுத்தப்பட்டமை மற்றும் உயர் விளைச்சல் காரணமாக தொடர்ந்து செல்வாக்குச் செலுத்தி 2005 இன் மொத்தத் தேயிலை உற்பத்தியில் 65 சதவீதத்துக்குப் பங்களிப்புச் செய்தது.** சிறுஉடமையாளர் தேயிலைத் துறையின் சராசரி விளைச்சல் 2005 இன் பெருந்தோட்டத் துறை யின் சராசரி எக்டேயருக்கான 1,358 கிலோ கிறாம்களுடன் ஒப்பிடுகையில் எக்டேயருக்கு 1,867 கிலோகிறாம்களாக விளங்கியது. இதற்கு முக்கியமாக ஒப்பீட்டு ரீதியில் பழைய தேயிலை பெருந்தோட்டங்களும் உயர் மற்றும் உயர் பிர தேசங்களின் மேற்பரப்பை சரிவாக்கிய மையினால் மண்சரிவிற்கு உட்பட்டு வளம் குன்றியமையும் முக்கிய காரணங்களாகும். எனினும், ஆகப்பிந்திய அளவீட்டைத் தொடர்ந்து சிறுஉடமையாளர்களின் விளைச்சல் கீழ்நோக்கித் திருத்தப்பட்டது.[1] 2005 இல் மதிப்பிடப்பட்ட தேசிய சராசரி விளைச்சல் எக்டேயருக்கு 1645 கிலோகிறாம்களாக விளங்கியதுடன், இது உள்ளார்ந்த வளமாக எய்தக்கூடிய விளைச்சலை விட குறைவாகவே தொடர்ந்து காணப்படுகிறது. தேயிலை சராசரி உற்பத்தியின் செலவு 7.3 சதவீதத்தால் கிலோகிறாம் ஒன்றுக்கு ரூ.168.85 இற்கு அதிகரித்தது.

- **இறப்பர் உற்பத்தி தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக அதிகரித்தது.** 2005 இல் உற்பத்தி 104 மில்லியன் கிலோகிறாம்களுக்கு 10.2 சதவீதத்தால் கணிசமானளவில் அதிகரித்தது. பன்னாட்டு எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு செயற்கை இறப்பருக்கான கணிசமான விலை அதிகரிப்புக்கு வழிவகுத்ததுடன் இது, அதிகரித்த கேள்வியினூடாக இயற்கை இறப்பரின் விலைகளையும் அதிகரித்து, உள்நாட்டு மற்றும் நன்மையடைந்து உலகளாவிய உயர் உற்பத்தியையும் தூண்டியது. உள்நாட்டு உற்பத்தி அதிகரித்த பால் எடுத்தல் மற்றும் உயர் விளைச்சல் அதிகரித்த வளமாக்கி மழையிலிருந்தான பாதுகாப்பு மற்றும் சிறந்த முறையிலான பால் எடுத்தல் மற்றும் பயிர்ச்செய்கை நடைமுறைகள் போன்ற அதிகரித்த தொழில்நுட்ப பிர யோகத்தாலும் அதிகரித்தது. இறப்பரின் சராசரி விளைச்சல் எக்டேயருக்கு 1,064 கிலோகிறாம் களிலிருந்து எக்டேயருக்கு 1,170 கிலோகிறாம்களுக்கு அதிகரித்தது. கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் காரணமாக இறப்பரின் சராசரி உற்பத்திச் செலவு 4 சதவீதத்தால் அதிகரித்தது. கவர்ச்சிகரமான விலைகள் மற்றும் உதவுதொகைகள் இறப்பரின் மீள்நடுகையை ஊக்கப்படுத்தியதுடன், மீள்நடுகை 2005 இல் 1,448 எக்டேயருக்கு 77 சதவீதத்தால் அதிகரித்தது. இறப்பரை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களின் விரிவாக்கத்துடன், இயற்கை இறப்பருக்கான உள்நாட்டுக் கேள்வியும் 2005 இல் 73 மில்லியன் கிலோகிறாம்களுக்கு 34 சதவீதத்தால் கணிசமானளவில் அதிகரித்தது.

1. தொகைமதிப்பு புள்ளி விபரத் திணைக்களத்தால் நடாத்தப்பட்ட இலங்கையிலான தேயிலை சிறுஉடமையாளர்கள் அளவீட்டின்படி காணியின் பரப்பளவு மேல்நோக்கித் திருத்தப்பட்டது. இதைக் கருத்திற்கொண்டு சிறுஉடமையாளர் துறையின் சராசரி விளைச்சல் தேயிலை சிறுஉடமையாளர் அபிவிருத்தி மேலாண்மைச் சபையால் கீழ்நோக்கித் திருத்தப்பட்டது. பெருந்தோட்டத் துறையின் சராசரி விளைச்சல் பெருந்தோட்டக் கம்பனிகளால் வழங்கப்பட்ட பரப்பளவுகளை அடிப்படையாகக் கொண்டது.

- **வண்டுகளின் நோய்த் தாக்கத்துடன் 2003 இலும் 2004 முற்பகுதியிலும் நிலவிய வரட்சியின் காலம் தாழ்த்திய தாக்கமும் சேர்ந்து , 2005 இன் தெங்கு உற்பத்தியின் வீழ்ச்சிக்கு இட்டுச்சென்றது.** ஆகக் குறைந்த மாதாந்த உற்பத்தி 2005 பெப்புருவரியில் அறிவிக்கப்பட்டது. காலநிலை சாதகமாக மாறியமை வண்டுகளின் தாக்கம் படிப்படியாக கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்தமை ஆகியவற்றின் காரணமாக 2005 ஏப்பிறலிலிருந்து உற்பத்தி முன்னேற ஆரம்பித்தது. எனினும், 2005 இன் மொத்த உற்பத்தி 2,515 மில்லியன் காய்களுக்கு 2.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. தெங்கின் உற்பத்திச் செலவு 2005 இல் காயொன்றுக்கு ரூ.9.50 இற்கு 27 சதவீதத்தால் அதிகரித்தது.

- **கறுவா, கராம்பு, மிளகு, சாதிக்காய், கோப்பி, கொக்கோ மற்றும் பாக்கு போன்ற ஏனைய ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தியும் 2005 இல் அதிகரித்தன.** ஆராய்ச்சி விரிவாக்கப்பட்ட விரிவாக்கப்பட்ட பணிகள் மற்றும் சாதகமான காலநிலைமைகளின் பலனாக கராம்பு (36 சதவீதம்), மிளகு (27 சதவீதம்) மற்றும் சாதிக்காய் (23 சதவீதம்) என்பவற்றின் உற்பத்தி 2005 இல் கணிசமானளவில் அதிகரித்தது. ஏற்றுமதி வேளாண்மைப் பயிர்களின் உற்பத்தி 2005 இல் அளவு நியதிகளில் 28 சதவீதத்தாலும் பெறுமதி நியதிகளில் 24 சதவீதத்தாலும் அதிகரித்து கடந்த மூன்று தசாப்தங்களில் அதியுயர் வளர்ச்சியைப் பதிவு செய்தது.

## உள்நாட்டு வேளாண்மை

- **நெல் உற்பத்தி 2005 இல் புதிய சாதனை மட்டத்திற்கு அதிகரித்தது.** 2004/05 பெரும்போகத்தில் நெல் உற்பத்தி 20.5 சதவீதத்தால் 2,012,706 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்திருக்கையில் 2005 சிறுபோகத்தின் உற்பத்தியும் 28.7 சதவீதத்தால் 1,233,480 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்து 2005 இன் ஆண்டு உற்பத்தியை 23.5 சதவீதத்தினால் சாதனை மட்டமான 3,246,186 மெற்றிக் தொன்களுக்கு உயர்த்தியது. ஆண்டு முழுவதும் சிறந்தளவில் பரவலாகப் பெய்த மழை, முக்கிய நெல் பயிரிடப்படும் பிரதேசங்களின் பயிரிடப்பட்ட பரப்பளவு அதிகரிப்பதற்கும் எல்லை நிலங்களில் பயிரிடுவதற்கும் வழிவகுத்தது. பயிர்ச்செய்கைக்கான இவ்உந்துசக்தியாக 2004 இல் நிலவிய கவர்ச்சிகரமான நெல் விலைகள் விளங்கின. 2005 இன் மேம்பட்ட பயிர்ச்செய்கை நடைமுறைகளால் உற்பத்தி மேலும் அதிகரிப்பைக் காட்டியது. புதிதாக பயிர் செய்யப்பட்ட எல்லை நிலங்களில் காணப்பட்ட குறைந்த விளைச்சல், 2004 இன் எக்டேயர் ஒன்றுக்கான விளைச்சலான 4.09 மெற்றிக் தொன்களிலிருந்து 2005 இல் எக்டேயர் ஒன்றுக்கான ரூ.3.97 மெற்றிக் தொன்களுக்கு பொதுவாக வீழ்ச்சிக்கு வீழ்ச்சியடைவதற்குக் காரணமாயிற்று.

**அட்டவணை 2.4**
நெல்துறை மீதான புள்ளி விபரங்கள்

| விடயம் | அலகு | 2004 (அ) | | | 2005( ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 521 | 258 | 779 | 581 | 357 | 938 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 469 | 251 | 720 | 570 | 345 | 915 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய பரப்பு | '000 எக்டேயர்கள் | 417 | 226 | 643 | 509 | 310 | 819 |
| உற்பத்தி | '000 மெற்றிக்தொன் | 1,670 | 958 | 2628 | 2,013 | 1,233 | 3,246 |
| | '000 புசல்கள் | 80,022 | 45,920 | 125,942 | 96,461 | 59,116 | 155,577 |
| விளைச்சல் (இ) | கி.கி./ எக்டேயர்கள் | 4,004 | 4,244 | 4,087 | 3,960 | 3,976 | 3,966 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ. மில்லியன் | 666 | 365 | 1,031 | 675 | 462 | 1,137 |
| அரிசி இறக்குமதிகள் | '000 மெ.தொன்கள் | - | - | 222 | - | - | 52 |
| இறக்குமதிகளின் நெல்லிற்குச் சமன் | '000 மெ.தொன்கள் | - | - | 326 | - | - | 76 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) பெரும்போக, சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு பயிர் அறுவடை அளவீடுகளின் அடிப்படையில் அமைந்த குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. அதேவேளையில் மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் சராசரி விளைவு கணக்கிடப்படுகின்றது.

மூலங்கள்: குடிமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்.
இலங்கை மத்திய வங்கி.

- **சாதகமான காலநிலையால் நன்மையடைந்து ஏனைய உணவுப் பயிர்களின் உற்பத்தியும் அதிகரித்தது.** குரக்கன், சோளம், பாசிப்பயறு, சின்னவெங்காயம் மற்றும் மிளகாய் போன்ற துணை உணவுப் பயிர்களினதும் மலைநாட்டு மற்றும் தாழ்நில மரக்கறிகளினதும் உற்பத்தி 2005 இல் அதிகரித்தது. உருளைக்கிழங்கு உற்பத்தி 1.3 சதவீதத்தால் சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது. எனினும், சில மரக்கறிகளின் விலைகள் உள்ளீடுகள் மற்றும் போக்குவரத்துச் செலவுகளின் உயர் செலவுகள் காரணமாக அதிகரித்துக் காணப்பட்டன. மாம்பழம், அன்னாசி மற்றும் பப்பாசிப்பழம் போன்ற முக்கிய பழ வகைகளின் உற்பத்தியும் 2005 ல் அதிகரித் திருக்கையில் வாழைப்பழத்தின் உற்பத்தி வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

- **2005 இல் உள்நாட்டு சீனி உற்பத்தி வீழ்ச்சியடைந்தது.** உள்நாட்டுச் சீனி உற்பத்தி 2005 இல் 54,000 மெற்றிக் தொன்களுக்கு 7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இது பெலவத்தை சீனித் தொழிற்சாலையில் பொறி பழுதடைந் தமையாலும், செவனகல தொழிற்சாலையில் தொழிலாளர் பிணக்குகளாலும் ஏற்பட்டது. 2005 இல் சீனி இறக்குமதிகள் 418,000 மெற்றிக் தொன்களாக விரிவடைந்தமையால் சீனியின் மொத்த வழங்கலில் உள்நாட்டு உற்பத்தியின் பங்கு 11 சதவீதமளவில் காணப்பட்டது. உயிரின உற்பத்திக்கான மாற்றீடாக கரும்பு பயன் படுத்தப்பட்டதனால் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க கேள்வி அதிகரிப்பின காரணமாக 2005 இல் பன்னாட்டு சீனி விலைகள் உறுதியாக அதிகரித்ததனால் உள்நாட்டு உற்பத்தி செலவு போட்டித் தன்மையுடையதாக்கப்பட்டது.

### கால்நடை

- **மொத்த பால் உற்பத்தியானது 2005 இல் 193 பில்லியன் லீற்றர்களுக்கு 1.3 சதவீதத்தினால் அதிகரித்தது.** இது 161.8 மில்லியன் லீற்றர் பசுப்பாலினையும் 30.9 மில்லியன் லீற்றர் எருமைப்பாலினையும் கொண்டிருந்தது. அரசாங்கமானது உள்நாட்டு பால் உற்பத்தியினை அதிகரிப்பதற்கும் தூய பால் நுகர்வினை பிரபல்யப்படுத்துவதற்கும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தது. எவ்வாறெனினும் தற்போதைய உள்நாட்டு பால் உற்பத்தியானது நாட்டின் மொத்த பால் தேவையில் ஏறக்குறைய 15 சதவீதமாக இருந்ததுடன் மீதி பிரதானமாக பால்மாவாக இறக்குமதி செய்யப்பட்டது.

- **கோழிப்பண்ணைத் துறை 2005 இல் சிறப்பாகச் செயலாற்றியது.** கோழி இனப்பெருக்கத்தில் அதிகரித்த தனியார் துறை முதலீடு காரணமாக உள்நாட்டுக் கோழி உற்பத்தி அதிகரித்தது. 2005 இல் கோழி இறைச்சிக்கான கேள்வி சுனாமிக்குப் பின்பு மீன் உற்பத்தியில் ஏற்பட்ட பற்றாக்குறை காரணமாக அதிகரித்தது. இதன் விளைவாக, 2005 இல் கோழி இறைச்சியின் உற்பத்தி 97,256 மெற்றிக் தொன்களுக்கு 2.7 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும், முட்டை உற்பத்தி 2004 உடன் ஒப்பிடுகையில் 2005 இல் 865 மில்லியன் முட்டைகளுக்கு 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. பறவைக் காய்ச்சலிலிருந்த உள்நாட்டு கோழிக் கைத்தொழிலை பாதுகாப்பதற்காக இலங்கை உயிருள்ள பறவைகள் மற்றும் கோழி இறைச்சி இறக்குமதி மீது தற்காலிகத் தடையொன்றை ஒத்தோபர் 2005 இலிருந்து விதித்தது. திசெம்பரில் பண்டிகைக் காலத்தில் உள்நாட்டுக் கேள்வியை எதிர் கொள்வதற்காக இத்தடை தளர்த்தப்பட்டதுடன் பறவைக்காய்ச்சல் பாதிக்கப்படாத நாடுகளிலிருந்தான இறக்குமதிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டது. குறைந்த விலைகளில் கோழிக்குஞ்சுகளின் உறுதியான வழங்கலுக்காகவும் ஏனைய நாடுகளிலிருந்த கோழிப்பண்ணை நோய்களுக்கு முகங் கொடுப்பதைக் குறைப்பதற்காகவும் உள்நாட்டில் இனப்பெருக்கம் பண்ணைகளில் முதலீட்டை ஊக்குவிப்பது முக்கியமானதாகும்.

### மீன்பிடி

- **சுனாமியின் தாக்கம் காரணமாக மீன் உற்பத்தி 2005 இல் 43 சதவீதத்தால் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தது.** சுனாமிக்கு முன்னைய மட்டங்களுடன் ஒப்பிடுகையில், 2005 இல் முதலாம் காலாண்டில் மீன் உற்பத்தி 77.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தபோதிலும் 2005 இன் நான்காம் காலாண்டில் மீன் உற்பத்தியிலான வீழ்ச்சி 18.7 சதவீதமாகும். எனினும், இவ்வீழ்ச்சி திசெம்பர் 26 இல் நிகழ்ந்த சுனாமியின் உடனடித் தாக்கத்தால் பிரதிபலிக்கப்பட்ட 2004 இன் நான்காம் காலாண்டிலான 13.5 சதவீத சுருக்கத்துக்கு மேலதிகமானதாகும்.

- **சுனாமி காரணமாக மீனவர், மீன்பிடிப் படகுகள் மற்றும் கருவிகளின் இழப்புக்களால் ஆழ்கடல் மீன் உற்பத்தி 48.5 சதவீதத்தால் வீழ்ச்சி யடைந்திருக்கையில், நன்னீர் மற்றும் அலங்கார மீனின் உற்பத்தி, இறால் பண்ணைகளில் ஏற்பட்ட வெள்ளைப் புள்ளி நோய் காரணமாக 1**

**அட்டவணை 2.5**
**மீன் உற்பத்தி**

மெற்றிக் தொன்கள் '000

| துணைத்துறை | 2004(அ) | 2005(ஆ) |
|---|---|---|
| கடல் (இ) | 253 | 130 |
| பண்ணை மீன் வளர்ப்பும் நன்னீர் மீன்பிடியும் | 33 | 33 |
| மொத்தம் | 286 | 163 |

மூலங்கள்: கடற்றொழில் நீர்வாழ் மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு.
தேசிய நீரியல் மூலவள ஆராய்ச்சி அபிவிருத்தி முகவர்.

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) கரையோர மற்றும் ஆழ்கடல் துறை.

**சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.** சுனாமிக்குப் பின்பு மீன்பிடித் துறைமுகங்கள், சந்தைகள் மற்றும் ஐஸ்கட்டி உற்பத்தி செய்யும் பொறிகள் போன்ற ஆதரவளிக்கக்கூடிய உட்கட்டமைப்பின் மீள்நிர்மாணத் திலான மிதமான வளர்ச்சியுடன் இணைந்து பல நாள் படகுகள் மற்றும் மின்பிடியின் உள்ளார்ந்த வளத்தின் இயலளவை 2005 இல் அடைய முடியவில்லை. 2006 நடுப்பகுதியில் 2004 இல் பதிவு செய்யப்பட்ட மட்டத்திற்கு மீன் உற்பத்தி மீட்சியடையுமென எதிர்பார்க்கப் படுகிறது.

### காடு வளர்ப்பு

- **காடு வளர்ப்புத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு உரிய அரச முகவர்கள் பங்கேற்றலுடன் கைத்தொழிலுக்கான மரத்தையும் வழங்கின.** 2005 இல் 23 பிராந்திய பெருந் தோட்டக் கம்பனிகள் ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்தி சபை / இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் என்பவற்றை உள்ளடக்கிய கம்பனித்துறை 627 எக்டேயர் கொண்ட பயன்படுத்தப்படாத காணியை காடு வளர்ப்புக்காக பயன்படுத்தியது. இதேவேளை, அரச மரக் கூட்டுத்தாபனம் அரச மற்றும் தனியார்துறைக்கு தொடர்ந்து மரத்தை வழங்கி வந்தது. குற்றிகள், அரியப்பட்ட மரம் மற்றும் விறகு ஆகிய முடிவுப்பொருட்களின் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி முன்னைய ஆண்டை விட 64 சதவீதத்தால் அதிகரித்து 285,634 கனமீற்றரை அடைந்தது.

### கைத்தொழில்

- **சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும், தயாரிப்பு கட்டடவாக்கம் மற்றும் மின்வலுவும் வாயுவும் ஆகிய நான்கு துறைகளைக் கொண்டுள்ள கைத்**

**வரைபடம் 2-3**
**கைத்தொழில் உற்பத்திகளின் உள்ளமைப்பு**




**தொழிற்றுறை 2004 இன் 5.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2005 இல் 8.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கைத்தொழிற் துறையின் பங்கு 2004 இன் 26.4 சதவீதத்திலிருந்து 2005 இல் 27 சதவீதத்துக்கு அதிகரித்ததுடன் 2005 இன் பொதுவான வளர்ச்சிக்கு 36 சதவீத பங்களிப்பினை வழங்கியது. இந்நான்கு துணைத் துறைகளிலும் மிகப்பெரிய துறையான தயாரிப்புத்துறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 16 சதவீதத்துக்கு வகை கூறியதுடன் 2005 இன் பொதுவான வளர்ச்சிக்கு 16 சதவீத பங்களிப்பினை வழங்கியது.

- **தயாரிப்புத் துறையில், தயாரிப்பு உற்பத்தியின் 80 சதவீதத்துக்கு வகைகூறிய தொழிற்சாலைக் கைத்தொழில்களின் உற்பத்தி 2005 இல் 6.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இது, ஸ்திரமற்ற எண்ணெய் விலைகள், பல்நூலிழை உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டமை மற்றும் சுனாமியால் ஏற்படுத்தப்பட்ட பேரழிவு போன்ற பல நிச்சயமற்ற தன்மைகளுக்கு மத்தியலும் அடையப் பட்டது. கைத்தொழிற் துறையிலான உத்வேகம், இவ்வாண்டின் முற்பகுதியில் உலகளாவிய வர்த்தகத்தில் ஏற்பட்ட ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் வளர்ச்சி யடைந்து வரும் உள்நாட்டுக் கேள்வியுடன் 2005 இல் தீவிரமடையத் தொடங்கியது. தயாரிப்புச் செயற்பாட்டிலான உற்சாகம் பல வகையான கைத்தொழிலுக்கான ஏற்றுமதிக்கேள்வி, சாதகமான வானிலை, வங்கிக் கொடுகடனின் விரிவாக்கம், அதிகரித்துச்செல்லும் இயலளவுப் பயன்பாடு,

நிலைத்து நீடித்திருக்கும் கம்பனிச் செயலாற்றம், மற்றும் வளர்ச்சியடைந்துவரும் வியாபார மற்றும் நுகர்வோரின் நம்பகத்தன்மை என்பவற்றால் நன்கு வசதியளிக்கப்பட்டது. தொழிற்சாலை கைத் தொழிலின் முழு வளர்ச்சியும் தனியார் துறை கைத்தொழில்களில் இருந்தே பெறப்பட்டதுடன் அரச கைத்தொழில் துறையின் வெளியீடு 2005 இல் 6.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

- **கைத்தொழில் துறை, இருபுடை மற்றும் பல்புடை வர்த்தக பேச்சுவார்த்தைகளூடாக உலகின் எஞ்சிய நாடுகளுடன் சந்தை நுழைவை விரிவாக்குவதில் அரசின் தொடர்ச்சியான முயற்சிகளிலிருந்து நன்மையடைந்தது.** இச்செயல்முறை தொழிலாளர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பிலான இலங்கையின் உயர் நியமங்கள் பொருத்தமான முதலீட்டை ஊக்குவிக்கும் கொள்கைச் சூழல் மற்றும் தொழிற்படையின் உயர் படிப்பறிவு வீதம் என்பவற்றால் வழிநடத்தப்பட்டது. உலகளாவிய சந்தையிலான தீவிரமான போட்டி, உலகளாவிய வழங்கல் மற்றும் கேள்வியுடன் இணைந்து செல்லும் வகையில் இலங்கைக் கைத்தொழில்களை ஒருங்கிணைக்கும் மற்றும் மீள்ஒழுங்குபடுத்தும் செயல்முறையை ஊக்குவித்தது.

- **தொழிற்சாலைக் கைத்தொழில் துறையிலான வளர்ச்சி சகல கைத்தொழில் வகைகளிலும் பரந்து காணப்பட்டது.** எனினும், வளர்ச்சிக்கான முக்கிய உந்துசக்திகளாக புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோற்பொருட்கள், உணவு, பானங்களும் புகையிலையும், இரசாயனம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு பொருட்கள்; உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் ஆகிய கைத்தொழில் வகைகள் விளங்கின. இந்நான்கு கைத்தொழில் வகைகளும் கைத்தொழில் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியில் 90 சதவீதத்துக்கும் கூடுதலாக வகை கூறின.

- **இறப்பர் கையுறைகள், ரயர்கள், ஆடைகள், புடவைகள், மட்பாண்டம், பிளாத்திக்கு, தோல் மற்றும் செய்முறைப்படுத்தப்பட்ட வைரங்கள் என்பவற்றிலான வளர்ச்சி முக்கியமாக ஏற்றுமதியால் உந்தப்பட்டதாகும்.** இக்கைத் தொழில்கள் குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியச் சந்தைகளிலான உலகளாவிய கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பால் நன்மையடைந்தன. சார்புரீதியில் உயர்ந்தளவிலான உள்நாட்டுப் பணவீக்கம் மற்றும் சுனாமியைத் தொடர்ந்து செலாவணி வீதங்களில் ஏற்பட்ட சடுதியான பெறுமான உயர்வு என்பவற்றுக்கு மத்தியிலும் வலுவான செலவுக்குறைப்பு மூலம் ஏற்றுமதிப் போட்டித்தன்மை பேணப்பட்டது. இப்போட்டித்தன்மை, பொருள்களைச் சிறப்படையச் செய்தல், உற்பத்திச் செயல்முறையை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் சிறுசந்தைகளுக்குப் பொருட்களை வழங்கல் என்பவற்றூடாக மேலும் மேம்படுத்தப்பட்டது. இவ்ஆரம்பவேலைகள், உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் செயல்முறையின் பல கட்டங்களில் தகவல் தொழில்நுட்பத்தின் தீவிர பிரயோகத்தால் வசதிப்படுத்தப்பட்டது.

- **உள்நாட்டுச் சந்தையை நோக்காகக் கொண்ட கைத்தொழில்களின் வளர்ச்சி பதனிடப்பட்ட உணவு, பானங்கள். குடிகை, பியர், பால் உற்பத்திகள், சீமெந்து, கட்டிடப்பொருட்கள், மட்பாண்டப் பொருட்கள், விலங்குத்தீன், சவர்க்காரமும் அழுக்குநீக்கிகளும் மற்றும் உருவாக்கப்பட்ட**

**அட்டவணை 2.6**

கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி (நிலையான 1990 விலைகளில்)

| வகைகள் | ரூபா மில்லியன் | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|
| | 2004 | 2005(அ) | 2004 | 2005(அ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள் | 52,912 | 55,430 | 4.5 | 4.8 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 93,062 | 97,576 | 7.9 | 4.9 |
| 3. மரம், மற்றும் மர உற்பத்திகள் | 1,610 | 1,659 | 4.1 | 3.1 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 3,882 | 4,000 | 1.9 | 3.0 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 45,098 | 50,720 | 4.6 | 12.5 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 18,631 | 19,777 | 7.6 | 6.2 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 2,455 | 2,600 | 8.9 | 5.9 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறி மற்றும் போக்குவரத்துக் கருவி | 10,512 | 10,825 | 4.3 | 3.0 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 5,207 | 5,366 | 3.2 | 3.1 |
| மொத்தம் | 233,369 | 247,953 | 6.1 | 6.2 |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை.

**சிறப்புக் குறிப்பு - 5**

## பல்நூலிழை ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டதினால் இலங்கையின் ஆடைக்கைத்தொழிலில் ஏற்பட்ட பின்விளைவு

புடவைகள் மற்றும் ஆடைகளின் பன்னாட்டு வர்த்தகத்தில் பல்நூலிழை ஒப்பந்தத்தின் ஆளுகைக்குட்படுத்தப்பட்ட அனுமதிப்பங்கு முறையானது 2005 இன் ஆரம்பத்தில் இருந்து இரத்துச் செய்யப்பட்டது. 2005 வரையான அனுபவத்திலிருந்து இரத்துச்செய்யப்பட்டதன் தாக்கமானது நாட்டுக்கு நாடு வேறுபட்டிருந்தது. சீனா மற்றும் இந்தியா போன்ற பாரிய அளவில் ஏற்றுமதி செய்யும் சில நாடுகள் நன்மையடைந்த அதேவேளை சில சிறிய நாடுகள் பாதிப்பு அடைந்தன. இருப்பினும் இலங்கை உட்பட சில சிறிய நாடுகள் அவர்களின் சந்தைப் பங்குகளை தக்கவைத்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

உலக சந்தையில் ஆடைகளுக்கான போட்டித்தன்மை அதிகரிப்புடன் இலங்கையிலுள்ள சில பாரிய கம்பனிகள் உற்பத்தித்திறனை அதிகரித்தல், உயர்ந்த பெறுமதி வாய்ந்த உற்பத்தியில் கூடிய கவனம் செலுத்துதல், மனித மூலதனத்தின் தரத்தினை உயர்த்துதல், வடிவமைப்பு மற்றும் சந்தைப்படுத்தும் திறன், உற்பத்திச்செலவில் விவேகத்தன்மை, வழங்கல் சங்கிலித்தொடர் முகாமையினை அதிகரித்தல், முன்னோக்கிய அபிவிருத்தி மற்றும் பின்புற இணைப்புக்கள் என்பவற்றினூடாக போட்டித் தன்மையை மேம்படுத்தியது.

**அட்டவணை சி 5.1**

**ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்கான தெரிவு செய்யப்பட்ட நாடுகளின் ஏற்றுமதிகளின் மொத்த பெறுமதியும் அளவும் மற்றும் உலக சந்தைப்பங்கும் (சனவரி - செத்தெம்பர்)**

| | ஐக்கிய அமெரிக்காவுக்கான ஏற்றுமதிகள் | | | | | | ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஏற்றுமதிகள் | | | | | | உலகச் சந்தைப் பங்கு (பெறுமதி %) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி ஐ.அ.டொ.மில் | | | அளவு (சதுர மீற்றர் மில்லியன்) | | | பெறுமதி ஐ.அ.டொ.மில் | | | அளவு துண்டுகள்/ சோடி.மில் | | | | |
| | 2004 | 2005 | வளர்ச்சி % | 2004 | 2005 | வளர்ச்சி % | 2004 | 2005 | வளர்ச்சி % | 2004 | 2005 | வளர்ச்சி % | 2004 | 2005 |
| சீனா | 6,692 | 12,207 | 82.4 | 2,205 | 4,656 | 111.2 | 11,479 | 16,623 | 44.8 | 1,492 | 2,091 | 40.1 | 21.6 | 30.1 |
| இந்தியா | 1,713 | 2,271 | 32.6 | 473 | 601 | 27.1 | 3,485 | 4,043 | 16.0 | 581 | 613 | 5.5 | 6.5 | 7.3 |
| இந்தோனேசியா | 1,845 | 2,165 | 17.3 | 543 | 618 | 3.8 | 1,366 | 1,131 | -17.2 | 210 | 86 | -11.6 | 2.6 | 2.0 |
| வங்களாதேசம் | 1,476 | 1,769 | 19.9 | 698 | 841 | 20.5 | 3,026 | 2,768 | -8.5 | 431 | 425 | -1.4 | 5.7 | 5.0 |
| இலங்கை | 1,123 | 1,252 | 11.5 | 307 | 344 | 12.1 | 642 | 602 | -6.2 | 78 | 75 | -3.8 | 1.2 | 1.1 |
| பாகிஸ்தான் | 845 | 920 | 8.9 | 388 | 426 | 9.8 | 1,762 | 1,542 | -12.5 | 384 | 382 | -0.5 | 3.3 | 2.8 |
| தாய்லாந்து | 1,305 | 1.348 | 3.3 | 392 | 403 | 2.8 | 918 | 795 | -13.4 | 110 | 117 | 6.4 | 1.7 | 1.4 |
| மெக்சிக்கோ | 5,084 | 4,677 | -8.0 | 1,453 | 1,311 | -9.8 | 74 | 73 | -1.6 | 15 | 19 | 26.7 | 0.1 | 0.1 |
| நேபால் | 80 | 49 | -38.8 | 28 | 15 | -46.4 | 59 | 54 | -8.5 | 6 | 5 | -16.7 | 0.1 | 0.1 |
| வியட்நாம் | 2,048 | 2,027 | -1.0 | 593 | 594 | 0.2 | 579 | 552 | -4.7 | 69 | 62 | -10.1 | 1.1 | 1.0 |

மூலங்கள்: வர்த்தகத் திணைக்களம், ஐக்கிய அமெரிக்கா, புடவை மற்றும் ஆடைகள் அலுவலகம், ஐரோப்பிய ஆணைக்குழுவின் வர்த்தகப் புள்ளி விபரம்

அனுமதிப்பங்கு கட்டுப்பாடற்ற சூழலில் இலங்கை ஆடைகளின் பிரதான இரண்டு சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா (58 சதவீதம்) மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் (37 சதவீதம்) என்பன காணப்பட்டன. 2003 இல் ஐரோப்பிய ஒன்றியச் சந்தையில் இலங்கைக்கு முன்னுரிமை அடிப்படையில் அனுமதிப்பங்குக் கட்டுப்பாடு நீக்கப்பட்டதுடன் 2004 இன் இறுதிவரை ஐக்கிய அமெரிக்காவுக்கான ஆடை ஏற்றுமதியில் ஏறக்குறைய 90 சதவீதமானவை அனுமதிப் பங்குக் கட்டுப்பாட்டிற்கு முகம்கொடுத்தது. அனுமதிப்பங்கின் கட்டுப்பாடற்ற சந்தைச் சூழல் 2005 முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் இலங்கையில் இருந்து ஐக்கிய அமெரிக்காவுக்கான ஆடை ஏற்றுமதியானது அளவு மற்றும் பெறுமதி ஆகிய இரண்டின் அடிப்படையிலும் அதிகரித்துக் காணப்பட்டது. இது ஐக்கிய அமெரிக்கா சந்தையில் இலங்கையினுடைய சில முக்கிய ஆடை வகைகளுக்குக் காணப்படும் ஒப்பீட்டு நன்மையினூடாக அடையப்பட்டது. எவ்வாறெனினும் மூலப்பிரமாண ஒழுங்குவிதிக்கு இணங்குவதில் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் ஆடைப் பொருட்கள் 48 சதவீதத்துக்கும் மேலான பெறுமதி சேர்க்கப்பட்ட தொகையினைக் கொண்டிருக்க வேண்டுமென்ற தேவைப்பாட்டில் ஏற்பட்ட இடர்ப்பாடு காரணமாக ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து பெற்றுக்கொண்ட பொதுவாக்கப்பட்ட முன்னுரிமைத் திட்டம்+ (GSP+) வழங்கிய சலுகையினை சாத்தியமாக்க முடியவில்லை.

பாரிய கம்பனிகள் தங்களது ஆடைக் கைத்தொழிலை பன்னாட்டு நிலைமைக்கு ஈடாக பேணுவதற்கான வழங்கலைக் கொண்டிருந்த போதிலும் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் (SMEs) நலிவுத்தன்மையானது அதிகரித்தது. சிறிய மற்றும் நடுத்தர கம்பனிகளுக்கு நேரடி சந்தைப்படுத்தும் தொடர்புகள் மற்றும் நேரடி வெளிநாட்டு கொள்வனவாளர்களின் தொடர்புகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணப்பட்டது. இது அவர்களை உப ஒப்பந்தக்காரர்களில் தங்கியிருக்க வேண்டிய நிலைக்கு தள்ளியது. பன்னாட்டுச் சந்தையில் ஆடையின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றும் அவர்களின் உற்பத்தி ஒழுங்கு நடவடிக்கையை மீளமைப்புச் செய்வதற்கான மூலவளங்களின் பற்றாக்குறை என்பன சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களை கடுமையாகப் பாதித்தது. இடர்ப்பாடுகளை தீர்ப்பதற்கு அரசாங்கமானது நிதியிடுதல், மூலப்பொருட்கள் மற்றும் பயிற்சி ஆகிய துறைகளில் பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறிவித்தது. ஆடைக் கைத்தொழிலுக்கான முக்கிய ஆதரவுபெறும் அமைப்பான கூட்டு ஆடை அமைப்பின் அரங்கமானது (JAAF) சாதாரண உற்பத்தியாளர் மட்டத்திலிருந்து ஆடைக் கைத்தொழிலை தரம் உயர்த்துவதற்கு ஒன்றுசேர் தேவைகளை வழங்குவதினூடாக தொடர்ச்சியான நடவடிக்கைகளை அமுல்படுத்தியது.

**உலோகப் பொருட்கள் வகைகளிலான உயர் செயலாற்றத்தால் வழிநடத்தப்பட்டது.** 2005 இல் நிலவிய சார்புரீதியில் குறைவாக விளங்கிய வட்டிவீத அமைப்பு மற்றும் நுகர்வோரின் தலைக்குரிய வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு நுகர்வோர் செலவிடலை ஊக்கப்படுத்தி இப்பொருட்களுக்கான கேள்வியையும் விரிவாக்கியது. கட்டடவாக்க கைத்தொழிலில் ஏற்பட்ட வளர்ச்சி உத்வேகமும் போன்றே சுனாமிக்குப் பின்னரான மீள்நிர்மாண செயற்பாடுகளும் கட்டடப் பொருட்களுக்கான கேள்வியை அதிகரித்தன.

- **புடவை, ஆடைகள் மற்றும் தோற்பொருட்கள் வகையில் உற்பத்தி 2005 இல் 4.9 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து தொழிற்சாலைக் கைத்தொழில்களின் பொதுவான வளர்ச்சிக்கு 31 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்தது.** 2005 இல் இத்துறையின் மிதமான வளர்ச்சி குறிப்பாக 2005 இன் இரண்டாம் அரைப்பகுதியில் தைத்த ஆடைகளின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியால் முக்கியமாக ஏற்பட்டது. எனினும், அனுமதிப் பங்கற்ற சந்தைச்சூழலின் கீழ் முக்கியமாக ஐக்கிய அமெரிக்கச் சந்தையில் உயர் தரமுடைய தைத்த ஆடைகளின் சில முக்கிய வகைகளின் பலம் காரணமாக இலங்கை அதன் உலக சந்தையில் பங்கை பேணக்கூடியதாக இருந்தது. முன்னுரிமையளிக்கப்பட்ட பொதவாக்கப்பட்ட முறைமைத் திட்டத்தின் கீழ் இலங்கையிலிருந்தான ஆடை ஏற்றுமதிகளுக்கு பூச்சிய தீர்வைகளுடனான சந்தை நுழைவை ஐரோப்பிய சமூகம் வழங்கியபோதிலும், தீர்வைச் சலுகைகளை பெறத்தகுதி பெறுவதற்கு பொருட்கள் உள்நாட்டு பெறுமதிகூட்டலின் 48 சதவீதத்துக்கும் கூடிய அளவை உள்ளடக்கப்பட வேண்டியதன் தேவையைக் கொண்டிருக்கும். மூலப் பிர மாணங்களின் நெகிழ்ச்சியற்ற ஒழுங்குவிதி காரணமாக பெறப்பட்ட நன்மைகள் குறைவாக விளங்கின. கடந்த ஐந்து ஆண்டுகளாக அமுல்படுத்தப்பட்ட படிப்படியான மீள்ஒழுங்கு படுத்தல் செயற்முறை மற்றும் மேம்பாடடைந்த முன்னோக்கிய மற்றும் பின்னோக்கிய இணைப்புக்கள் 2005 இல் கீழ் துறையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின.

- **உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை வகையின் உற்பத்தி 2005 இல் 4.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து 2005 இலான தொழிற்சாலைக் கைத்தொழில் வளர்ச்சிக்கு 17 சதவீதத்ததைப் பங்களிப்புச் செய்தது.** உயர் உற்பத்தி உணவு பதனிடல் (5.1 சதவீதம்), குடிபானங்கள் (3.3 சதவீதம்), குடிவகை (7.5 சதவீதம்) மற்றும் புகையிலை (3.0 சதவீதம்) ஆகிய சகல துறை களிலும் அவதானிக்கப்பட்டன. 2005 இல் உணவு துணைத்துறையிலான வளர்ச்சி பால் உற்பத்திகள், சோயா உற்பத்திகள், ஐஸ்கிறீம் மற்றும் பழம் மற்றும் காய்கறிகளின் பதனிடலும் தகரத்தில் அடைத்தலும் போன்ற பலவகையான பொருட்களின் சாதகமான செயலாற்றத்தால் ஏற்பட்டதாகும். சார்புரீதியில் குறைவான வட்டி வீதங்கள், அதிகரித்த சம்பளங்கள் வேளாண்மை பிரதேசங்ளிலான அதிகரித்த அறுவடை என்பவற்றால் அதிகரித்துச் செல்லும் நுகர்வோர் செலவினம் இவ்உற்பத்திகளுக்கான உள்நாட்டுக் கேள்வியைத் தூண்டின. கலால் தீர்வையின் மேல்நோக்கிய திருத்தத்துக்கு மத்தியிலும் வளர்ச்சியடைந்துவரும் உள்நாட்டுக் கேள்வியால் குடிவகை உற்பத்தி 7.5 சதவீதத்தால் அதிகரித்தது. கனிமநீரின் உற்பத்தியும் உயர் வளர்ச்சியை எய்தியது.

- **தொழிற்சாலைகள் கைத்தொழிலின் மூன்றாவது மிகப்பெரிய வகையான இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்குப் பொருட்களின் உற்பத்தி 2005 இல் 12.5 சதவீதத்தால் வளர்ச்சி யடைந்தது. இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் மற்றும் வளமாக்கியில் செழிப்பான வளர்ச்சியைப் பிர திபலிக்கின்றது.** தொழிற்சாலைகள் கைத்தொழில் வளர்ச்சிக்கான துறைவாரியான பங்களிப்பு 39 சதவீதமாக விளங்கியது. இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் உற்பத்தி 2005 இல் 25 சதவீதத்தால் வளர்ச்சியடைந்ததுடன் இது உள்நாட்டு உற்பத்தியில் 90 சதவீதத்தை உள்வாங்கிய இறப்பர் கையுறைகள் மற்றும் ரயர்களுக்கான வெளிநாட்டுக் கேள்வியால் உந்தப்பட்டதாகும். ஐக்கிய அமெரிக்கா, இலங்கையில் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட பொருட்ககளின் ஏற்றுமதி முடிவிடமாக தொடர்ந்து விளங்கியதுடன் அதனை அடுத்து ஐக்கிய இராச்சியமும், சேர்மனியும் காணப்பட்டன. புதிய சந்தைகள் வியட்னாம், சோவியத்ஒன்றியம், ருமேனியா மற்றும் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. பிளாத்திக்கு மற்றும் பிவிசி உற்பத்திகளுக்கான உள்நாட்டுக்கேள்வி கட்டடவாக்கக் கைத்தொழிலின் வளர்ச்சியுடன் கணிசமானளவில் வளர்ச்சியடைந்தது.

- **உலோகமல்லாப் பொருட்கள் வகை 2005 இல் 6.2 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்து தொழிற்சாலைக் கைத்தொழிலின் பொதுவான வளர்ச்சிக்கு 8 சதவீதத்தைப் பதிவு செய்தது.** சீமெந்து, மட்பாண்டம் மற்றும் கூரைத்தகடுகள் போன்ற கட்டடப்பொருட்கள் அரச உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள், வர்த்தக ரீதியிலான கட்டுமானம் மற்றும் சுனாமி மீள்நிர்மாணச் செயற்பாடுகள் என்பவற்றிலிருந்து உயர் கேள்வியை எதிர்கொண்டது. மேசைப் பொருட்கள் மற்றும் ஏனைய மட்பாண்ட உற்பத்திகளுக்கு ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்தான வளர்ச்சியடைந்து வரும் கேள்வியுடன் இவற்றின் உற்பத்தியில் படிப்படியான முன்னேற்றம் காணப்பட்டது. முக்கிய தயாரிப்பாளர்கள் உற்பத்தி இயலளவை விரிவடையச் செய்திருக்கையில் உற்பத்திச் செலவைக் குறைத்தல் வலுவைச் சேகரிப்பதற்கான ஆகப்பிந்திய தொழில்நுட்பங்களின் அறிமுகத்தினூடாக மேற்கொள்ளப்பட்டது. எனினும், சீனக்களி போன்ற அத்தியாவசியமான மூலப்பொருட்களை தேவைக்கதிகமாகப் பாவித்தல் நீண்ட காலத்தில் மட்பாண்டக் கைத்தொழிலுக்கான முக்கிய பிரச்சனையாக இருக்கக்கூடும்.
- **உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகளின் உற்பத்தி 2004 இன் 4.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2005 இல் 3.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இவ்வகையின் வளர்ச்சியின் மெதுவடைவு, முக்கியமாக உலகளாவிய சந்தைகளிலான அதிகரித்த போட்டி காரணமாக இலத்திரனியல் பொருட்கள் மற்றும் கணனி உதிரிப்பாகங்கள் போன்ற ஏற்றுமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியால் ஏற்பட்டதாகும். எனினும், வேளாண்மைக் கருவி, படகுகளின் தயரிப்பும் திருத்த வேலைகளும், உந்து உருளிகளைப் பொருத்தல், நீர் பம்பிகள் உருக்குத் தளபாடம் மற்றும் மின்கருவி போன்ற உள்நாட்டுச் சந்தையை நோக்காகக் கொண்ட உற்பத்திகள் 2005 இல் சார்புரீதியில் உயர் செயலாற்றத்தைப் பதிவு செய்தன. சுனாமிப்பேரழிவால் சேதமாக்கப்பட்ட படகுகளுக்குப் பதிலாக புதிய படகுகள் வழங்கப்பட வேண்டியதால் படகுகள் மற்றும் ஏனைய தொடர்பான கருவிக்கான கேள்வி 2005 இல் கணிசமானளவில் அதிகரித்தது. உந்து உருளிகள் பொருத்தும் கைத்தொழிலும், அதிகரித்துச்செல்லும் வருமானமட்டம் கவர்ச்சிகரமான நிதியியற் பொதிகளின் கிடைப்பனவு மற்றும் தாங்கக்கூடிய விலையில் பல மாதிரிகளின் அறிமுகம் என்பவற்றால் உயர் வளர்ச்சியைப் பதிவு செய்தது. கம்பிவடங்கள், மின்குமிழ்கள் மற்றும் வெளிச்சப் பொருத்திகளுக்கான கேள்வியும் கட்டடவாக்க கைத்தொழிலின் விரிவாக்கத்திலிருந்து நன்மையடைந்தது. கிராமிய மின்னூட்டலின் விரிவாக்கமும் மின்சாதனங்களுக்கான கேள்வியை அதிகரித்தது.

**அட்டவணை** 2.7
முதலீட்டுச் சபையல்லா தனியார்துறைக் கைத்தொழில்களின் தொழிற்சாலை இலாபவிகிதம் (அ)

| வகை | மொத்த உற்பத்திச் செலவு (ரூபா மில்லியன்) | | உற்பத்தியின் மொத்தப் பெறுமதி (ரூபா மில்லியன்) | | தொழிற்சாலை இலாப விகிதம் (சதவீதம்) | |
|---|---|---|---|---|---|---|
| | 2004(ஆ) | 2005(இ) | 2004(ஆ) | 2005(இ) | 2004(ஆ) | 2005(இ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 77,174 | 86,052 | 90,275 | 100,950 | 14.5 | 14.8 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 21,770 | 22,662 | 24,788 | 25,902 | 12.2 | 12.5 |
| 3. மர, மர உற்பத்திகள் | 1,551 | 1,704 | 1,750 | 1,935 | 11.4 | 11.7 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 4,605 | 5,227 | 5,222 | 5,950 | 11.8 | 12.2 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 29,798 | 36,400 | 35,100 | 42,975 | 15.1 | 15.3 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 19,137 | 22,410 | 22,465 | 26,461 | 14.8 | 15.3 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 2,178 | 2,538 | 2,533 | 2,955 | 14 | 14.1 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 12,341 | 13,871 | 14,203 | 16,030 | 13.1 | 13.5 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 3,040 | 3,428 | 3,431 | 3,878 | 11.4 | 11.6 |
| மொத்தம் | 171,594 | 194,292 | 199,768 | 227,036 | 14.1 | 14.4 |

(அ) 490 முதலீட்டுச்சபையல்லா தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவலினை அடிப்படையாகக் கொண்டது.
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது
(இ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.

**அட்டவணை 2.8**
**முதலீட்டுச் சபையல்லா தனியார் துறைக் கைத்தொழில்களின் உள்நாட்டுச் செலவு அமைப்பு (அ)**
**(மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாக)**

மொத்த உள்நாட்டுச் செலவு (வீதம்)

| வகை | வலுவும் எரிபொருளும் | | கூலி | | மூலப்பொருட்கள் | | வட்டி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2004 | 2005 | 2004 | 2005 | 2004 | 2005 | 2004 | 2005 |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 3.3 | 3.2 | 9.7 | 10.2 | 37.8 | 39.8 | 1.5 | 1.1 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 4.2 | 4.4 | 14.6 | 15.1 | 13.2 | 13.0 | 2.4 | 2.2 |
| 3. மர, மர உற்பத்திகள் | 8.9 | 9.2 | 15.8 | 16.4 | 33.1 | 32.8 | 4.0 | 4.2 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 3.4 | 3.9 | 12.9 | 13.1 | 18.2 | 19.1 | 3.7 | 3.6 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 5.9 | 6.0 | 12.3 | 13.0 | 29.2 | 29.8 | 3.2 | 3.4 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 18.9 | 19.3 | 15.2 | 14.9 | 28.4 | 28.9 | 2.3 | 2.9 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 9.9 | 9.7 | 11.1 | 11.2 | 35.0 | 35.8 | 3.2 | 2.5 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 4.5 | 4.9 | 11.3 | 12.1 | 26.2 | 27.0 | 3.3 | 3.9 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் | 4.9 | 5.3 | 12.1 | 11.9 | 34.1 | 34.8 | 1.8 | 1.5 |
| மொத்தம் | 5.9 | 6.0 | 11.7 | 12.0 | 30.7 | 31.4 | 2.2 | 2.2 |

(அ) 490 முதலீட்டுச் சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

- **அரசதுறைக் கைத்தொழிலின் வெளியீடு 2004 இல் பதிவு செய்யப்பட்ட 5.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2005 இல் உண்மை நியதிகளில் 6.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.** வழமையான பேணல் வேலைக்காக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தூய்மி 2005 இல் ஒரு மாதத்துக்கு மூடப்பட்டமையே அரசதுறைக் கைத்தொழில்களின் வெளியீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முக்கிய காரணியாக விளங்கியது. அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டில் 90 சதவீதத்துக்கும் கூடுதலாக வகைகூறும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடு 2005 இல் 6.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. வரையறுக்கப்பட்ட லங்கா சோல்ற் இன் வெளியீடு உப்பளங்களுக்கு சுனாமியால் ஏற்படுத்தப்பட்ட சேதம் காரணமாக 17.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 2005 இல் வரையறுக்கப்பட்ட செவனகல சீனித் தொழிற்சாலையின் உற்பத்தி தொழிலாளர் அமைதியின்மை காரணமாக 18.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டு வேளாண்மை மற்றும் பெருந்தோட்ட துறைகளிலிருந்து வளமாக்கிக்கான உயர்கேள்வி காரணமாக வரையறுக்கப்பட்ட லங்கா பொசுபேற்றின் வெளியீடு 2.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

- **முதலீட்டுச் சபையல்லாத் துறையில் தொழிற்சாலை மட்டத்திலான சராசரி இலாப விகிதம் 2005 இல் 2.1 சதவீதப் புள்ளிகளால் 14.4 சதவீதத்துக்கு அதிகரித்தது.** கைத்தொழில் துறையின் இலாபவிகிதம், 2005 இல் அளவீடு செய்யப்பட்ட 490 முதலீட்டுச் சபையல்லா நிறுவனங்களின் மொத்த உற்பத்திச் செலவுக்கும் உற்பத்தியின் தொழிற்சாலை மட்டத்திலான பெறுமதிக்கும்

**அட்டவணை 2.9**
**முதலீட்டுச் சபையல்லா தனியார் துறையில் தொழிலாளர் உற்பத்தித் திறன் குறிகாட்டி (அ)**

1995=100

| வகை | 2004 | 2005 | சதவீத மாற்றம் |
|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 129.4 | 132.5 | 2.4 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 109.5 | 113.2 | 3.4 |
| 3. மர, மர உற்பத்திகள் | 100.7 | 103.1 | 2.3 |
| 4. தாளும் தாள் உற்பத்திகளும் | 101.4 | 103.7 | 2.3 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், இறப்பர்,பிளாத்திக்கு உற்பத்திகள் | 134.7 | 139.5 | 3.6 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 112.0 | 114.5 | 2.2 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 100.9 | 103.0 | 2.1 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும் போக்குவரத்துக் கருவிகளும் | 120.0 | 123.8 | 3.2 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 107.9 | 110.7 | 2.6 |
| மொத்தம் | 116.3 | 119.7 | 2.9 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) 480 முதலீட்டுச் சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.

இடையேயான மேலதிகப் பெறுமதியின் மதிப்பிடப்பட்டது. 2005 இன் இலாபகரத் தன்மையிலான மேம்பாடு உள்நாட்டு விற்பனைகளில் ஏற்பட்ட விரிவாக்கத்தாலும் தயாரிப்பாளர்களின் பயன்மிக்க விலையிடல் கொள்கைகளாலும் ஏற்பட்ட குறைவான வட்டிச் செலவு, விரயக் குறைப்பு, தொழிற்படு மூலதனத்தின் சிறந்த முகாமைத்துவம் மற்றும் மூலப்பொருட்களின் உச்சப் பயன்பாடு உற்பத்திச் செலவைக் கட்டுப்படுத்த உதவின. சுனாமியைத் தொடர்ந்து உடனடியாக ரூபாவின் பெறுமதி சடுதியாக உயர்வடைந்து ஏற்றுமதி சார்ந்த மற்றும் இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்களின் இலாபகரத் தன்மையை மோசமாகப் பாதித்தபோதிலும் ஐ.அ.டொலருக்கு எதிராக ரூபாவின் உறுதிப்பாடு இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் செலவைக் கட்டுப்படுத்தியது. ஆடைகள், பால் உற்பத்திகள், கோதுமை மா உற்பத்திகள், தைத்த ஆடைகள் மற்றும் தாளும் தாள் உற்பத்திகளும் என்பவற்றில் இறக்குமதி செய்யப்பட்ட இடைநிலை உள்ளீடுகளின் சார்புரீதியான பங்கு அதிகரித்து விளங்கியது.

- **தொழிற்சாலைக் கைத்தொழிலான கூலிச்செலவு ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் கூலி வீதங்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் காரணமாக 2005 இல் 16 சதவீதத்தால் அதிகரித்தது.** மொத்த கூலிச் செலவினத்தில் அளவுக்கதிகமான அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு பல கம்பனிகள் உயர் செலவைக் கொண்ட அலகுகளை வெளி மூலங்களிலிருந்து பெற்றதுடன் செயலாற்றத்தை அடிப்படையாகக் கொண்ட சம்பள அதிகரிப்புக்களையும் அறிமுகப்படுத்தியது. தொழிலாளர்களை சரியான முறையில் தொழிலுக்கமர்த்துவதனூடாக மேலதிக நேர வேலையின்செலவு கட்டுப்படுத்தப் பட்டமையும் மொத்தக்கூலிச் செலவைக் கட்டுப்படுத்த உதவியது. மொத்த உற்பத்திச் செலவில் வலுச்செலவின் பங்கு பெற்றோலிய விலைகளில் மேல்நோக்கிய திருத்தத்துடன் 2004 இன் 5.9 சதவீதத்தலிருந்து 2005 இல் 6.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. வலுச்செலவுகள் சீமெந்து மற்றும் மட்பாண்டக் கைத்தொழில்களின் உற்பத்திச் செலவில் குறிப்பிடத்தக்க விகிதாசாரத்தைக் கொண்டுள்ளன. சார்புரீதியில் குறைவாகக் காணப்பட்ட மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமான வட்டிச்செலவு முன்னைய ஆண்டின் மட்டமான 2.2 சதவீதத்திலேயே தொடர்ந்து விளங்கியது.

- **மனித மணித்தியாலம் ஒன்றுக்கு கூட்டப்பட்ட உண்மைப் பெறுமதியில் ஏற்படும் மாற்றத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படும் தொழிலாளர் உற்பத்தித்திறன் முன்னைய ஆண்டிலான 2.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2005 இல் 2.9 சதவீதத்தால் அதிகரித்தது.** தகவல் தொழில்நுட்பத்தின் விரைவான விரிவாக்கம் மற்றும் குறிப்பாக மட்பாண்டம், சீமெந்து, வெதுப்பகங்கள் மற்றும் இறப்பர் கையுறைக் கைத்தொழில்களில் தன்னியக்க முறைமைகள் நிறுவப்பட்டமை தொழிலாளர் உற்பத்தித்திறனை மேம்படுத்த உதவியது. 2005 இல் தொழிலாளர் உற்பத்தித் திறனிலான மேம்பாடும், தொழிற்பாடுகளை ஒழுங்குபடுத்தல், மனிதவலுவைப் பயன்படுத்தும் விதத்தில் தொழிலுக்கமர்த்தல், சிறந்த முகாமைத்துவ நடைமுறைகள் அறிமுகப்படுத்தல் மற்றும் தேர்ச்சிகளின் அபிவிருத்தி என்பவற்றுக்கு தயாரிப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்ட தீவிர முயற்சிகளால் ஏற்பட்டது.

- **பெருந்தோட்டப் பயிர்களின் பதனிடலும் கூட்டப்பட்ட பெறுமதி நியதிகளில் 2004 இன் 1.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இது தேயிலை மற்றும் இறப்பரின் உயர் உற்பத்தியால் ஏற்பட்டது. தெங்கு உற்பத்தி வீழ்ச்சியடைந்ததுடன் இது தேங்காயத்துருவல் மற்றும் தேங்காய் எண்ணெய்யின் உற்பத்தியில் எதிர்க்கணிய விளைவைக் கொண்டிருந்தது.

- **சிறுகைத்தொழில்துறை முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட புறக்கணிக்கத்தக்க வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 9.8 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** சிறு கைத்தொழிற் துறைக்கான உந்துசக்தி சாதகமான வேளாண்மைத் துறையின் செயலாற்றத்தால் ஏற்பட்டதாகும். சாதனைமிக்க நெல் அறுவடை அதே போன்று துணை உணவுப் பயிர்களிலான வளர்ச்சி என்பன நெல் குற்றல் ஏனைய பொருட்களின் குற்றல் மற்றும் அரைக்கும் செயற்பாடுகளை அதிகரித்தது. இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் தெங்கு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக கயிறு, தேங்காய்ச்சிரட்டை மற்றும் உலாத்திய தேங்காய் தொடர்பான பொருட்களின் சிறிய அளவிலான உற்பத்தியும் வீழ்ச்சியடைந்தது. கட்டவாக்கத் துறையிலான தொடர்ச்சியான விரிவாக்கத்துடன் மரம் அரிதல், கல்லுடைத்தல் மற்றும் ஓடுகள், செங்கட்டிகள், சீமெந்துக் கலவைக் கட்டிகள்

மற்றும் இது தொடர்பான உற்பத்தியும் கணிசமானளவில்அதிகரித்தது. அதிகரித்துச் செல்லும் தலைக்குரிய வருமானத்துக்கு இணைந்துசெல்லும் வகையில் எடுத்துச்செல்லும் உணவுப்பொதி ஆடையும் பாதணியும் மற்றும் ஆபரணங்களின் உற்பத்தியும் ஓரளவிற்கு அதிகரித்தன.

- **கட்டடவாக்கத்துறை முன்னைய ஆண்டில் பதிவு செய்த 6.6 வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2005 இல் 8.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** சுனாமியால் சேதமாக்கப்பட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பை மீள்நிர்மாணிப்பதற்கு 2005 இல் பலதரப்பட்ட மீள்நிர்மாணச் செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இவை நிரந்தர வதிவிடங்கள் போன்று தற்காலிக வதிவிடங்களை கட்டுதல் மற்றும் புகையிரதப்பகுதி மற்றும் வீதிகள் போன்ற ஏனைய உட்கட்டமைப்புச் செயற்றிட்டங் களையும் உள்ளடக்கியிருந்தன. குறிப்பாக, வீதி அபிவிருத்தி, நீர் விநியோகம் மற்றும் சுகாதார மும் நீர்ப்பாசனமும் என்பவற்றில் தற்போது நடைபெற்றுவரும் வெளிநாட்டு நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களும் 2005 இல் தொடர்ந்து நடைபெற்றன. இத்துறையிலான வளர்ச்சி, சீமெந்து உள்ளடங்கலான கட்டடப் பொருட்களின் இறக்குமதி அளவுகளிலிருந்தும் உள்நாட்டு உற்பத்தியிலிருந்தும் புலப்படுகிறது. 2005 இன் முதலரைப் பகுதியில் சீமெந்து விற்பனைகள் கணிசமானளவில் அதிகரித்ததுடன் இரண்டாம் அரைப்பகுதியில் இதைவிடக் கூடிய வீதத்தால் அதிகரித்தன. இவ்வாண்டில், அநேகமான கட்டடப் பொருட்களின் விலை மட்டங்கள் கணிசமானளவில் அதிகரித்தன. கட்டடவாக்கப் பயிற்சி மற்றம் அபிவிருத்தி நிறுவனத்தின்படி பொதுவான விலைமட்டம் 2004 உடன் ஒப்பிடுகையில் 14 சதவீதத்தால் அதிகரித்தது.

- **மின்வலு மற்றும் நீர்த்துறை 2004 இன் 2.5 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2005 இல் 23.3 சதவீதத்தால் விரிவடைந்தது.** குடியலகு, வர்த்தக மற்றும் கைத்தொழில் துறைகளில் வளர்ச்சியடைந்து வரும் கேள்வியுடன் மின்வலு உருவாக்கம் 2005 இல் அதிகரித்தது. நீர் மின்வலு உருவாக்கம் 16.7 சதவீதத்தாலும், வெப்ப மின்வலு உருவாக்கம் 4.6 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்ததால் மின் உருவாக்கம் விரிவடைந்தது. மொத்த மின்வலு உருவாக்கத்தில் கிட்டத்தட்ட 61 சதவீதம் வெப்பமின்வலுவால் எதிர்கொள்ளப்பட்டது. 2004 இன் 63 சதவீதத்திலிருந்து வெப்ப மின்வலுவின் பங்களிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி 2005 இன் இறுதிக் காலாண்டில் நீர் மின்வலுவின் அதிகளவிலான உருவாக்கம் காரணமாக ஏற்பட்டது. மின்வலுத் துறையிலான பெறுமதிகூட்டல், உயர் நீர்மின்வலு உருவாக்கத்தாலும் சார்புரீதியில் உயர் செலவுகளில் இலங்கை மின்சபையால் வாடகைக்கமர்த்தப்பட்ட மின்வலு உருவாக்கத் திலிருந்து சார்புரீதியில் குறைந்த செலவில் வெப்ப மின்வலுவை உற்பத்தி செய்யும் தனியார்துறை வெப்ப மின்வலு உருவாக்கத்துக்கான நகர்வாலும் 26.3 சதவீதத்தால் அதிகரித்தது. சாதகமான வானிலை நிலைமைகள் காரணமாக இலங்கை மின்சபையின் நீர் மின்வலு உருவாக்கம் 15.2 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் வெப்ப மின்வலு உருவாக்கம் 13.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்ததுடன் தனியார்துறையின் நீர் மின்வலு உருவாக்கம் மற்றும் வெப்ப மின்வலு உருவாக்கம் முறையே 36.1 சதவீதத்தாலும், 47.3 சதவீதத்தாலும் அதிகரித்தன. தனியார்துறை மின்வலு உருவாக்கத்தின் பங்கு 2004 இன் 34.5 சதவீதத்திலிருந்து 2005 இல் 39.1 சதவீதத்துக்கு அதிகரித்தது. குழாய் நீர் விநியோகம் 2005 இல் 3.8 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் வீட்டு நுகர்வோர் மற்றும் வீடல்லா நுகர்வோருக்கான கட்டண வீதங்கள் 2005 மார்ச்சிலிருந்து மேல்நோக்கித் திருத்தப்பட்டன.

- **சுரங்கமகிழ்தல் மற்றும் கல்லுடைத்தல் துறை பெறுமதி கூட்டப்பட்ட நியதிகளில் முன்னைய ஆண்டின் 7.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 14.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இரத்தினக் கற்கள் அகழ்தல் மற்றும் ஏனைய சுரங்கமகழ்தல் செயற்பாடுகள் ஆகிய இரண்டினதும் சாதகமான செயற்பாடு காரணமாக சுரங்கமகழ்தல் துணைத்துறை 28 சதவீதத்தால் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தது. இரத்தினக்கற்களின் ஏற்றுமதிகள் அளவு நியதிகளில் 20.2 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் ஏனைய சுரங்கமகழ்தல் செயற்பாடுகள் கனிப்பொருள் மணல் மற்றும் பொசுபேற்றின் அதிகரித்த உற்பத்தி காரணமாக அளவு நியதிகளில் 77.9 சதவீதமளவில் அதிகரித்தன. காரியத்தின் உற்பத்தி வீழ்ச்சி யடைந்திருக்கையில் ஏற்றுமதிச் சநதைக்கான உயர்தரத்திலான கூட்டல் அதிகரித்தது. கட்டடவாக்கத் துறையிலான அதிகரித்த செயற்பாடுகள் காரணமாக கல்லுடைத்தல் துணைத்துறையும் 8.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது.

**சிறப்புக் குறிப்பு - 6**

## சுனாமியின் பின்னரான மீட்சி மற்றும் மீள்கட்டுமான நடவடிக்கைகள்

2004 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமியின் காரணமாக 35,322 மனித உயிர்கள் இழக்கப்பட்டதுடன் 21,441 நபர்கள் காயமடைந்தும் ஏறக்குறைய 500,000 நபர்கள் இடம்பெயர்ந்தும் 1,500 சிறுவர்கள் பெற்றோரை இழந்தும் உள்ளார்கள். இது மெய்சொத்துக்கள் மற்றும் உட்கட்டுமானம் என்பவற்றில் பாரிய பாதிப்பினை ஏற் படுத்தியதுடன் ஜீவனோபாய இழப்பிற்கும் காரணமாயிருந்தது. உடனடி நிவாரணம் மற்றும் உதவி நடவடிக்கைள், உள்ளூர் பொதுமக்கள், அரசாங்கம், தனியார்துறை இருபக்க மற்றும் பல்பக்க நன்கொடையாளர்கள் மற்றும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டன. அரசாங்கம் ரூ.12 பில்லியனை சுனாமியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக செலவழித்தது. மீட்சியடைதல் மற்றும் மீள்கட்டுமான செயற்பாட்டிற்கு 3-5 ஆண்டுகள் எடுப்பதுடன் ஐ.அ.டொலர்கள் 2.2 பில்லியன் செலவாகும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. சர்வதேச நன்கொடையாளர் சமூகம் மீட்சி மற்றும் மீள்கட்டுமான நடவடிக்கைகளுக்காக ஐ.அ. டொலர்கள் 2.8 பில்லியனை வழங்குவதற்காக உறுதியளித்திருக்கும் அதேவேளை ஐ.அ.டொலர் 258.6 மில்லியன் (ரூ.26.3 பில்லியன்) கடன் நிவாரணமாக (முதல் மற்றும் வட்டி கொடுப்பனவுகள்) கிடைக்கப்பெற்றன.

சுனாமிக்குப் பின்னரான மீட்சியடைதல் மற்றும் மீள்கட்டுமான நடவடிக்கைகள் நான்கு பிரதான நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றது; (i) வீடுகளை கட்டுதல் (ii) ஜீவனோபாயத்தினை பழைய நிலைக்கு கொண்டுவருதல் (iii) சுகாதாரம், கல்வி என்பவற்றை வழங்குதலும் பாதுகாத்தலும் (iv) தேசிய உட்கட்டுமானத்தினை கட்டியெழுப்புதல்.

**வீடுகளை நிருமாணித்தல்:** மொத்த வீடுகளுக்கான தேவைகள் 87,525 ஆக இருந்ததுடன் அதில் 32,000 நன்கொடைகளைக் வீடு கட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கட்டப்படவுள்ளதுடன் மீதி 55,525 வீட்டு உரிமையாளர்களினால் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கட்டப்பட இருக்கிறது. நன்கொடையாளர் வீடுகட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 29,640 வீட்டு அலகுகளுக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதுடன் அதில் 10,707 அலகுகள் 2005 இன் இறுதியில் வேறுபட்ட நிலையில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. வீட்டு உரிமையாளர்களினால் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரசாங்கமானது 2005 இல் இறுதியில் 3.6 பில்லியன் உதவியினை முழுமையாக பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு ரூபா 250,000 என்ற அடிப்படையும் மற்றும் பகுதியாக பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு ரூ.100,000 மீள்கட்டுமான தேவைகளுக்காக தவணை அடிப்படையில் வழங்கியது.

**ஜீவனோபாயத்தினை பழையநிலைக்கு கொண்டுவருதல்:** சுனாமி காரணமாக ஏறக்குறைய 150,000 தொழில்வாய்ப்புக்கள் இழக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடுகள் தெரிவிக்கின்றது. இதில் ஏறக்குறைய 50 சதவீதமானவை மீன்பிடித்துறையிலும் 45 சதவீதமானவை சுற்றுலா சிறிய வியாபாரம் மற்றும் வர்த்தகம் மற்றும் சுய தொழில்வாய்ப்பு என்பவை உள்ளடங்கலாக சேவை துறையிலும் 5 சதவீதமானவை வேளாண்மைத் துறையிலும் காணப்பட்டன. ஆரம்ப நிலையில் அரசாங்கமானது ஒரு மாதத்திற்கு ஒரு குடும்பத்திற்கு ரூபா 5,000 பணஉதவி மற்றும் ஒரு கிழமைக்கு ஒரு நபருக்கு ரூபா375 பெறுமதியான உணவுப் பங்கீடு என்பவற்றை ஒழுங்கு செய்தது.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஜீவனோபாயத்தினை பழையநிலைக்கு கொண்டு வருவதற்கு மத்திய வங்கியினால் அறிமுகப் படுத்தப்பட்ட நிதியிடல் திட்டங்கள், தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம், வர்த்தக வங்கிகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவி புரிந்தன. 2005 இன் இறுதியில் மத்திய வங்கியானது நிதிநிறுவனங்களினூடாக 8,000 செயற்றிட்டங்களுக்கு 3.6 பில்லியனை வழங்கி உதவியது. தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியமானது ரூ.700 மில்லியன் பெறுமதியான 5,570 கடன்களை வழங்கி உதவியது. சுனாமியின் காரணமாக அழிந்துபோன அல்லது பழுதடைந்த மீன்பிடி வள்ளங்களில் ஏறக்குறைய 90 சதவீதமான 24,185 மீன்பிடி வள்ளங்கள் 2005 இன் இறுதியில் மீளமைக்கப்பட்டன. சுற்றுலாத்துறையின் விரைவான மீளமைப்பும் பல நபர்களுக்கு ஜீவனோபாயத்தினை மீளப் பெற்றுக்கொள்ள உதவியது. பாதிக்கப்பட்டு வேலையற்றவர்களினால் ஏறக்குறைய 70-85 சதவீதமானவர்கள் 2005 இன் இறுதியில் தமது பிரதான வருமான மூலத்தினை மீளப் பெற்றுக் கொண்டார்கள்.

**சுகாதாரம், கல்வி என்பவற்றை வழங்குதலும்:** பாதுகாத்தலும் மொத்தமாக 97 சுகாதார வசதிகள் சுனாமியின் காரணமாக சேதமடைந்தன. சுகாதார அதிகாரிகளினால் முதன்மை கொடுத்து கவனிக்க வேண்டிய துறைகளாக பாதிக்கப்பட்ட சுகாதார வசதிகளை நிர்மாணித்தல் மற்றும் தேவையான மருத்துவ உதவிகளை வழங்கல், சுகாதாரத் துறையினரைத் திரட்டுதல், நோய்த்தடுப்பு, மனநல பிரச்சினைகளைக் கட்டுப்படுத்தல் கவனத்தில் கொள்ளல் என்பன காணப்படுகின்றன. சுகாதார அதிகாரிகளினால் அறிமுகப்படுத்தப்பட்ட சிறந்த தடுப்பு வழிமுறைகளின் காரணமாக நீரிலிருந்தான நோய்கள் அல்லது ஏனைய தொற்றுநோய்கள் பரவியமை பற்றி அறிவிக்கப்படவில்லை.

**சிறப்புக் குறிப்பு - 6 தொடர்ச்சி**

பாதிக்கப்பட்ட அனைத்து சுகாதார நிறுவனங்களையும் புனர்நிர்மாணம் செய்வதற்காக நன்கொடை முகவர்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. 2005 இறுதியில் 10 தாய் சேய், நல நிலையங்கள் மற்றும் ஒரு மத்திய மருந்தகம் என்பவற்றின் நிர்மாணம் பூர்த்தியாக்கப்பட்டது. அனைத்து பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலும் இருந்து உளநல தேவைகளை கவனிப்பதற்காக 500 இற்கும் மேற்பட்ட சமூக உதவி அலுவலர்கள் பயிற்றுவிக்கப்பட்டார்கள்.

கல்வித்துறையில் 182 பாடசாலைகள் பகுதியாகவோ அன்றி முழுமையாகவோ சுனாமியின் காரணமாக பாதிக்கப்பட்டதுடன் 100,000 மாணவர்களும் நேரடியாக பாதிக்கப்பட்டனர். மேலும் 446 பாடசாலைகள் முகாம்களாக பாவிக்கப்பட்டதனால் மேலும் 100,000 மாணவர்கள் பாதிக்கப்பட்டனர். நியம சிறுவர் நட்புறவு வடிவமைப்பில் 180 பாடசாலைகளை மீள்நிர்மாணம் செய்வதற்கு நன்கொடையாளர்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. 18 பாடசாலைகளின் நிர்மாணப் பணிகள் 2005 இன் இறுதிப்பகுதி வரை ஆரம்பிக்கப்பட்டிருந்தன. பாதிக்கப்பட்ட பாடசாலைகளின் நிர்மாணப் பணிகளில் 75 சதவீதத்திற்கும் மேலான 2006 இன் இறுதிப்பகுதியில் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சிறுவர் நன்னடத்தை பாதுகாப்பு திணைக்களம் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை என்பன தொடர்பான ஐக்கிய நாடுகளின் முகவர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து சிறுவர் பாதுகாப்பிற்கான முன்னேற்பாடுகளை மேற்கொண்டன. சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பல்வேறு சட்டபூர்வ முகாம்கள் நடாத்தப்பட்டதுடன் அங்கு தேசிய அடையாள அட்டை, பிறப்பு சான்றிதழ், திருமண சான்றிதழ் என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் அல்லது புதிய ஆவணங்களை வழங்கப்பட்டன.

**தேசிய உட்கட்டுமானத்தினை தரமுயர்த்துதல்:** சுனாமியானது வீதிகள், புகைவண்டிப் பாதைகள், மின்வலு, நீர்வழங்கல் மற்றும் துறைமுக உட்கட்டுமானம் என்பவற்றில் பாரிய பாதிப்புகள் ஏற்பட காரணமாயிருந்தது. அண்ணளவாக 800 கிலோமீற்றர்கள் நீளமான தேசிய வீதிகள் 1,500 கிலோமீற்றர்கள் நீளமான மாகாணசபைகள் மற்றும் கிராம வீதிகள் பாதிக்கப்பட்டன. புனர்நிர்மாணம் செய்வதற்கான செலவு ஐ.அ.டொலர் 356 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட வீதிகளின் அவசர திருத்தவேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. களுத்துறையிலிருந்து மாத்தறைக்கான வீதிப் புனர்நிர்மானம் ஒத்தோபர் 2005 இல் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

இலங்கை புகைவண்டிப் பணிக்கு பாதிப்புக்களினால் ஏற்பட்ட மொத்த செலவு ரூ.1,485 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. கரையோர புகையிரத பணிகள் 2005 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் மீள தொடங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட மின்வலு வழங்கல் வலையமைப்பு புனர்நிர்மாணம் மற்றும் ஏனைய பாதிக்கப்பட்ட சொத்துக்கள் என்பன மீளத் திருத்தப்பட்டன. சேதமடைந்த நீர்வழங்கல் உட்கட்டமைப்பினை புனரமைத்து மேம்படுத்துவதற்கான மொத்தச் செலவு ஐ.அ.டொலர் 201 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளபோதிலும் நன்கொடைகளின் கடப்பாடு ஐ.அ.டொலர் 165 மில்லியனாக இருந்தது. காலி, திருகோணமலை, காங்கேசன்துறை துறைமுகங்களின் அவசர திருத்த வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

இலங்கையானது சுனாமியின் பின்னரான மீட்சி மற்றும் மீள்கட்டுமான நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை அடையக் கூடியதாக இருந்தபோதிலும் சில பகுதிகளில் நடவடிக்கைகளில் மெதுவான போக்கும் காணப்பட்டது. மீன்பிடி மற்றும் சுற்றுலாத் துறைகள் பொருளாதாரத் துறையில் குறிப்பிடத்தக்க பாதிப்பினை ஏற்படுத்திய போதிலும் எதிர்பார்க்கப்பட்டதனை விட விரைவாக மீட்சியடைந்தன. அரசாங்கத்தின் மொத்த செலவீடானது 2005 இன் மொத்த தேசிய உற்பத்தியின் 1.6 சதவீதமாக அதிகரித்ததுடன் வெளிநாட்டு உதவிகள், மற்றும் நிவாரண கடன்களின் கீழான தற்காலிக சேமிப்புகக்ள் என்பவற்றுடன் மிக அதிகளவில் நிதியிடப்பட்டது. 2005 இல் திரண்ட சென்மதிநிலுவையானது ஆரம்ப எதிர்பார்ப்பான ஐ.அ.டொலர்கள் 205 மில்லியன் பற்றாக்குறைக்கு எதிராக ஐ.அ.டொலர் 501 மில்லியன் மிகையினைப் பதிவு செய்தது.

**பணிகள்**

- **பணிகள் துறை பொருளாதாரத்தில் அதன் முக்கியத்துவத்தை பேணியதுடன் பொதுவான பொருளாதார வளர்ச்சிக்கு ஆகக்கூடியளவில் பங்களிப்புச் செய்தது.** தொடர்பூட்டல், நிதியியற் பணிகள் மற்றும் வேளாண்மை மற்றும் கைத்தொழில் பணிகளை இணைக்கும் ஏனைய வியாபாரப் பணிகளூடாக இவ்விரு துறைகளில் வடிய வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை இயலச்செய்யும் சூழலை வழங்குவதற்காக பணிகள் துறையிலான பல துணைத்துறைகள் கடந்த சில ஆண்டுகளில் உறுதியாகவும் செழிப்பாகவும் விரிவடைந்தன. இயலளவு வரையறைகள் மற்றும் உட்கட்டமைப்பு பற்றாக்குறைகள் போக்குவரத்துத்

துறையின் விரிவாக்கத்தை அதன் உள்ளார்ந்த வளமான வளர்ச்சியை விட மிகக் குறைவான வீதங்களுக்கு ஓரளவிற்கு கட்டுப்படுத்தின. போக்குவரத்துத் துறையிலான இவ்வரையறைகளும் உள்நாட்டு வர்த்தகத் துறையிலான உள்ளார்ந்த வளர்ச்சியைப் பாதித்தன. இதேவேளை பணிகள் துறையினுள் சுற்றுலாவிடுதி மற்றும் உணவகத்துறை சுனாமி காரணாக சுருக்கமடைந்தது.

- **முன்னைய ஆண்டுகளைப் போலவே, பணிகள்துறை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய உந்துசக்தியை வழங்கியது.** மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான பணிகள் துறையின் பங்களிப்பு 56 சதவீதமாக விளங்கி, இது மொத்த உள்நாட்டு வளர்ச்சியின் 59 சதவீதத்துக்குப் பங்களிப்புச் செய்தது. இத்துறை 2004 இன் 7.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2005 இல் 6.4 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. இத்தேய்வடைவு முக்கியமாக மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், சுற்றுலாவிடுதிகள் மற்றும் உணவுத் துறையிலான குறைந்த வளர்ச்சி காரணமாக ஏற்பட்டதாகும்.

- **மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் துறை முன்னைய ஆண்டின் 6.1 சதவீதங்களுடன் ஒப்பிடுகையில் 2005 இல் 2.6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இத்தேய்வடைவு இறக்குமதி வர்த்தகத்திலான குறைந்த வளர்ச்சியாலும், சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் துறையில் ஏற்பட்ட வீழ்ச்சியாலும் ஏற்பட்டது.

- **இறக்குமதி வர்த்தகம் முன்னைய ஆண்டிலான 9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2005 இல் 2.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** நுகர்வுப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்கள் ஆகிய மூன்று முக்கிய இறக்குமதி வகைகளிலும் தேய்வடைவு காணப்பட்டது. முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி 2004 இன் 18.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2005 இல் அளவு நியதிகளில் 4.2 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வகையில் கட்டடப் பொருட்கள், போக்குவரத்துக்கருவி மற்றும் ஏனைய முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் அதிகரித்திருக்கையில் பொறி மற்றும் கருவியின் இறக்குமதிகள் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன. இடைநிலைப்பொருட்கள் இறக்குமதிகளின் அளவு 2004 இன் 6.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் வளமாக்கி இறக்குமதிகள் மற்றும் ஆடைக் கைத்தொழிலுக்கான இறக்குமதிகளால் உந்தப்பட்டு 2.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகள் முன்னைய ஆண்டின் 3.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 0.9 சதவீதத்தால் அதிகரித்தன. உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகளினுள் அரிசி போன்ற அடிப்படை உணவுப் பொருட்களின் இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்தன. முக்கியமாக உந்துஊர்திகள் மற்றும் மருந்தாக்கற் பொருட்களையும் வீட்டுப்பாவனைப் பொருட்களையும் உள்ளடக்கிய ஏனைய நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் 2004 இன் 8.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன.

- **ஏற்றுமதி வர்த்தகத் துணைத்துறை 2005 இல் 6.9 சதவீதத்தால் விரிவடைந்தது.** பல்நாழிலை உடன்படிக்கை கட்டம்கட்டமாக நீக்கப்பட்ட போதிலும் கைத்தொழில் ஏற்றுமதி வருவாய்களில் கிட்டத்தட்ட 58 சதவீதத்துக்கு வகைகூறும் புடவைகள் மற்றும் ஆடைகள் துறை 5.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இதேவேளை பெற்றோலிய உற்பத்திகள் தவிர்ந்த ஏனைய சகல கைத்தொழில் ஏற்றுமதிகளும் சிறப்பாகச் செயலாற்றி 11.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. தேயிலையிலான மிதமான வளர்ச்சியாலும் சிறுவேளாண்மை ஏற்றுமதிகளிலான உயர் வளர்ச்சியாலும் வழிநடத்தப்பட்டு வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதிகள் 2.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. இவ்வாண்டில் தெங்கு உற்பத்தி 2.9 சதவீதத்தால் சுருங்கியதால் தெங்கு உற்பத்திகளின் ஏற்றுமதிகள் 9.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. இறப்பர் உற்பத்திகள் 10.2 சதவீதத்தால் அதிகரித்தபோதிலும் உள்நாட்டில் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களிலிருந்து வந்த உயர்ந்தளவில் அதிகரித்துச்செல்லும் கேள்வி இறப்பரின் மூலப்பொருள் வடிவிலான உயர் ஏற்றுமதிகளைத் தவிர்த்தது. இதனால், உயர் பெறுமதிகூட்டல் காரணமாக இறப்பரை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதி வருமானம் நடைமுறை நியதிகளில் 37 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

- **உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு வர்த்தகம் செய்யப்படுகின்ற பொருட்கள் மற்றும் வர்த்தகம் செய்யப்பட்ட பொருட்கள் என வரைவிலக்கணப்படுத்தப்படும் உள்நாட்டு வர்த்தக துணைத்துறை முன்னைய ஆண்டில் பதிவு**

**செய்யப்பட்ட 2.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2005 இல் 4.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சி உள்நாட்டு வேளாண்மையில், விசேடமாக நெல், மரக்கறிகள், துணை உணவுப் பயிர்கள் மற்றும் சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தியிலான சிறப்பான செயலாற்றத்தால் தூண்டப்பட்டது. மேலும் தொழிற்சாலைக் கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில்களின் திருப்திகரமான செயலாற்றமும் உள்நாட்டு வர்த்தகத்திலான இச்செழிப்பான வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தது.

- **சுற்றுலாவிடுதிகள் மற்றும் உணவகங்கள் துறை 2005 இல் சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட 3 சதவீத வீழ்ச்சியுடன், 29.0 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது.** சுனாமி தெற்கு மற்றும் கிழக்குக் கரையோரப் பகுதியில் பதிவு செய்யப்பட்ட 46 சுற்றுலாவிடுதிகளை (14,350 அறைகளில் கிட்டத்தட்ட 4,000 அறைகள்) அழித்தது. பகுதியளவில் சேதமாக்கப்பட்ட சுற்றுலாவிடுதிகளில் அநேகமானவை இவ்வாண்டில் பழையநிலைக்கு மீண்டன. 2005 இல் சுற்றுலா வருகைகளின் மொத்த எண்ணிக்கை முன்னைய ஆண்டின் 566,202 உடன் ஒப்பிடுகையில் 549,308 ஆக விளங்கியது. மேற்கு ஐரோப்பாவிலிருந்தான சுற்றுலா வருகைகள் 20 சதவீதத்தால் பெருமளவு வீழ்ச்சியடைந்த போதிலும் தெற்காசியா (12.8 சதவீதத்தால்), வடஅமெரிக்கா மற்றும் அவுத்திரேலியாவிலிருந்தான உயர் வருகைகள் இவ்வீழ்ச்சியைக் குறிப்பிட்ட அளவிற்கு எதிரீடு செய்தன. 2004 உடன் ஒப்பிடுகையில் இந்தியாவிலிருந்தான வருகை கூடிய அளவான 113,323 ஆக விளங்கி 8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருக்கையில் வழமையாக பலமான நிலையில் இருக்கும் ஐக்கிய இராச்சியம் 92,629 வருகைகளுடன் இரண்டாவதாக வந்து, இவ்வாண்டில் 13 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. வருகைகளிலான குறைவான வீழ்ச்சிக்கு மத்தியிலும் வெளிநாட்டு விருந்தினர் இரவுகள் 2004 இல் பதிவு செய்யப்பட்ட 14.4 சதவீத அதிகரிப்பிலிருந்து 40.1 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது. ஏனெனில், இச் சுற்றுலாப் பயணிகளில் அநேகமானோர் குறுகிய காலத்தங்கலுடன் வியாபாரம் மற்றும் மாறிச்செல்லும் பயணிகளாகக் காணப்பட்டனர். இதேவேளை, தரமிடப்பட்ட சகல சுற்றுலா விடுதிகளின் உள்நாட்டு விருந்தினர் இரவுகள் 14.7 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தன.

- **போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் தொடர்பூட்டல் துறை 2004 இல் பதிவு செய்த 13.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2005 ஆம் ஆண்டில் 12.7 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இவ்வளர்ச்சி முக்கியமாக தொடர்ச்சியாக விரிவடையும் தொலைத்தொடர்பூட்டல் துணைத் துறையின் வளர்ச்சியால் உந்தப்பட்டதாகும்.

- **வலையமைப்பு விரிவாக்கங்கள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பெறுமதி கூட்டல் பணிகளுடன் தொலைத் தொடர்பூட்டல் துணைத்துறை மேலும் 27 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இவ்வளர்ச்சி முக்கியமாக செல்லிடத் தொலைபேசிப் பாவனையின் மேல்நோக்கிய போக்காலும், ஆகப்பிந்திய தொழில்நுட்பமான பல்வழி குறியீட்டுப் பிரிவுடனான நிலையான பொருத்துக்களைக் கொண்ட கம்பியற்ற தொலைபேசிகள் பிரபல்யம் வாய்ந்து வருவதாலும், பணி வழங்குவோர்களுக்கிடையேயான போட்டி விலைகளாலும் உந்தப்பட்டது. வழமையாக நிலையாக பொருத்தப்பட்ட உள்நாட்டு இணைப்புக்களை வைத்திருப்போரின் எண்ணிக்கை 2004 இன் 4.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2005 இல் இவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 950,000 இற்கு 11 சதவீதத்தால் அதிகரித்தது. நிலையான பொருத்துக்களைக் கொண்ட கம்பியல்லா உள்நாட்டு இணைப்புக்களை வைத்திருப்போரின் எண்ணிக்கை இவ்வாண்டு முழுவதும் விரிவடைந்து கிட்டத்தட்ட 290,000 இற்கு 122 சதவீதத்திற்கு கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது. 2004 இல் 9 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்த இணையம் மற்றும் மின்அஞ்சலின் பாவனை 2005 இல் 23 சதவீதம் கொண்ட கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்தது. செல்லிடத் தொலைபேசியின் பாவனை 2004 உடன் ஒப்பிடுகையில் 52 சதவீதத்தால் அதிகரித்ததுடன் செல்லிடத் தொலைபேசியைப் பாவிப்போரின் எண்ணிக்கையும் 3.3 மில்லியனை விஞ்சியது. எனவே செல்லிடத் தொலைபேசியின் சந்தை நுழைவு விகிதம் (100 ஆட்களுக்கு செல்லிடத் தொலைபேசி இணைப்புக்கள்) 2004 இன் இறுதியிலான 11 இலிருந்து 2005 இல் கிட்டத்தட்ட 17 இற்கு அதிகரித்தது.

- **சரக்குக் கையாளால் களஞ்சியப்படுத்தல் மற்றும் பண்டகசாலை துணைத்துறை முன்னைய ஆண்டின் 12.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 9.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இம்மெதுவடைவு முக்கியமாக

கொழும்புத் துறைமுகத்தில் கையாளப்பட்ட உள்நாட்டு வெளியீட்டின் அளவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவான வளர்ச்சியைப் பதிவு செய்ததால் ஏற்பட்டதாகும். தொடர்பான காலப்பகுதியில், சவுத்ஏசியா கேற்வே, ரேமினல் உள்ளடங்கலாக கொழும்புத் துறைமுகம் 2,455,295 இருபது அடிக்குச் சமனான அலகுகளைக் கையாண்டதுடன் இது கடந்த ஆண்டினை விட 10.5 சதவீத அதிகரிப்பாகும். இதுவே கொழும்புத் துறைமுகத்தால் கையாளப்பட்டு பதிவு செய்யப்பட்ட அதிகூடிய அளவாகும். கையாளப்பட்ட மொத்த வெளியீட்டில், மூன்றில் இரண்டு பங்குக்கும் கூடுதலாக வகைகூறும் மாற்றிக் கப்பலேற்றலின் அளவு 2004 இன் 13.5 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 12.7 சதவீத்த்தால் விரிவடைந்தது. உள்நாட்டு வெளியீட்டு அளவு, இறக்குமதி வளர்ச்சி தேய்வடைந்ததன் காரணமாக முன்னைய ஆண்டின் 17 சதவீத்துடன் ஒப்பிடுகையில் 7.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. வான்சரக்கு அளவுகள் 3.6 சதவீதத்தால் மிதமானளவில் வளர்ச்சியடைந்து வான் போக்குவரத்துத் துறையிலான விரிவாக்கத்தைப் பிரதிபலிக்கின்றது.

- **பொருளாதாரத்தில் ஆகப்பெரிய பணித்துறைகளுள் ஒன்றான போக்குவரத்துத் துணைத்துறை முன்னைய ஆண்டின் 4.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 3.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இத்தேய்வடைவு, 2005 இல் பேரூந்து மற்றும் புகையிரதப் பயணிகள் போக்குவரத்திலான மோசமான செயலாற்றத்தாலும் வான் பிரயாண வகையில் ஏற்பட்ட மிதமான விரிவாக்கத்திலும் பிரதிபலிக்கப்பட்டது. இலங்கை புகையிரதப் பகுதியால் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கிலோமீற்றர்கள் 2004 இலான 1.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. புகைவண்டிப் போக்குவரத்தில் சுனாமியின் பாதகமான தாக்கம் மற்றும் திசெம்பர் 2004 இல் தென்கரையோர புகைவண்டிப் பாதையிலான பாரிய சேதத்தால் அதன் தொழிற்பட்ட கிலோமீற்றர்கள் குறைவடைந்தமை, 2005 இல் இலங்கைப் புகையிரதப் பகுதியில் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கிலோமீற்றர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியில் பகுதியளவில் பிரதிபலிக்கப்பட்டது. பொதுமக்கள் போக்குவரத்தில் தனியார் பேரூந்து வகையிலான வளர்ச்சிச் செயலாற்றம் சிறிதளவால் மேம்பட்டிருக்கையில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் செயலாற்றம் சுருக்கமடைந்தது. எனினும், முச்சக்கர வண்டிகள், வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஊர்திகள் மற்றும் தனியார் ஊர்திகளை உள்ளடக்கும் ஏனைய தனியார் போக்குவரத்துப் பணிகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அறிவித்தன. சிறீலங்கன் எயர்லைன்சாலும் ஏனைய உள்ளூர் வான் நிறுவனங்களாலும் பறக்கப்பட்ட பயணிகள் கிலோ மீற்றர்கள், சுனாமிப் பேரழிவு மற்றும் வான் போக்குவரத்துத் துறையில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்திய உயர் எரிபொருள் விலைகள் உள்ளடங்கலான பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் 2.8 சதவீதத்தால் அதிகரித்தன. வீதி வழிப்போக்குவரத்து 4.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து, உள்நாட்டு உற்பத்தியிலான கணிசமான அதிகரிப்புக்கள் மற்றும் இறக்குமதி வர்த்தகத்திலான கூடியளவிலான மிதமான வளர்ச்சியுடன் பொருட்கள் போக்குவரத்துச் செயற்பாடுகளில் விரிவாக்கத்தைப் பிரதிபலிக்கின்றது.

- **நிதியியற் பணிகள், உண்மைச்சொத்து மற்றும் வியாபாரப் பணிகள் துறை சிறப்பாகச் செயலாற்றி 6.5 சதவீத வளர்ச்சியை பதிவு செய்திருக்கையில், இது பொதுவான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு 12.7 சதவீதத்தையும் பங்களிப்புச் செய்தது.** நிதியியல் பணிகளின் வளர்ச்சியே இவ்வளர்ச்சிக்கான முக்கிய காரணியாக விளங்கியது.

- **இவ்வாண்டில் நிதியியல் பணிகள் துணைத்துறை 7.5 சதவீத வளர்ச்சியை அறிவித்திருக்கையில் வங்கித்தொழில் துறை மட்டும் 3.8 சதவீதத்தால் வளர்ச்சியடந்தது.** கடன் வழங்கும் வீதங்க்ள் 2005 இல் கணிசமானளவில் அதிகரிக்காதபோதிலும், வங்கித்தொழில் துறையிலிருந்தான வட்டி வருமானம் நடைமுறை நியதிகளில் 22 சதவீத அதிகரிப்பை அறிவித்து உயர் கொடுகடன் வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றது. எனினும், வெளிநாட்டுச் செலாவணி வியாபாரத்திலான வட்டியல்லா வருமானம் மற்றும் பிணையங்களிலும் முதலீடுகளிலுமான பங்குலாபங்கள் வீழ்ச்சியடைந்தன. இவ்வாண்டில் காப்புறுதி மற்றும் ஏனைய நிதியியற் பணிகள் நிதிக்கம்பனிகளின் குத்தகை மற்றும் தவணைக் கொள்வனவுப் பட்டியலிலிருந்தான கணிசமான அதிகரிப்பாலும் ஏனைய நிதியியல் நிறுவனங்களிலிருந்தான திருப்திகரமான செயலாற்றத்தாலும் 10.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன.

அட்டவணை 2.10
**திரண்ட கேள்வி**

| விடயம் | நடைமுறைச் சந்தைவிலைகளில் (ரூ.மில்லியன்) | | | நிலையான (1996) விலைகள் (ரூ.மில்லியன்) | | |
|---|---|---|---|---|---|---|
| | 2003 | 2004(அ) | 2005(ஆ) | 2003 | 2004(அ) | 2005(ஆ) |
| **அ. உள்நாட்டுக் கேள்வி** | | | | | | |
| நுகர்வு | 1,481,164 | 1,706,994 | 1,958,887 | 935,238 | 981,917 | 1,010,296 |
| (% மாற்றம்) | 9.4 | 15.2 | 14.8 | 6.2 | 5.0 | 2.9 |
| மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 388,757 | 506,942 | 625,983 | 263,497 | 294,255 | 325,910 |
| (% மாற்றம்) | 16.1 | 30.4 | 23.5 | 16.0 | 11.7 | 10.8 |
| **மொத்த உள்நாட்டுக் கேள்வி** | 1,869,921 | 2,213,936 | 2,584,870 | 1,198,735 | 1,276,172 | 1,336,206 |
| **(% மாற்றம்)** | 10.8 | 18.4 | 16.8 | 8.2 | 6.5 | 4.7 |
| **ஆ. வெளிநாட்டுக் கேள்வி** | | | | | | |
| பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 632,907 | 736,967 | 792,415 | 394,284 | 424,137 | 447,943 |
| (% மாற்றம்) | 10.9 | 16.4 | 7.5 | 5.4 | 7.6 | 5.6 |
| பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் | 741,667 | 921,537 | 1,011,583 | 566,367 | 617,732 | 636,429 |
| (% மாற்றம்) | 9.5 | 24.3 | 9.8 | 10.2 | 9.1 | 3.0 |
| தேறிய வெளிநாட்டுக் கேள்வி | -108,760 | -184,571 | -219,168 | -172,083 | -193,595 | -188,486 |
| **இ. மொத்தக் கேள்வி** | 1,761,161 | 2,029,365 | 2,365,702 | 1,026,652 | 1,082,577 | 1,147,720 |
| **(% மாற்றம்)** | 11.3 | 15.2 | 16.6 | 6.0 | 5.4 | 6.0 |

(அ) திருத்தப்பட்டுள்ளது
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

- ***2004 இல் 1.7 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்த உண்மைச்சொத்து வாடகைக்குவிடல் மற்றும் வியாபாரப் பணிகள் 2.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து அப்பணிகளுக்கான தொடர்ச்சியான கேள்வியைப் பிரதிபலிக்கின்றன.*** தொடர்மாடி மற்றும் வீடமைப்பு செயற்றிட்டங்களின் ஏனைய வகைகளை உள்ளடக்கிய உண்மைச்சொத்து அபிவிருத்தியில் பங்கேற்ற பல கம்பனிகள் 2005 ஆம் ஆண்டில் உயர் இலாபங்களை அறிவித்தன. விளம்பரப்படுத்தல் பணிகள் மற்றும் கணனி மென்கல, அபிவிருத்திச் செயற்பாடுகளை உள்ளடக்கிய வியாபாரப் பணிச்செயற்பாடுகளும் உயர் வளர்ச்சியைப் பதிவு செய்தன.

- ***பொதுநிருவாகம், ஏனைய அரச பணிகள் மற்றும் பாதுகாப்பு ஏனைய சமுதாய, சமூக மற்றும் தனியார் பணிகள் துறை முன்னைய ஆண்டின் 3.9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 5.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.*** 2004 இன் நான்காம் காலாண்டில் அரசசேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட 42,000 வேலையற்ற பட்டதாரிகள் இவ்வாண்டில் வெவ்வேறான அரச நிறுவனங்களுக்கு நியமிக்கப்பட்டதுடன் இவர்களில் மூன்றிலொரு பங்கிற்கும் கூடுதலானோர் அரச கல்விச் சேவையினுள் உள்வாங்கப்பட்டனர். இவ்விரிவாக்கத்திலிருந்தான கூட்டப்பட்ட வெளியிடு முன்னைய ஆண்டின் 2.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் பொது நிருவாக துணைத்துறையில் பிரதிபலித்து 2005 இல் 5.1 சதவீதமாக வளர்ச்சியடைந்தது. ஏனைய சமுதாய, சமூக மற்றும் தனியார் பணித்துறை தனியார் நலக் கவனிப்புக் கைத்தொழில் மற்றும் கல்விப் பணிகளிலான செழிப்பான வளர்ச்சி பகுதிக் காரணத்தால் 6.0 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தன.

## 2.4 செலவினம்

- ***மொத்த உள்நாட்டுச் செலவினத்தால் அளவிடப்பட்டவாறு உள்நாட்டு பொருளாதாரச் செயற்பாட்டால் உருவாக்கப்பட்ட மொத்தக் கேள்வி 2005 இல் ரூ.2,585 பில்லியனுக்கு (நடைமுறைச் சந்தை விலைகளில்) 16.8 சதவீதத்தால் அதிகரித்தது.*** 2004 இல் மொத்த உள்நாட்டுக் கேள்வி 18.4 சதவீதத்தால் அதிகரித்தது. பொருளாதாரத்தின் தனியார் மற்றும் அரச துறைகளின் நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினத்தின் கூட்டுத்தொகையான மொத்த உள்நாட்டுச் செலவினம் 2004 இன் 6.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் உண்மை நியதிகளில் 4.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. 2005 இல்

செலவினம் உண்மை நியதிகளில் ஓரளவிற்கு குறைவான வீதத்திலேயே வளர்ச்சியடைந்தது. உண்மைய நியதிகளில் முதலீட்டு வளர்ச்சி நுகர்வு வளர்ச்சியை விட தொடர்ந்து உயர்வாகக் காணப்பட்ட போதிலும் இவ்விரு வீதங்களின் அதிகரிப்பு முன்னைய இரு ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் மெதுவடைந்தது. மொத்த உள்நாட்டுச் செலவினத்தாலும் தேறிய இறக்குமதிகளின் கூட்டுத்தொகையான சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி ரூ.2,366 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இது 16.6 சதவீத அதிகரிப்பாகும்.

## நுகர்வு

- **2005 இல் நுகர்வுச் செலவினம் 14.8 சதவீதத்தால் ரூ.1,959 பில்லியனுக்கு அதிகரித்தது.** இவ்வதிகரிப்பு உண்மை நுகர்வின் வளர்ச்சியில் ஏற்பட்ட 2.9 சதவீதத்தாலும் சராசரி விலை மட்டங்களில் ஏற்பட்ட 11.5 சதவீத அதிகரிப்பாலும் ஏற்பட்ட உச்ச அதிகரிப்பாகும். மொத்த நுகர்வில், தனியார் நுகர்வுச் செலவினம் 2004 இன் 14.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 14.9 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் அரச நுகர்வுச் செலவினம் 2004 இன் 18.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 18.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. 2005 இல் தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு மொத்த நுகர்வுச் செலவினத்தின் 90 சதவீதமளவில் தொடர்ந்து காணப்பட்டது. மொத்த தனியார் நுகர்வுச் செலவினத்தில் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் மீதான செலவினம் 18.6 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் செலவினம் 4.6 சதவீதத்தால் அதிகரித்தது.

- **2005 இல் உணவு மற்றும் குடிவகையல்லாத பானங்களின் பங்கு மொத்தச் செலவினத்தின் 32.3 சதவீதத்துக்கு சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது.** முன்னேற்றமடைந்துவரும் வாழ்க்கைத் தரங்களுடன் குடியலகின் செலவினம் அடிப்படைத் தேவையிலிருந்து ஏனைய துறைகளுக்கு குறிப்பாக பணிகளை நோக்கி திசைதிருப்பப்பட்டதை இது மீண்டும் உறுதிப்படுத்துகிறது. அநேகமான உணவுப் பொருட்களின் விலை மட்டங்கள் அதிகரித்துச் செல்வதன் மூலம் இவ்வகை மீதான பெயரளவுச் செலவினம் 13.5 சதவீதத்தால் வளர்ச்சியைடந்தது. மீன், உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக, ஏனைய புரதப் பொருட்களான இறைச்சி மற்றும் முட்டைகள் போன்றவற்றின் நுகர்வு அதிகரித்தது. மாப்பொருள் தானியம் மற்றும் பருப்பு வகைகளில்

**அட்டவணை 2.11**
**நடைமுறைச் சந்தை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் உள்ளமைப்பு**

| விடயம் | தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு % | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|
| | 2003 | 2004(அ) (ஆ) | 2005 (இ) | 04/ 03 | 05/04 |
| 1. உணவு, வெறியமல்லாக் குடிவகை | 34.3 | 32.6 | 32.3 | 9.0 | 13.5 |
| 2. வெறியக் குடிவகையும் புகையிலை மற்றும் போதைப்பொருள் | 5.1 | 4.4 | 4.3 | -1.6 | 13.0 |
| 3. புடவையும் காலணியும் | 5.6 | 6.0 | 5.7 | 24.6 | 8.8 |
| 4. வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் பணிகள் | 14.1 | 16.1 | 15.5 | 31.7 | 9.9 |
| 5. வீட்டுச் சாதனங்களும் திருத்தங்களும் | 4.4 | 5.0 | 5.0 | 30.2 | 14.2 |
| 6. நலம் | 3.6 | 3.7 | 3.7 | 19.1 | 15.3 |
| 7. போக்குவரத்து | 14.0 | 12.1 | 11.8 | -0.9 | 11.5 |
| 8. தொலைத் தொடர்பூட்டல் | 2.2 | 2.4 | 3.4 | 22.4 | 63.2 |
| 9. களியாட்டமும் பொழுதுபோக்கும் | 3.0 | 3.5 | 3.7 | 33.7 | 21.7 |
| 10. கல்வி | 1.2 | 1.6 | 1.6 | 49.0 | 14.0 |
| 11. உணவகங்களும் விடுதியும் | 1.2 | 1.4 | 1.4 | 28.5 | 15.2 |
| 12. பல்வகைப் பொருட்களும் பணிகளும் (ஈ) | 11.2 | 11.3 | 11.5 | 15.4 | 17.0 |
| மொத்தத் தனியார் நுகர்வுச் செலவு | 100.0 | 100.0 | 100.0 | 14.9 | 14.4 |

(அ) மதிப்பிடப்பட்டது
(ஆ) நுகர்வோர் நிதி சமூக பொருளாதார அளவீடு 2003/ 2004 இனை அடிப்படையாகக் கொண்டது.
(இ) தற்காலிகமானவை.
(ஈ) தனியாள் கவனிப்பு, தனியாள் பொருட்கள், சமூகப் பாதுகாப்பு, காப்புறுதி நிதியியல் பணிகள் மற்றும் வே.எ.கு மற்றைய பணிகள் உட்பட.

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.

நுகர்வும் 2005இல் அவற்றின் உயர்ந்த உற்பத்தியின் காரணமாக அதிகரித்தது.

- **ஏனைய இரண்டு அடிப்படைத் தேவைகளான ஆடைகள் மற்றும் வீடமைப்பும் அது தொடர்பான பணிகள் மீதான செலவினம் பெயரளவு நியதிகளில் 9 இலிருந்து 14 சதவீத வீச்சினுள் வளர்ச்சியடைந்தது.** இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை விட உயர் வீதத்தில் அதிகரித்துச்செல்லும் உள்நாட்டில் உற்பத்தி செய்த பொருட்களின் நுகர்வுடன் தைத்த ஆடைகள், துணிகள் ஏனைய துணித் துணைப்பொருட்கள் மற்றும் பாதணியை உள்ளடக்கிய ஆடை மற்றும் பாதணி மீதான செலவினம் 9 சதவீதத்தால் வளர்ச்சியடந்தது. வீட்டின் திருத்த வேலைகள், நீர் மின்வலு, வாயு மற்றும் எரிபொருள் போன்ற வீட்டுப் பணிகள் அதிகரித்துச்செல்லும் விலைகளுடன் 10 சதவீதத்தால் அதிகரித்தன.

- **வெறியக் குடிவகைகள், புகையிலை மற்றும் போதைப்பொருள் மீதான செலவினத்தின் பங்கு முன்னைய ஆண்டில் வீழ்ச்சியடைந்தபோதிலும் 2005 இல் செலவினம் 13 சதவீதத்தால் அதிகரித்தது.** இந்நுகர்விலான அதிகரிப்பு வெறியக்குடிவகைகளின் உற்பத்தி விரிவாக்க த்திலும் பிரதிபலிக்கப்பட்டது. எனினும், கலால் தீர்வைகள் மேல்நோக்கித் திருத்தப்பட்டதால் செலவினத்தின் பங்கு அநோகமாக மாற்றமுறாது தொடர்ந்து விளங்கியது.

- **போக்குவரத்து, கல்வி மற்றும் நலத்துறை மீதான பெயரளவிலான செலவினம் 12-15 சதவீத வீச்சினுள் வளர்ச்சியடைந்தது.** அதிகரித்துச் செல்லும் எண்ணெய் விலைகளைக் கொண்ட சூழலில் போக்குவரத்துத் துறை மீதான செலவினம் 2004 இன் 1 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 12 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. போக்குவரத்துப் பணிகள் போன்றே தனியார் போக்குவரத்துக்கருவியின் தொழிற்பாடு மீதான செலவினமும் பேரூந்து மற்றும் புகையிரதக் கட்டணங்களின் மேல்நோக்கிய திருத்தங்கள் மற்றும் உயர் எரிபொருள் விலைகளால் அதிகரித்தபோதிலும் 2004 இன் பிற்பகுதியில் உயர் இறக்குமதித் தீர்வைகளின் அறிமுகத்துடன் உந்து ஊர்திகளின் உயர் விலை மட்டங்கள் காரணமாக ஊர்திகளின் கொள்வனவு மீதான நுகர்வோர் செலவினம் வீழ்ச்சியடைந்தது. தனியார் பிர த்தியோகக் கல்வி மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களிலான விரிவாக்கத்துடன் தனியார் செலவின நியதிகளில் 2004 இல் உயர் வளர்ச்சியைப் பதிவு செய்த கல்வி மீதான செலவின வளர்ச்சி 2005 இல் ஓரளவிற்கு மெதுவடைந்தது.

- **தனியார் நுகர்வுச் செலவினத்தில் அதியுயர் வளர்ச்சியைக் கொண்ட வகையாக பெயரளவு நியதிகளில் 63.2 சதவீத வளர்ச்சியைக் கொண்ட தொடர்பூட்டல் பணிகள் விளங்கின.** நிலையான மற்றும் செல்லிடத் தொலைபேசிக்கான தொடர்ச்சியான கேள்வி மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பத்திலான ஏனைய முன்னேற்றமான பொருட்களுடன் இசைந்துசெல்லும் வகையில் தொடர்பூட்டல் பணிகளிலான அதிகரித்த நுகர்வோர் செலவினம் தொலைத்தொடர்பூட்டல் துறையின் விரைவான விரிவாக்கத்துடன் இணைந்துசென்றது.

- **பொழுதுபோக்கு மற்றும் களியாட்டம் உணவகங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் எனபன மீதான செலவினம் 15 சதவீதத்துக்கும் கூடுதலாக அதிகரித்தபோதிலும், வளர்ச்சி உத்வேகம் 2004 உடன் ஒப்பிடுகையில் மெதுவடைந்தது.** சுனாமியின் தாக்கம் பொழுதுபோக்குத் துறையினுள் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சியில் உணரப்பட்டது. எனினும், நுகர்வுக்கான அதிகரித்த கடன்பாடுகள் மட்டங்களுடன் பல தரப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் மீதான செலவினம் 17 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன.

- **தனியார் நுகர்வுச் செலவினத்தின் மேற்கூறிய பகுப்பாய்வு, அநேகமான நுகர்வு வகைகள் 2005 இல் உண்மை நியதிகளில் வளர்ச்சியடைந்ததை வெளிப்படுத்தியது.** தலைக்குரிய வருமானத்தின் தொடர்ச்சியான விரிவாக்கத்துடன் பணிகளின் நுகர்வு அநேகமான பொருட்களை விட உயர் வீதத்தில் வளர்ச்சியடைந்தது. இது அபிவிருத்தியுடன் இலங்கைக் குடித்தொகையின் வாழ்க்கை முறை கள் மேம்பட்டு வருவதை மீண்டும் உறுதிப்படுத்து கிறது. இங்கு நுகர்வின் பங்கு அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யத் தேவையான பொருட்களிலிருந்து பணிகளைத் தேர்ந்தெடுப்பதை நோக்கி நகர்கின்றது.

- **அரச நுகர்வு 2004 உடன் ஒப்பிடுகையில் அதே அளவினால் 2005 இலும் அதிகரித்தது.** அரச செலவினத்தில் ஏற்பட்ட விரிவாக்கம் பொருட்கள் மற்றும் பணிகளின் அதிகரித்த நுகர்வு போன்று சம்பளங்கள் மற்றும் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பால் ஏற்பட்டதாகும். சுனாமிப்

பேரழிவிற்குப் பின்பு சுனாமியால் பாதிக்கப்பட்ட ஜிவனோபாயங்களை நீடித்து நிலைத்திருக்கும் வகையில் மீள்நிர்மாணிப்பதற்குத் தேவையான மனிதாபிமான உதவி மற்றும் புனருத்தாபன வேலை மீதான செலவழித்தலுடன் அரச செலவினம் அதிகரித்தது. அத்துடன், அரச துறைக்கு 42,000 பட்டதாரிகளை சேர்த்துக்கொண்டது போன்றே 2004 இன் பிற்பகுதியிலான அரசதுறை சம்பள அதிகரிப்பும் 2005 இல் அரசின் கூலிச் செலவினத்தில் தாக்கத்தைக் கொண்டிருந்தது.

### முதலீடு

- **நடைமுறைச் சந்தை விலைகளிலான முதலீட்டுச் செலவினம் (மொத்த உள்நாட்டு மூலதன உருவாக்கம்) ரூ.626 பில்லியனாக மதிப்பிடப் பட்டுள்ளதுடன், இது 2004 உடன் ஒப்பிடுகையில் 23.5 சதவீத அதிகரிப்பாகும்.** உண்மை நியதிகளில் முதலீடானது 10.8 சதவீதத்தினால் அதிகரித்தது. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான முதுலீட்டு, விகிதம் 2004 இன் 25 சதவீதத்தில் இருந்து 26.5 சதவீதமாக அதிகரித்தது. இதற்கு அரச முதலீடே முழுவதும் காரணமாக இருந்ததுடன் இது 119.4 சதவீதத்தால் அதிகரிக்கையில் தனியார் முதலீடு 14.1 சதவீதத்தால் அதிகரித்தது.

- **அதேவேளை குறிப்பிடத்தக்க இரண்டாண்டு கால உயர் வளர்ச்சியின் இரண்டாண்டுகளின் பின் முதலீட்டு பொருட்களின் இறக்குமதிகள் மிதமாக வளர்ச்சியடைந்தன.** 2003 மற்றும் 2004 இல் யுத்தநிறுத்தத்தைத் தொடர்ந்து தனிநபர் முதலீடானது, தொலைத்தொடர்பூட்டல், போக்குவரத்து மற்றும் தொழிற்சாலைக் கைத்தொழில் போன்றவற்றில் குறிப்பிடத்தக்களவு அதிகரித்ததுடன் பல்துறை ஒப்பந்தத்தினை நீக்குவதற்கு தயாரான நிலைமையானது உயர்மட்ட பாதிப்பினை ஏற்படுத்தியது. இருப்பினும் 2005 இன் முதல் அரையாண்டு காலப்பகுதியில் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியானது 0.2 சதவீதமாக மிகக் குறைந்த அளவிலான வீழ்ச்சியினை காட்டியதுடன் இது ஆண்டின் இரண்டாவது அரையாண்டு காலப்பகுதியில் மிக விரைவாக வழர்ச்சியடைந்து பெறுமதி நியதிகளில் வருடாந்த வளர்ச்சியினை 4.2 சதவீதமாக பதிவு செய்தது. இந்த வளர்ச்சியானது 2004 இன் 18.4 சதவீத வளர்ச்சியினை தொடர்ந்தான உயர்மட்டமாகும். கடந்த இரண்டாண்டுகள் போலல்லாது 2005 இல் அரச முதலீடானது முதலீட்டு வளர்ச்சியில் குறிப் பிடத்தக்க பங்கினை வழங்கியது.

வரைபடம் 2-4
ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீட்டுச் சபைச் செயற்றிட்டங்கள்

செயற்றிட்டங்களின் எண்ணிக்கை




முதலீட்டுப் பெறுமதி




- **சுனாமி அழிவின் பின்னர் அரசதுறை மற்றும் தனியார் துறை முதலீடானது சுனாமினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் அவசிய தேவையான புனர்வாழ்வு மற்றும் மீள் கட்டுமான நடவடிக்கைகளுக்கு திருப்பப்பட்டது.** அரச முதலீடுகள் வீதிகளை மீள்கட்டுமானம் செய்வதற்கும் புகையிரதம் மற்றும் உட்கட்டுமானத்திற்கும் திருப்பப்பட்ட அதேவேளை இவ்வாண்டு காலப்பகுதியில் தனியார் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிதிகள், தற்காலிக வீடுகள் அல்லது கூடாரங்கள் அமைப்பதற்கும் பின்னர் நிரந்தர வீட்டு வசதிகள் மற்றும் ஏனைய நிவாரண வேலைகளுக்கு பயன்படுத்தப்பட்டது.

- **மொத்த முதலீட்டில் தனியார் துறை முதலீட்டுச் செலவினம் 84 சதவீதத்துக்கு வகைகூறிய 2005 இல் 14.1 சதவீதத்தால் விரிவடைந்தது.** தனியார் துறையையும் உள்ளடக்கிய அரச கூட்டுத் தாபனங்களால் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டில் வீழ்ச்சி ஏற்பட்ட வேளையில் அரச முதலீடுகள் மிகக் கூடுதலாக அதிகரித்துள்ளதால் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு தனியார் துறை முதலீட்டின் விகிதம் 2004 இன் 22.8 சதவீதத்திலிருந்து 2005 இல் 22.3 சதவீதத்திற்கு

**அட்டவணை 2.12**

**இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் கைத்தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு என்பவற்றின்கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளிலுள்ள முதலீடும் தொழில் நிலையும்**

| | செயற்றிட்ட எண்ணிக்கை | | எதிர்பார்க்கப்பட்ட மற்றும் உண்மையான முதலீடுகள் (ரூ.மில்லியன்) | | | | | | தொழில் நிலை எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2004 (அ) | 2005 (ஆ) | 2004 (அ) | | | 2005 (ஆ) | | | 2004 (அ) | 2005 (ஆ) |
| | | | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | | |
| **முதலீட்டுச்சபை** | | | | | | | | | | |
| ஒப்புதலளிக்கப்பட்ட | | | | | | | | | | |
| செயற்றிட்டங்கள் | 526 | 374 | 87,629 | 54,667 | 142,296 | 31,510 | 47,859 | 79,369 | 49,131 | 35,972 |
| பிரிவு 17இன் கீழ் | 296 | 223 | 69,706 | 53,777 | 123,483 | 27,768 | 46,765 | 74,533 | 41,002 | 29,382 |
| பிரிவு 16இன் கீழ் | 230 | 151 | 17,923 | 890 | 18,813 | 3,742 | 1,094 | 4,836 | 8,129 | 6,590 |
| பிரிவு 17இன்கீழ் ஒப்பந்தம் | | | | | | | | | | |
| செய்யப்பட்ட செயிட்டங்கள் | 228 | 167 | 36,536 | 32,248 | 68,784 | 32,363 | 41,902 | 74,265 | 35,614 | 24,536 |
| வர்த்தகத் தொழிற்பாடுகள்(இ) | 1,867 | 1,871 | 208,696 | 110,769 | 319,465 | 233,522 | 146,607 | 380,129 | 437,698 | 410,851 |
| பிரிவு 17இன் கீழ்(இ) | 2,360 | 2,338 | 169,743 | 144,272 | 314,015 | 175,110 | 154,313 | 329,423 | 392,259 | 387,811 |
| பிரிவு 16இன் கீழ்(இ) | 1,602 | 1,571 | 153,650 | 132,950 | 286,600 | 158,934 | 142,976 | 301,910 | 355,455 | 350,758 |
| **கைத்தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு** | | | | | | | | | | |
| **அமைச்சு** | 758 | 767 | 16,093 | 11,322 | 27,415 | 16,176 | 11,337 | 27,513 | 36,804 | 37,053 |
| பதிவு செய்யப்பட்ட செயற்றிட்டங்கள் | 1,604 | 1,641 | வி.கி | வி.கி | 115,498 | வி.கி | வி.கி | 118,502 | 278,397 | 282,036 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை
(இ) ஆண்டின் இறுதியில் ஒன்று சேர்ந்த தொகை

மூலங்கள்: இலங்கை முதலீட்டுச்சபை
கைத்தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு

வீழ்ச்சியடைந்தது. சேதமடைந்த சுற்றுலா விடுதிகளின் மீள்நிர்மாணம் உள்ளடங்கலாக சுனாமி மீள்நிர்மாண வேலைக்காக வந்த தனியார் முதலீட்டை விட ஏனைய கைத்தொழில் மற்றும் பணிகள் துறை நடவடிக்கைகளும் மேம்பாடடைந்த உற்பத்தித்திறன், இயலளவு விரிவாக்கம் மற்றும் புதிய கைத்தொழில்களை ஆரம்பித்தல் என்பவற்றுக்கான முதலீடுகளை ஈர்த்தன.

- **இலங்கைக்கான வெளிநாட்டு நேரடி முதலீட்டுப் பாய்ச்சல் 2005 இல் ஐ.அ.டொலர் 287 மில்லியனுக்கு 22.6 சதவீதத்தால் அதிகரித்ததுடன் இது மொத்த முதலீட்டின் 5 சதவீதமளவில் விளங்கியது.** நாட்டின் பிரதான முதலீட்டு ஊக்குவிப்பு நிறுவனமான முதலீட்டுச்சபை 2005 இல் முதலீட்டுச்சபைச் சட்டத்தின் பிரிவுகள் 16 மற்றும் 17 இன் கீழ் ரூ.79.4 பில்லியன் கொண்ட முதலீட்டுக்கடப்பாட்டுடன்374 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இது 2004 இன் ரூ.142.3 பில்லியன் கொண்ட கடப்பாட்டுடன் ஒப்புதலளிக்கப்பட்ட 526 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடத்தக்கது. ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கூறுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கியமாக முதலீட்டுச் சபையால் பின்பற்றப்பட்ட கடுமையான சரிபார்த்தல் முறைகளால் ஏற்பட்டதாகும். முதலீட்டுச்சபை சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை 2004 இன் 228 இலிருந்து 2005 இல் 167 இற்கு வீழ்ச்சியடைந்திருக்கையில் ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீட்டின் பெறுமதி உள்நாட்டு முதலீட்டுக் கூறில் ஏற்பட்ட உயர் பெறுமதி காரணமாக 2005 இல் ரூ.74.3 பில்லியனுக்கு 8 சதவீதத்தால் அதிகரித்தது. முதலீட்டுச்சபைக் கைத்தொழில்களில் அடையப்பட்ட முதலீட்டு 2005 இல் ரூ.61 பில்லியனாக விளங்கி 2005 இறுதியில் அடையப்பட்ட திரண்ட முதலீடு ரூ.380 பில்லியனாக விளங்கியது.

- **முதலீட்டுச்சபைச் சட்டத்தின் பிரிவுகள் 16 மற்றும் 17 இன் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட 374 செயற்றிட்டங்களில், 150 வெளிநாட்டினருக்குச் சொந்தமானதாகவும் மற்றும் 119 கூட்டுத்தொழில் முயற்சியாகவும் இருக்கையில் எஞ்சியவை இலங்கையர்களுக்குச் சொந்தமானதாகும்.** குறிப்பாக உண்மைச்சொத்து, தொடர்பூட்டல், சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள், வியாபாரப் பணிகள் ஆகிய புதிய வளர்ச்சித் துறைகளில் முதலீட்டுப் பாய்ச்சல்களின் முக்கிய பெறுனர்களாக தொழிற்சாலையல்லாக் கைத்தொழிற் துறைகள்

விளங்கின. இத்துறைகள் 2005 இல் ரூ.53 பில்லியன் முதலீட்டுக் கடப்பாட்டுடன் 245 ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களைக் கவர்ந்தன. தொழிற்சாலைக் கைத்தொழில்துறை 2005 இல் ரூ.26 பில்லியன் முதலீட்டுக் கடப்பாட்டுடன் 126 ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களை உள்வாங்கியது. 2005 இல் இத்துறையில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களினுள் முதலீட்டின் ஆகக்கூடிய பங்கு உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகளால் (15 செயற்றிட்டங்கள்) உள்வாங்கப்பட்டதுடன் இதைத் தொடர்ந்து புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் (34 செயற்றிட்டங்கள்) உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (20 செயற்றிட்டங்கள்) மற்றும் இரசாயனம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் (12 செயற்றிட்டங்கள்) என்பவற்றால் உள்வாங்கப்பட்டன.

- **தொழிற்சாலைக் கைத்தொழில், 2005 இல் ஒப்பந்தம் செய்யப்பட்ட மொத்த முதலீட்டின் 17 சதவீதத்தை உள்வாங்கியிருக்கையில் ஏனைய துறைகள் எஞ்சிய முதலீட்டை உள்வாங்கின.** ஒப்புதலளிக்கப்பட்ட முதலீடுகள் போன்றே ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்களில் முதலீடுகளைப் பெறும் முக்கிய பெறுநர்கள் உண்மைச்சொத்து, வலு உருவாக்கம் மற்றும் தொடர்பூட்டல் துறைகளை உள்ளடக்கியிருந்தது. கைத்தொழில் துறையினுள் முதலீட்டின் முக்கிய பெறுநர்களாக புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகளும், இதனைத் தொடர்ந்து உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகளும், இரசாயனம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்தி வகைகளும் விளங்கின.

- **வர்த்தக தொழிற்பாட்டிலிருந்த தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை 2004 இன் 2,360 இலிருந்து 2005 இல் 2,338 இற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.** தொழிற்சாலைக் கைத்தொழில் துணைத் துறையினுள் 390 செயற்றிட்டங்கள் புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் வகையிலும், 190 உணவு, பானம் மற்றும் புகையிலை உற்பத்தி வகையிலும் மற்றும் 187 இரசாயனம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் வகையிலும் காணப்பட்டன. இச் செயற்றிட்டங்களுக்கான வெளிநாட்டு முதலீட்டுக் கடப்பாட்டின் பங்கு மொத்த முதலீட்டில் 53 சதவீதமாக விளங்கியது. இத்தொழிற்பாட்டு செயற்றிட்டங்களில் கிட்டத்தட்ட 1,263 செயற்றிட்டங்கள் அல்லது 54 சதவீதமானவை

**அட்டவணை 2.13**
**நிலையான (1996) விலைகளில் மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும்**

| விடயம் | சதவீதப் பங்கு | | சதவீத வளர்ச்சி | |
|---|---|---|---|---|
| | 2004(அ) | 2005(ஆ) | 2004(அ) | 2005(ஆ) |
| **அ. மூலவளங்கள்** | | | | |
| மொ.உ.உற்பத்தி | 63.7 | 64.3 | 5.4 | 6.0 |
| பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளினது இறக்குமதிகள் | 36.3 | 35.7 | 9.1 | 3.0 |
| மொத்தம் | 100.0 | 100.0 | 6.7 | 4.9 |
| **ஆ. பயன்பாடு** | | | | |
| நுகர்வு | 57.7 | 56.6 | 5.0 | 2.9 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 17.3 | 18.3 | 12.2 | 10.7 |
| அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார்துறை | 15.5 | 14.7 | 14.0 | -0.5 |
| அரசு | 1.8 | 3.6 | -0.9 | 105.6 |
| இருப்புக்களின் மாற்றம் | 0.0 | 0.0 | -87.6 | 23.4 |
| பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 24.9 | 25.1 | 7.6 | 5.6 |
| மொத்தம் | 100.0 | 100.0 | 6.7 | 4.9 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை.
மூலம்: இலங்கை மத்திய வங்கி.

ஏற்றுமதிப் பதனிடல் வலையங்களுக்கு வெளியே அமைந்திருந்ததுடன் 28 செயற்றிட்டங்கள் கைத்தொழில் அமைவிடங்களுள் பிரத்தியேகமாகக் கொண்டுள்ள ஏற்றுமதிப் பதனிடல் நிலையங்கள். தகவல் தொழில்நுட்பப் பூங்கா மற்றும் கைத்தொழில் பூங்காக்கள் போன்றவற்றில் அமைந்திருந்தன.

- **2005 இன் இறுதியில் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட 1,641 தொழில்முயற்சிகளினுள் பல எண்ணிக்கையான தொழில்முயற்சிகள் புடவைகள், அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் வகையில் (415 தொழில்முயற்சிகள்) காணப்பட்டன.** இதைத் தொடர்ந்து இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் (385 தொழில் முயற்சிகள்) உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (276 தொழில்முயற்சிகள்), உணவு, பானம் மற்றும் புகையிலை உற்பத்திகள் (195 தொழில் முயற்சிகள்) மற்றும் உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (82 தொழில் முயற்சிகள்) ஆகிய கைத்தொழில் வகைகள் விளங்கின. ரூ.102,110 மில்லியன் மதிப்பிடப்பட்ட முதலீட்டுடன் கிட்டத்தட்ட 1,133 தொழில் முயற்சிகள் கொழும்பு மாவட்டத்தில்

வரைபடம் 2-5
2005இல் பொருளாதாரம் (நடைமுறை விலைகளில்)
பொருட்கள் பணிகளின் வழங்கல் (ரூ. 3,377)




பொருட்கள் பணிகளின் கேள்வி
(ரூ. 3,377 பில்லியன்)




*அமைந்திருக்கையில், இதைத் தொடர்ந்து ரூ.9,788 மில்லியன் கொண்ட மதிப்பிடப்பட்ட முதலீட்டுடன் 240 தொழில்முயற்சிகள் கம்பகா மாவட்டத்தில் காணப்பட்டன. இதன்படி, இவ்விரு மாவட்டங்களும் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளில் 84 சதவீதத்துக்கும் மொத்த முதலீட்டின் 94 சதவீதத்துக்கும் வகைகூறின.*

- ***அரச முதலீட்டு செலவினம் 2005 இல் ரூ.99 பில்லியனுக்கு 119.5 சதவீதத்தால் கணிசமானளவில் அதிகரித்தது.*** *இம்முதலீடு சுனாமியால் பாதிப்படைந்த வீதி மற்றும் புகையிரதப் பாதைகளின் புனரைப்பு மற்றும் புனர்நிர்மாணத்தின் மீதும் தெற்கு நெடுஞ்சாலை, வலு, நீர் விநியோகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்திச் செயற்பாடுகள் போன்ற ஏனைய உட்கட்டமைப்பிலும் கவனஞ் செலுத்தியது.*

### மூலவளங்களின் கிடைப்பனவும் பயன்பாடும்

- ***மொத்த உள்நாட்டு உற்பத்தி (உள்நாட்டு மூலவளங்கள்) மற்றும் பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் (வெளிநாட்டு மூலவளங்கள்) என்பவற்றை உள்ளடக்கும் மொத்த மூலவளங்களின் கிடைப்பனவு நடைமுறைச்சந்தை விலைகளில் ரூ.3,377 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இது முன்னைய ஆண்டைக் காட்டிலும் 14.4 சதவீதம் கூடியதாகும்.*** *இவ்வதிகரிப்பு, உள்நாட்டு மூலவளங்களிலான ரூ.336 பில்லியன் கொண்ட அதிகரிப்பாலும், உள்நாட்டு மூலவளங்களிலான ரூ.90 பில்லியன் கொண்ட அதிகரிப்பாலும் உருவாக்கப்பட்டது. உண்மை நியதிகளில், மூலவளங்களின் கிடைப்பனவு, முன்னைய ஆண்டை விட குறைந்த வீதத்தில் 4.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இது 6.0 சதவீதத்தால் அதிகரித்த உள்நாட்டு மூலவளங்களின் உண்மை வளர்ச்சியையும் 3 சதவீதத்தால் அதிகரித்த காரணியல்லாப் பணிகளின் உண்மை வளர்ச்சியையும் உள்ளடக்குகிறது. உள்நாட்டு மூலவளங்கள் 64 சதவீதத்துக்கும் மீதி 36 சதவீதம் வெளிநாட்டு மூலவளங்களுக்கும் வகைகூறி உள்நாட்டு மூலவளங்களின் சார்பாக சிறிதளவான நகர்வைப் பதிவு செய்கிறது. இந்நகர்வு, மூலவளங்களின் இரு மூலங்களின் சார்புரீதியான வளர்ச்சி வீதங்களின் வெளிப்பாட்டைப் பிரதிபலிக்கின்றது.*

- ***2005 இன் மூலவள பயன்பாட்டின் உள்ளமைப்பு 2004 உடன் ஒப்பிடுகையில் அனைத்து மூன்று முக்கிய வகைகளிலும் குறைந்தளவான அதிகரிப்பு வீதங்களுடன் உண்மை நியதிகளில் நுகர்வில் இருந்து முதலீட்டிற்கு மிகக்குறைந்தளவில் மாற்றமடைந்தது.*** *நுகர்வு 2.9 சதவீத வளர்ச்சியுடன் மூலவளங்களின் 57 சதவீதத்தை ஈர்த்துக்கொண்ட வேளையில் நிலையான மூலதன உருவாக்கம் 18.3 சதவீதத்தை ஈர்த்து உண்மை நியதிகளில் 10.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. பொருட்கள் மற்றும் காரணியல்லாப் பணிகளின் ஏற்றுமதி 5.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருக்கையில் இதன் தொடர்பான பங்கு 2004 இல் காணப்பட்ட 25 சதவீதத்திலேயே மாறாதிருந்தது.*

***நடைமுறை விலையில் பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த வழங்கலில் 68 சதவீதமான பங்கு உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளால் வழங்கப்பட்ட வேளையில் மீதி இறக்குமதியால் வழங்கப்பட்டது.*** *உள்நாட்டு வழங்கலில் 38 சதவீதமான பங்கு பணிகளினாலும் 30 சதவீதம் பொருட்களினாலும் வழங்கப்பட்டதுடன் வர்த்தக நடவடிக்கைகளின் பெறுமதி, போக்குவரத்து, தொடர்பாடல் மற்றும் நிதி சேவைகள் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கின. எதிராக இறக்குமதிகளின் வழங்கலில் பிரதானமாக 28 சதவீதம் பொருட்களாகவும் 4 சதவீத பங்கு சேவைகளின் இறக்குமதியாகவும் இருந்தது.*

**மொத்த பொருட்கள் பணிகளுக்கான கேள்வியில், நுகர்வின் பங்கானது நடைமுறை நியதிகளில் 57 சதவீதமாக இருந்ததுடன் மூலதன உருவாக்கம் 19 சதவீதமாகவும் ஏற்றுமதிகள் 24 சதவீதமாகவும் இருந்தது.** அதேவேளை மொத்த உள்நாட்டு கேள்வியில் அரச நுகர்வு மற்றும் செலவு விரிவடைந்ததுடன் தனியார் துறையானது தொடர்ந்து 90 சதவீத நுகர்வினை கொண்டிருந்தாலும் முதல் உருவாக்கமானது 84 சதவீதமாக கடந்த ஆண்டை விட குறைவான பங்கினை கொண்டிருந்தது.

### சேமிப்புக்கள்

- **உள்நாட்டு மற்றும் தேசிய சேமிப்புக்கள் ஆகிய இரண்டும் 2004 உடன் ஒப்பிடுகையில் உயர் வீதங்களில் வளர்ச்சியடைந்தது.** உள்நாட்டுச் சேமிப்புக்கள் முக்கியமாக மேம்பாடடைந்த வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறனால் விளைவிக்கப்பட்ட தனியார் கூட்டுறவுத் துறைச் சேமிப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக அதிகரித்தன. வெளிநாடுகளிலிருந்து வந்த தொழிலாளர் பணவனுப்பல்களின் உயர் உட்பாய்ச்சல்கள் தேசிய சேமிப்புக்களிலான வளர்ச்சியை அதிகரித்தன. இதேவேளை, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக, உள்நாட்டுச் சேமிப்புக்களுக்கும் முதலீட்டுக்குமிடையிலுள்ள வேறுபாடான மூலவள இடைவெளி முதலீட்டு விகிதத்திலான வளர்ச்சி உள்நாட்டு சேமிப்புக்கள் விகிதத்திலான வளர்ச்சியை விட விரைவாக அதிகரித்துச் செல்வதால் 9.1 சதவீதத்திலிருந்து 9.3 சதவீதத் திற்கு சிறிதளவால் அதிகரித்தது.

- **தனியார் மற்றும் அரச சேமிப்புக்களான உள்நாட்டுச் சேமிப்புக்கள் ரூ.407 பில்லியாக மதிப்பிடப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டை விட 26.2 சதவீத அதிகரிப்பாகும்.** உள்நாட்டுச் சேமிப்புக்களிலான அதிகரிப்பு முக்கியமாக தனியார் சேமிப்புக்கள் 17.4 சதவீதத்தால் மேம்பட்டமையால் ஏற்பட்டதாகும். 2004 ஐப் போன்றே உயர் இலாபகரத் தகைமையுடான அதிகரித்த கம்பனித்துறைச் சேகரிப்புக்கள் தனியார் சேமிப்புக்களிலான உயர் வளர்ச்சிக்கான உந்துசக்தியை வழங்கின. அரச வரவு செலவுத் திட்டத்தின் நடைமுறைக்கணக்கு நிலுவையாக வரைவிலக்கணம் செய்யப்படுகின்ற அரச சேமிப்புக்கள் எதிர்மறையான போதிலும், 2004 உடன் ஒப்பிடுகையில் 18.7 சதவீதமாக வளர்ச்சியடைந்தது. இது உயர் வருமான உருவாக்கல் மற்றும் சுனாமியின் பின்னர் குறிப்பிட்ட சில வெளிநாட்டு கடன்களின் கொடுப்பனவை திருப்பிக் கொடுப்பதனை தற்காலிகமாக நிறுத்தி வைக்க முனைந்தமை போன்றவற்றால் அடையப்பட்டது. இதன் விளைவாக, உள்நாட்டுச் சேமிப்பு விகிதம் (உள்நாட்டுச் சேமிப்புக்கள்/ மொத்த உள்நாட்டு உற்பத்தி) 2004 இல் பதிவு செய்யப்பட்ட 17.2 சதவீதத்திலிருந்து 2005 இல் 15.9 சதவீதத்துக்கு அதிகரித்தது.

**அட்டவணை 2.14**
நடைமுறைச் சந்தை விலைகளில் நுகர்வு, முதலீடு மற்றும் சேமிப்புக்கள்

| விடயம் | ரூ. மில்லியன் | | % மாற்றம் | | மொ. உ. உ வின் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2004(அ) | 2005(ஆ) | 2004(அ) | 2005(ஆ) | 2004(அ) | 2005(ஆ) |
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 2,029,365 | 2,365,702 | 15.2 | 16.6 | 100.0 | 100.0 |
| 2. நுகர்வுச் செலவினம் | 1,706,994 | 1,958,887 | 15.2 | 14.8 | 84.1 | 82.8 |
| தனியார் | 1,542,107 | 1,763,794 | 14.9 | 14.4 | 76.0 | 74.6 |
| அரசு | 164,887 | 195,093 | 18.4 | 18.3 | 8.1 | 8.2 |
| 3. முதலீடு | 506,942 | 625,983 | 30.4 | 23.5 | 25.0 | 26.5 |
| தனியார் | 461,681 | 526,702 | 32.7 | 14.1 | 22.8 | 22.3 |
| அரசு | 45,261 | 99,281 | 11.0 | 119.4 | 2.2 | 4.2 |
| 4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 322,372 | 406,815 | 15.1 | 26.2 | 15.9 | 17.2 |
| தனியார் | 400,577 | 470,419 | 18.5 | 17.4 | 19.7 | 19.9 |
| அரசு | -78,205 | -63,604 | 34.4 | -18.7 | -3.9 | -2.7 |
| 5. உள்நாட்டுச் சேமிப்புக்கள்- முதலீட்டு இடைவெளி | -184,571 | -219,168 | 69.7 | 18.7 | -9.1 | -9.3 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -20,688 | -30,049 | 25.1 | 45.3 | -1.0 | -1.3 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் மாற்றங்கள் | 136,607 | 174,426 | 17.5 | 27.7 | 6.7 | 7.4 |
| 8. தேசிய சேமிப்புக்கள் | 438,290 | 551,192 | 15.4 | 25.8 | 21.6 | 23.3 |

(அ) திருத்தப்பட்டுள்ளது
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

- **உள்நாட்டுச் சேமிப்புக்களுடன் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் மற்றும் தேறிய வெளிநாட்டு தனியார் மாற்றல்களின் கூட்டுத் தொகையான தேசிய சேமிப்புக்கள் 25.8 சதவீதத்தால் ரூ.551. பில்லியனுக்கு அதிகரித்தன.** வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் தொடர்ந்தும் எதிர்க்கணியமாக விளங்கி 2005 இல் ரூ.30 பில்லியனுக்கு விரைவான வீதத்தில் மோசமடைந்தது. சுனாமிக்குப் பின்பு குறிப்பிட்ட வெளிநாட்டுக் கடன்களுக்காகப் பெறப்பட்ட படுகடன் சட்ட இசைவுத் தாமதத்துக்கு மத்தியிலும், வீழ்ச்சி காணப்பட்டது. 2004 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2005 திசெம்பரில் இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிப்பின் காரணமாக உயர் வட்டி வீதங்களிலிருந்து பெற்ற வருமானத்தில் இலாபங்களை செலாவணி இழப்புக்கள் விஞ்சியதால் ஏற்பட்டது. எனினும், தொழிலாளர் பணவனுப்பல்களை உள்ளடக்கும் தேசிய சேமிப்பின் இன்னொரு கூறான தேறிய தனியார் மாற்றல்கள் ரூ.174 பில்லியனுக்கு 28 சதவீதம் கொண்ட உயர் வீதத்தால் மேம்பாடடைந்ததால் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்திலான மோசமடைவின் எதிர்க்கணியத் தாக்கத்தை முற்றாகத் தணித்தது. இதனால், தேசிய சேமிப்பு விகிதம் (தேசிய சேமிப்புக்கள்/மொத்த உள்நாட்டு உற்பத்தி) 2004 இன் 21.6 சதவீதத்திலிருந்து 2005 இல் 23.3 சதவீதத்துக்கு அதிகரித்தது.

## 2.5 கொள்கைகளும் பிரச்சனைகளும்

- **வேளாண்மைக் கொள்கை, இரண்டு முக்கிய குறிக்கோள்களான நுகர்வோர் மற்றும் கைத்தொழில்களுக்கான உயர் தரத்தைக் கொண்ட உணவு மற்றும் உணவல்லா உற்பத்திகளை கிடைக்கச் செய்தல் மற்றும் வேளாண்மையாளர்களின் வருமானத்தினை உயர்த்துதல் என்பவற்றுக்கிடையேயான சமநிலை பேணுவதாக இருக்க வேண்டும்.** பல அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் வேளாண்மைத் துறையில் தன்மை யாதெனில் நாட்டுக்கான அதன் பெறுமதி கூட்டலுக்கு விகிதாசாரமின்றி கிராமிய மக்களுக்கான தொழில்வாய்ப்பு வசதிகளை வழங்குவதாகும். எனவே, தொழில்நிலையை உறுதிப்படுத்தவதற்கும் வேளாண்மை உற்பத்திகளின் ஜீவனோபாயத்தைப் பாதுகாப்பதற்கும் நாடுகள் தீர்வை, உதவுதொகைகள் மற்றும் ஏனைய வழிமுறைகளினூடாக வெளிநாட்டிலிருந்து எழும் போட்டியிலிருந்து வேளாண்மைத் துறையைப் பாதுகாப்பதற்கான போக்கைக் கொண்டுள்ளன. இந்த நீடித்து நிலைத்திருக்காத வழிமுறைகள் நுகர்வு மீது மேலதிகச் செலவை ஏற்படுத்தி வரவு செலவுத் திட்ட மூலவளங்கள் மீது சுமையை ஏற்படுத்தும். நாடுகள் பின்பற்றும் சுமை குறைந்ததும் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய வழிமுறைகளாக உற்பத்தித் திறனை அதிகரித்தல், உட்கட்டமைப்பை மேம்படுத்தல், ஆராய்ச்சியினூடாக புதிய வகைகளை அபிவிருத்தி செய்தல், விரிவாக்கப் பணிகளூடாக புதிய தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி முடிவுகளை விருத்தி செய்தல், அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களைக் குறைத்தல் மற்றும் விலைத் தளம்பல்களை சமாளிப்பதற்கு சந்தையை அடிப்படையாகக் கொண்ட முறைகளை அபிவிருத்தி செய்தல் என்பன விளங்கின.

- **இலங்கையில் வேளாண்மைத் துறை அபிவிருத்தி ஒன்றோடொன்று இணைந்த பல தொடர் பிரச்சனைகளால் தடைப்படுகின்றது.** முக்கிய பிரச்சனைகளாக பொருளியற் சிக்கனம் அடைவதைத் தடைசெய்யும் காணித் துண்டாடல் மற்றும் வரையறுக்கப்பட்ட காணியின் அளவு, கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளுடன் உற்பத்திக் காரணிகளுக்காக போட்டியிடுவதில் உள்ள இடர்பாடு சங்கடம் மற்றும் முடிவுப் பொருட்களுக்காக உள்நாட்டு மற்றும் பன்னாட்டுப் போட்டிக்கு எதிர்த்துநிற்றல் என்பன விளங்கின. தொழில்நுட்பத்திலான பன்னாட்டு அபிவிருத்திகள் பொருட்களின் விலைகளை தொடர்ந்து சோர்வடையச் செய்கையில் உள்நாடு போன்றே வெளிநாட்டிலும் ஏனைய துறைகளிலான விரிவாக்கம் காணி மற்றும் கூலி போன்ற உள்ளீடுகளுக்கான கேள்வியை உயர்த்தியதன் மூலம் உற்பத்திச் செலவை உயர்த்துகிறது. இத்தடைகளைக் கருத்திற்கொண்டு சிங்கப்பூர் போன்று வரையறுக்கப்பட்ட நிலப் பிரதேசத்தை கொண்ட சில நாடுகள் மரபுரீதியான வேளாண்மையிலிருந்து உரிய காலத்திற்கு முன்பே வெளியேறியதுடன் ஐக்கிய அமெரிக்கா நாடுகள் யப்பான் மற்றும் ஐரோப்பிய சமூகம் போன்ற ஏனைய நாடுகள் அந்நாடுகளின் வேளாண்மைத் துறைகளுக்கு கணிசமான உதவுதொகைகளையும் பாதுகாப்பையும் தொடர்ந்து வழங்கிய அதே நேரத்தில் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சியூடாக பெறுமதி கூட்டப்பட்ட வேளாண்மையை

மேம்படுத்துகிறது. வேளாண்மை அபிவிருத்தி மீதான கட்டுப்பாடுகளை கூடியளவு சுதந்திரமான காரணி மற்றும் உற்பத்திச் சந்தைகளின் அபிவிருத்தி, கொள்கை உறுதிப்பாட்டையும் எதிர்வுகூறலையும் பேணுதல், உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை தரம் உயர்த்தல், உயர் தொழில்நுட்பத்தைப் பின்பற்றல் மற்றும் விரிவாக்கப் பணிகளை விரிவடையச் செய்தல் என்பவற்றினூடாக வெற்றிகரமாக எதிர்கொள்ள முடியும்.

- **அரசு மற்றும் தனியார்துறை ஆகிய இரு துறைகளும் வேளாண்மையை அபிவிருத்தி செய்வதில் ஒன்றுக்கொன்று துணையாகப் பங்களிக்க வேண்டும்.** அரசு உட்கட்டமைப்புப் பணிகளை வழங்கி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் ஈடுபட்டு குறிப்பாக அவ்வாறான பணிகளும் செயற்பாடுகளும் தனியார் துறையால் வழங்கப்படுவதற்கு மிகவும் செலவுடையதாகவோ அல்லது 'பொதுமக்களின் பொருட்கள்' தன்மையை உடையதாக இருக்கும்போது, அரசு பொருத்தமான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

- **உள்நாட்டு வேளாண்மைக்கான உதவு தொகைகளிலிருந்து எழும் வரவு செலவுத் திட்டச் சுமை மற்றும் இத்துறையை அளவுக்கதிகமாக பாதுகாப்பதால் ஏற்படும் நலன்புரிச் செலவு, துறையின் சுயமாக நீடித்து நிலைத்திருக்கும் தன்மையை நோக்கிய உற்பத்தித் திறனிலான மேம்பாடுகளூடாக படிப்படியாக இல்லாதொழிக்க வேண்டும்.** உதவுதொகைகள் இலங்கையில் மட்டுமன்றி சகல நாடுகளிலும் காணப்படும் வாதத்துக்குரிய பிரச்சனைகளாகும். உதவு தொகைகளின் செலவு நடைமுறை மற்றும் எதிர்கால வரியினூடாக எதிர்கொள்ளப்பட வேண்டியிருப்பதால், இது பொதுமக்களால் சுமக்கப்பட வேண்டியிருக்கிறது. குறைந்த உற்பத்திச் செலவூடாக உற்பத்தியாளர்களுக்கான உதவுதொகைகள் இறுதியாக நுகர்வோருக்கும் நன்மையளிக்கையில் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் ஆகிய இருபாலாரும் இனிமேல் வரப்போகும் வரிவிதிப்பால் பாதிப்படைகின்றனர். குறிப்பாக உணவுப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான தீர்வை அதிகரிப்புக்களூடாக உள்நாட்டு உற்பத்தியைப் பாதுகாத்தல் வறியோரையே கூடியளவு பாதிக்கிறது. வேளாண்மைத் துறையில் விசேடமாக நெல் வேளாண்மையாளர்களுக்காக தற்போதைய வளமாக்கி உதவுதொகைத் திட்டம் ஏனைய பல பின்னடைவுகளையும் கொண்டுள்ளது. ஏனெனில், இச்செயல்முறை இதிலுள்ள குறைபாடுகளை கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்தலுக்கான உயர் நிருவாகச் செலவை ஏனைய துறைகளுக்கு ஏற்படுத்தும். தேவையான மட்டங்களுக்கு உற்பத்தித்திறன் உயர்த்தப்படும் வரை இலக்கிடப்பட்ட சிறுவேளாண்மையாளர்களுக்காக வளமாக்கி முத்திரைத் திட்டம் கூடியளவு பயன் தரக் கூடிய பொறிமுறையை வழங்கும்.

- **உற்பத்திகளைப் பதனிடல் மற்றும் உற்பத்திகளுக்கான பன்னாட்டு தரங்களை எதிர்கொள்வதற்கும் ஏனைய நாடுகளால் மேற்கொள்ளப்படும் நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளை ஒழித்து விடுவதற்கும் தேவையான முயற்சிகளும் உற்பத்தித்திறன் மேம்பாடுகள் போன்றே சமஅளவில் முக்கியமானதாகும்.** "தீங்கு விளைவிக்கக்கூடிய பகுப்பாய்வின் அபாய கட்டுப்பாட்டு புள்ளி" நியமங்களின் பிரயோகத்தை உள்ளடக்கும் புதிய உணவு சுகாதார சட்டத்தை 2006 சனவரி 1 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் நடைமுறைப்படுத்த ஐரோப்பிய ஒன்றியம் திட்டமிடப்பட்டிருப்பதானது 2005 இல் முக்கிய விடயமாகத் தோற்றம் பெற்றது. நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய திகதி 2006 யூன் வரை நீடிக்கப்பட்ட போதிலும், தேவைப்பட்ட தொழிற்சாலை நவீனமயப்படுத்தல்கள் சரியான நேரத்தினுள் பூர்த்தி செய்யப்படாவிட்டால் இது வேளாண்மை ஏற்றுமதிகள் மீது விசேடமாக தேயிலை மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். பல அபிவிருத்தி அடைந்த நாடுகள் உதவுதொகைகள், தீர்வை மற்றும் ஏனைய பாதுகாப்பு வழிமுறைகளினூடாக வேளாண்மைக்கு அளவுக்கதிகமான பாதுகாப்பை வழங்குகின்றன. இவை அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலுள்ள உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய தாக்கத்தைக் கொண்டிருக்கக்கூடும். இலங்கை இப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு பன்னாட்டு மாநாடுகளைத் தொடர்ந்து பயன்படுத்த வேண்டும்.

- **பறவைக்காய்ச்சல் போன்ற விரைவாகப் பரவிவரும் நோய்கள் சம்பந்தமாக உலகளாவிய கரிசனைகள் மற்றும் ஊடக பிரபல்யத்தைப் பின்பற்றி, நாடு தொற்றுநோய்கள் பரவாமல் தடுக்கும் கடுமையான வழிமுறைகளையும் ஏனைய பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகளையும் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டியதுடன் நாட்டுக்கு ஏற்படும் உண்மையான அச்சுறுத்தல்களுக்கும்**

**உணரக்கூடிய அச்சுறுத்தல்களுக்கும் இடையேயான பொதுமக்கள் விழிப்புணர்வையும் உயர்த்துகின்றது.** பொதுமக்கள் போன்றே கோழிப் பண்ணையாளர்களுக்கான உயிர்ப் பாதுகாப்பின் முக்கியத்துவம் மற்றும் நுட்பம் மீதான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள், இவற்றுக்காக தொழில்நுட்ப இயலளவைப் பயன்படுத்தி நோயிலிருந்து கோழிப்பண்ணை உற்பத்தித் துறைக்கான உள்ளார்ந்த சேதத்தையும் இந்நோயின் பரவல் பற்றி நல்லது போன்றே மோசமான தவறான பொதுமக்கள் புலனுணர்வுகளைத் தணிப்பது முக்கியமாகும்.

- **உச்ச அறுவடை காலத்தை உடனடுத்து சந்தையில் தேவைக்கதிகமான நெல் காணப்படுவதால் நெல்லின் சந்தைப்படுத்தல் கடினமான தொன்றாக மாறி நெல்லின் விலைகள் பெருமளவில் வீழ்ச்சியடைகின்றமையால் வேளாண்மையாளர்கள் தங்கியிருக்கக்கூடிய வருமானத்தை இழக்கின்றார்கள்.** நியாயமான மட்டத்தில் சந்தை விலையைப் பேணும் நோக்கில் குறிப்பிட்ட கொள்வனவு விலையில் அரசு சந்தையில் தலையிட்டது. எனினும், அரச நிதியங்களின் பற்றாக்குறை, போதுமானதற்ற போக்குவரவு மற்றும் களஞ்சியப்படுத்தல் உட்கட்டமைப்பு மற்றும் காசுப்பாய்ச்சல் முகாமைத்துவம் உள்ளடங்கலாக நீடித்து நிலைத்திருக்கக்கூடிய கொள்வனவு மற்றும் விற்பனைப் பொறிமுறைகளுக்கான போதுமான தற்ற முறைமைகளின் பெருமளவு காரணமாக அரசின் முயற்சிகள் போதுமானதாக இருக்கவில்லை. அறுவடைக் காலத்தில் நெல்லின் பண்ணை விலையானது உறுதியாக வீழ்ச்சியடைவதானது போட்டிச் சந்தை சூழலின்மையினை குறிக்கின்றது. இதற்கு நெல் பயிர்ச்செய்கையில் பிரதேசங்களின் வழக்கமான போட்டிக்கெதிரான நடைமுறைகள் காரணமாக இருந்தன. எனவே அரசாங்கமானது, அறுவடைக் காலத்தில் நெல்லுக்கான குறைந்த பண்ணை விலைக்கு நிலைத்து நிற்கும் சந்தை அடிப்படையிலான தீர்வினை கொண்டு வருவதற்கு சந்தை நடைமுறைகளை கவனமாக பரீட்சிக்க வேண்டும்.
- **நலிவான விரிவாக்கப் பணிகள் பயிர்ச்செய்கைக்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் கண்டறியப் பட்டவைகள் எடுத்துச் செல்லப்படுவதை தடை செய்கிறது.** நிறுவன ரீதியான வரையமைப்பிலான மாற்றங்கள் மற்றும் கிராம மட்டத்திலான வேளாண்மை விரிவாக்க அலுவலகங்களை விலக்கிக் கொண்டமை ஆராய்ச்சியாளர்கள், வேளாண்மை நிருவாக உத்தியோகத்தர்கள் மற்றும் வேளாண்மையாளர்களுக்கிடையேயான தகவலின் பயன்தரு பாய்ச்சலைத் தடை செய்தது. வேளாண்மையாளர்களுக்கும் ஆராய்ச்சியாளர் களுக்குமிடையே உருவாக்கப்பட்ட இடைவெளி புதிய ஆராய்ச்சி கண்டுபிடிப்புக்களை குறைந்தளவில் பின்பற்றுவதற்கு இட்டுச்சென்றதன் மூலம் உற்பத்தித்திறன் மேம்பாட்டுக்கான வாய்ப் புக்களை இத்துறைக்கு இல்லாமற் செய்கிறது. இது சம்பந்தமாக காலம்தாழ்த்தாது எடுக்கப்பட்ட அண்மைய கொள்கை நடவடிக்கை பாராட்டத்தக்கதுடன், பொறுப்புக்கூற வேண்டிய தன்மையுடன் அவ்வாறான விரிவாக்கப் பணிகளை வழங்குவதற்கு போதிய திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்பு அவசியமாக தேவைப்படுகிறது.
- **கைத்தொழில் துறை அதன் ஆகக்கூடிய உள்ளார்ந்த வளர்ச்சியை அடைவதை பல இடையூறுகள் தடுத்துவிட்டன.** இவை பற்றாக்குறை யாக விளங்கும் மனிதவள மூலதனம் குறிப்பாக வலு, வீதி மற்றும் புகையிரதப் பாதைகளுக்கான போதுமானதற்றதாக விளங்கும் உட்கட்டமைப்பு வசதிகள், உயர் செலவுகளைக் கொண்ட வலு, அரசதுறை தொழில் முயற்சிகளை மீள்ஒழுங்குபடுத்துவதில் போதுமானதற்ற முன்னேற்றம், சட்டம் மற்றும் ஒழுங்கு சார்ந்த கரிசனைகள், தொழிற்சந்தையிலான நெகிழ்ச்சியற்ற தன்மைகள் மற்றும் உரிய கடன் வங்குறோத்துச் சட்டம் இல்லாமை என்பவற்றை உள்ளடக்குகின்றன. அடுத்தடுத்து வந்த அரசுகள் இத்தடைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்க்க முயற்சித்திருக்கையில், பயன்தரும் வெளிப்பாடு போதுமானதற்றதாகவே காணப்படுகிறது. கைத்தொழில் துறை வளர்ச்சிக்கான நாட்டின் உள்ளார்ந்த வளம் எய்தப்பட வேண்டுமாயின் நீண்ட தவணை இலக்குகளுக்கான ஒருங் கிணைப்பும் கடப்பாடும் தேவைப்படுகிறது.
- **ஒழுங்கமைப்புத் தேவைப்பாடுகள் மற்றும் சட்ட நடவடிக்கை சம்பந்தமானவற்றுடன் தொடர்பான பணிகளின் வழங்கலில் காணப்படும் மோசமான தன்மை வழக்காடும் செலவுகள் உள்ளடங்கலாக வியாபாரத்தின் கொடுக்கல்வாங்கல் செலவுகளை அதிகரித்தன.** இவை நீதிமன்ற நடவடிக்கை களிலான நீண்ட தாமதங்கள், நடைமுறை யிலிருக்கும் சட்டங்களின் சிக்கலான தன்மை மற்றும் நாட்டிலுள்ள வர்த்தக நீதிமன்றங்கள் போதுமானதல்லதாக இருத்தல் என்பவற்றுக்கு மேலதிகமாக நேரத்தை எடுக்கும் அறிக்கையிடும்

***சிறப்புக் குறிப்பு - 7***

## பறவைக்காய்ச்சலும் இலங்கை மீது அதன் தாக்கமும்

உலகம் முழுவதும் பரவக்கூடிய பறவைக் காய்ச்சலின் சாத்தியம் மற்றும் மனிதர்கள் மற்றும் உலகளாவிய பொருளாதாரம் மற்றும்[1] நிதியியல் முறைமை மீது அது ஏற்படுத்தும் பாதிப்புக்கள் பற்றிய கரிசனை அதிகரித்து வருகின்றது. வைக்காய்ச்சல் குளிர் சுரவிஷக்கிருமிகளின் மாற்றத்தால் ஏற்படுகின்ற ஒரு தொற்றுநோய்க் என இனங்காணப்பட்டுள்ளது. ஒரு நூற றாண்டுக்கு முன்னர் முதல் முறையாக இத்தாலியில் இனங்காணப்பட்டது. நலத்துறை நிபுணர்கள் குறிப்பாக தற போதைய தொற்றுநோய்க் கிருமிகளின் H5NI ஐப்பற்றி கரிசனை கொண்டுள்ளனர். இம் மாற்றம் பறவைகளின் தொகைகளில் விரைவாகப் பரவி கோழிப் பண்ணைகளுக்கு உயர் மரணத்திற்கு காரணமாவதுடன் சிலவேளை மனிதர்களுக்கும் தொற்றி அரைப்பங்கினர் வரையில் உயர்ந்தளவிலான மரணத்தை விளைவிக்கின்றது.

ஆனால், மனிதனை நோய் தொற்றுதல் அரிதாகும். ஏனெனில், நோய் பறவைகளிலிருந்து மனிதர்களுக்கோ அல்லது ஆளிலிருந்து ஆளுக்கோ இலகுவில் பர வக்கூடியதல்ல.

உலக சுகாதார நிறுவனத்தின் படி குளிர் சுரத் தொற்றுநோய்க் கிருமிகளிலான பரிணமிப்பை எதிர்வு கூறக்கூடிய ஒன்றல்ல. எனவே, H5N1 போன்ற அவ்வாறான நோய்க்கிருமி எப்பொழுது மனிதர்களிடையே இலகுவில் பரவக்கூடுமென்பது பற்றியோ அதன் கடுமை பற்றியோ அறிவது கடினமாகும். எனினும், நோய்க்கிருமி ஒரு நிலைக்கு மாறும்போது மனிதனிலிருந்து மனிதனுக்கு இன்னொரு வலுவான முறையில் பரவுவதனை அனுமதிப்பதன் மூலம் உலகளாவிய ரீதியிலும் பரவக்கூடிய தன்மையொன்று ஏற்படுமென உலக சுகாதார நிறுவனம் கருதுகின்றது. உயர்ந்தளவில் காணப்படும் உலகளாவிய நகர்வு மற்றும் உள்ளகத் தொடர்புகள் காரணமாக நோய் விரைவாகப் பரவக்கூடும். அத்துடன் நோய்க்கிருமி உயர் இறப்பு வீதத்தைக் கொண்டிருக்குமாயின் உலகிலுள்ள கிட்டத்தட்ட மில்லியன் கணக்கான உயிர்கள் அச்சுறுத்தலுக்குள்ளாக்கும். முன்னைய உலகளாவிய தொற்றுநோயில் அவதானிக்கப்பட்ட அனுகூலங்களின் அடிப்படையில் 6 கிழமைக்கு கூடுதலான காலம் உள்ளடங்கலாக வேறுபட்ட தீவிரத்துடன் மீண்டும் மீண்டும் அலை அலையாக இத்தொற்று நோய் தோற்றம் பெறக்கூடும்.

1997 இல் ஹொங்கொங்கில் H5N1 ஆனது திடீரெனத் தோன்றிப் பரவியமையானது அதன் கோழிப் பண்ணைக் கைத்தொழிலில் பாரிய அழிவை ஏற்படுத்தி 6 மனித இழப்புக்களையும் ஏற்படுத்தியது. நோயின் அண்மைய தோற்றம் தென்கிழக்காசிய நாடுகள் சிலவற்றில் 2003 இல் ஆரம்பமானதுடன் இது ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்கா உள்ளடங்கலான 47 நாடுகளுக்கு (2006 மாச்சு 21 இல் உள்ளவாறு) திடீரெனப் பரவியது. இந் நாடுகளிடையே, தொற்றுதல் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்ட சகல நாடுகளிலும் அந்த நோய் தொற்றியவர்கள் இறந்த பறவைகள் அல்லது தொற்றுநோய்க்குள்ளான பறவைகளுடன் நேரடித் தொடர்பைக் கொண்டவர்களாகவே காணப்பட்டனர்.

இலங்கையில் இதுவரை H5N1 இன் தொற்றிற்கான எந்தவித அறிகுறியும் அறிவிக்கப்படவில்லை. எனினும், இந்தியா, பாகிஸ்தான், கம்போடியா, சீனா, இந்தோனேசியா, மலேசியா, மியன்மார், தாய்லாந்து மற்றும் வியட்னாம் போன்ற இலங்கையைச் சுற்றியுள்ள நாடுகளுக்கு நோய் தொற்றியுள்ளதால், நாடு தொடர்ந்தும் நோயால் பாதிப்புக்குள்ளாகும் நிலையைக் கொண்டுள்ளது. இந்நோய் இடம்பெயர்ந்து வரும் பறவைகள், இறக்குமதி செய்யப்பட்ட பறவைகள், கோழிப்பண்ணை உற்பத்திகள், மற்றும் பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் என்பவற்றின் மூலம் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டமை பல ஆசிய நாடுகளில் உள்ளதைப் போன்றே இலங்கையிலுள்ள கிராமியக் குடும்பங்களும் வீட்டின் பின்புறமுள்ள திறந்த வெளியில் கோழியை வளர்ப்பது மனிதனுக்கு நோயைப் பரப்பும் உயர் இடர்நேர்வை கொண்டிருக்கின்றது. மனிதர்களுக்கு தொற்றுநோயை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்கள் உயர்ந்து காணப்படும் இன்னுமொரு உயர் இடர்நேர்வு இடமாக, உயிருள்ள கோழிகளின் சந்தைகள் விளங்குகின்றன.

இலங்கையில் புரதச்சத்து உணவின் மிக முக்கிய மூலங்களில் ஒன்றாக கோழி இறைச்சி விளங்குவதுடன், இத்தொழில் கிட்டத்தட்ட 75,000 ஆட்களுக்கு நேரடித் தொழில் வாய்ப்புக்களையும் ஒரு மில்லியன் மக்களுக்கு மறைமுகத் தொழில்வாய்ப்புக்களையும் வழங்குகின்றது. மறை முகமாக ஈடுபடுபவர்களில் கோழித்தீன் உற்பத்தியாளர்கள் கைத்தொழிலுக்கு உள்ளீடுகளை வழங்கும் ஆலையாளர்கள் ஆகியோர் உள்ளடக்குகின்றனர். கோழிப் பண்ணையாளர்களின் கிட்டத்தட்ட 80 சதவீதத்தினர் சிறு பண்ணையாளர்கள் வகையாக விளங்குகையில் எஞ்சிய 20 சதவீதத்தினர் நடுத்தரத்திலிருந்து பெரியளவிலான வகையைச் சார்ந்தவர்களாக இருந்தனர்.அயல்நாடுகளில் ஏற பட்ட பறவைக்காய்ச்சலின் பரம்பலுடன் கோழி இறைச்சி மற்றும் முட்டைகளுக்கான நுகர்வோர் கேள்வி கணிசமானளவில் வீழ்ச்சி யடைந்தமையால், விலைகள் உற பத்திச் செலவை விடகுறைவான அளவுக்கு வீழ்ச்சியடைந்து கோழிப் பண்ணையாளர்கள், உள்ளீட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களை மோசமாகப் பாதிக்கின்றன.

பாதிப்புக்குள்ளான நாடுகளிலிருந்து உயிருள்ள பற வைகள் மற்றும் கோழிப் பண்ணை உற்பத்திகளின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் விலங்கு உற்பத்தி மற்றும் நலத் திணைக்களம் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்துள்ளது. மிருக வைத்தியர்கள் விழிப்புடன் இருக்குமாறும், கோழிப் பண்ணைகளில் உயர் இறப்பு வீதங்கள் எதுவும் காணப்பட்டால் உடனடியாக அறிவிக்குமாறும் வேண்டப்பட்டனர். இத்திணைக்களம் நீர்த்தேக்கங்களில் வசிக்கும் இடம்பெயர்ந்த பறவைகள் இருக்கும் இடங்களிலான "முக்கிய பிரதேசங்களில் தீவிரமான கடும் கண்காணிப்பினை ஆரம்பித்தது. நோய்த் தவிர்ப்பு நிகழ்ச்சித் திட்டங்களைத்

**சிறப்புக் குறிப்பு - 7 தொடர்ச்சி**

தொடங்குவதற்கும், முன்கூட்டியே நோயைக் கண்டு பிடிப்பதற்கும் நோயைத் தடுப்பதற்கும் வசதிப்படுத்தக்கூடிய ஆய்வுகூட வசதிகள் மற்றும் சோதனை வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் இத்திணைக்களத்தின் இயலளவுகளைப் பலப்படுத்துவதற்கும் நிதியங்கள் ஒதுக்கப் பட்டுள்ளன. திணைக்களம் தொடர்பான ஏனைய நிறுவனங்களுடனும் கோழிப்பண்ணை யாளர்கள் மற்றும் ஏனைய பங்குடமையாளர்களுக்கு நோயின் அறிகுறிகள் பற்றி கல்வியூட்டுவதற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்ததுடன், பறவைகளிடையே ஏதாவது நோய் தொற்றுவதற்கான சந்தேகம் காணப்பட்டால் நடவடிக்கையும் எடுக்கப்படும்.

நல அமைச்சு, விலங்கு உற்பத்தி மற்றும் நலத் திணைக்களத்துடனும் மற்றும் தொடர்பான ஏனைய அமைச்சுக்களுடனும் இணைந்து தேசிய அளவில் உலகளாவிய முறையில் பரவும் தொற்று நோயை எதிர்கொள்ளத் தயாரான நிலையிலுள்ள திட்டத்தைத் தொகுப்பதற்காக பறவைக்காய்ச்சல் தொடர்பான தேசிய தொழில்நுட்பக் குழுவொன்றை நிறுவியது. இத்திட்டம், இந்நோய் பரவலைத் தடுப்பதற்கும், பரவக்கூடிய சந்தர்ப்பத்தில் நோய்ப் பரம்பலைக் கட்டுப்படுத்து வதற்கும் ஏனைய தொடர்பாக முக்கிய அமைச்சுக்களுடன் நெருக்கமாக இணைந்து நல அமைச்சால் மேற்கொள்ளப்பட வேண்டிய உத்திகளையும் செயற் பாடுகளையும் எடுத்துக் கூறுகிறது. இத்திட்டம் தயார் நிலையிலிருத்தல் மற்றும் பற வைக் காய்ச்சல் உலகளாவிய ரீதியில் தொற்றுவது தொடர்பான ஐந்து முக்கிய உத்திகளை இனங்கண்டது.

- **திட்டமிடலும் ஒருங்கிணைப்பும்:** தயார்நிலையிலான திட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் தீர்மானம் மேற்கொள்வதற்கான ஒருங்கிணைக்கப்பட்ட வழிமுறை யில் ஈடுபட்ட முகவர்களின் பங்களிப்புக்களையும் பொறுப்புக்களையும் வரைவிலக்கணம் செய்கின்றது.
- **கடுமையான கண்காணிப்பும் முன்னெச்சரிக்கையும்:** விலங்குகள் மற்றும் மனிதர்களில் நோயின் கண்காணிப்பைப் பலப்படுத்தலும் ஆய்வு கூடங் களைப் பலப்படுத்துவதும் உள்ளடக்குகின்றது.
- **தடுப்பும் கட்டுப்பாடும்:** பொதுமக்களின் நல நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மனிதர்களின் தொற்றுநோய் பரவுதலைக் குறைப் பதற்கான விசேடமான அணுகுமுறைகளையும், தடுப்பு மருந்துகளின் கிடைப்பனவு என்பவற்றை இருப்புக்களில் வைத்திருப்பதையும் உள்ளடக்குகிறது:
- **நலமுறைமைக்கு இசைந்து செல்லல்:** மருத்துவ மனைகளின் அதிகரித்த கேள்வியை போதியளவில் எதிர்கொள்ளக்கூடிய நலக்கவனிப்பு முறைமையைப் பலப்படுத்துவதையும் தோற்றம் பெற்றுவருகின்ற உலகளாவிய நோய்ப் பரவலுக்குத் தேவையான நலப்பணிகளையும் உள்ளடக்குகின்றது.
- **இடர்நேர்வை அறிவித்தல்:** உலகளாவிய தொற்றுநோய் பரம்பலின் ஒவ்வொரு கட்டத்திலும் பொதுமக்கள், நலக்கவனிப்பு அலுவலர்கள், நலன் விரும்பிகளுக்கு ஆகப்பிந்திய தகவல்களை வழங்குவதற்கான ஒருங்கிணைந்த தொடர்பூட்டல் உத்தியை உள்ளடக்கியுள்ளது.

நோயை இனங்காணல், கட்டுப்படுத்தல் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளின் விபரங்கள் உள்ளடங்கலாக சகல தொடர்பான அலுவலர்களுக்கும் "உலகளாவிய பறவைக்காய்ச்சல் தொற்றுதலுக்கான அச்சுறுத்தல் களுக்கான தயார்நிலையும் அதற்கு இசைவளிக்கும் அறிவுறுத்தல்களும்" நலப்பணிகள் பணிப்பாளர் நாயகத்தால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. மூன்று ஆண்டுக் காலப்பகுதிக்கான (2005/06- 2008) இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நலக்கவனிப்பு மற்றும் ஊட்டச்சத்து அமைச்சினதும் விலங்கு உற்பத்தி மற்றும் நலத் திணைக்களத்தின் செயற்பாடுகளுக்குமான மதிப்பிடத்தக்க நிதியத் தேவைப்பாடு கிட்டத்தட்ட ஐ.அ.டொலர் 7.5 மில்லியனாக விளங்குகின்றது. அத்தியாவசியமாகத் தேவைப்படும் வைரசை ஒழிக்கும் மருந்துகள், தடுப்பு மருந்துகள், தேவையான ஆய்வுகூடக் கருவிகள் மற்றும் மருத்துவமனை வசதிகள் என்பன இன்னமும் கிடைக்கக்கூடியதாக இல்லாததால் உலகளாவிய ரீதியில் பரவக்கூடிய நோயை தடுக்கும் தயார்நிலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நிதியியல் மற்றும் தொழில்நுட்பத் தடைகள் காணப் படுகின்றன.

பொருளாதாரத்தின் மீது உலகளாவிய ரீதியில் பர வும் நோயின் தீவிரம், நாட்டின் நலக்கவனிப்பு முறைமையின் இயலளவு மற்றும் தயார்நிலை என்பவற்றின் அளவில் தங்கியுள்ளது. இது மருந்துகள், தடுப்பு மருந்துகளை கொள்வனவு செய்து பகிர்ந்தளிப்பதற்குத் தேவையான நிதியியல் வளங்களிலும் உரிய நேரத்திலான சிகிச்சை மற்றும் சாத்தியமான பயணக் கட்டுப்பாடுகள் போற்ற வசதிகளிலும் தங்கியுள்ளது. நோய் தடுப்பு மற்றும் குணப்படுத்தல் வழிமுறைகளில் நலக்கவனிப்பு வசதிகளுக்காக முன்னராகவே மேற்கொள்ளப்பட்ட அதிகரித்த செலவு, தயார்நிலைத் திட்டமிடலுக்கான உணவுப் பொருட்களின் இருப்பு, உலகளாவிய நோய் பரவமுன் உள்ள காலப்பகுதியில் கோழிக் கைத்தொழிலில் இருந்து நீக்கப்பட்ட பறவைகளால் எழும் இழப்புக்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு, சுற்றுலாத் துறையிலான இழப்புக்கள் மற்றும் உலகளாவிய ரீதியில் நோய் பரவும் காலத்தில் வியாபாரத்தின் செயலாற்றத்தில் இருந்தான அரசிறை இழப்பு என்பவற்றால் பொருளாதாரத்தின் மீது சம்பந்தப்பட்ட உள்ளார்ந்த வருமானத்தில் நிதியியல் பாதிப்புக்கள் காணப்படுகின்றன.

உலகளாவிய ரீதியில் பறவைக் காய்ச்சல் தொற்றும் பொருளாதாரதில் ஏற்படுத்தக்கூடிய பிரச் சினைகளை கருத்திற் கொள்கையில், உலகளாவிய நோய் தொற்றல் காரணமாக நிதியியல் முறைமை மீது ஏற்படக்கூடிய குறுக்கீட்டை மட்டுப்படுத்துவதற்காக சகல முக்கிய நிறுவனங்களும் அவற்றின் பணிகளை குறுக்கீடு எதுவுமின்றி நடைமுறைப்படுத்துவதற்காக தடங்கலற்ற வியாபாரத் திட்டங்களை தயாரிப்பது அத்தியாவசியமாகும்.

தேவைப்பாடுகள் மற்றும் சுமையுள்ள ஒப்புதலளித்தல் விதிமுறைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. அதேநேரத்தில் கைத்தொழிற் கழிவால் உருவாக்கப்பட்ட சுற்றாடல் மாசடைதலில் ஏற்பட்ட அதிகரிப்புடன் சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக உரிய சட்ட ஏற்பாடுகள் இல்லாமையும் கரிசனைக்குரிய விடயமாக வந்துள்ளது. கைத்தொழிற் துறையில் விரிவாக்கம், சுற்றாடல் கரிசனைகள் மற்றும் அவற்றின் அமுல்படுத்தல் என்பவற்றை உள்ளடக்கிய தொடர்பான பிரச்சனைகள் சார்பான தற்போதைய சட்டங்களின் மீளாய்வு, நாட்டின் கைத்தொழில் விரிவாக்கம் நீண்டகாலம் நீடித்து நிலைத்திருப்பதற்குத் தேவைப்படுகிறது.

- **கைத்தொழில்களின் ஒடுங்கிய குவிவுத்தன்மை, கைத்தொழில் மீது வெளியிலிருந்து வரும் அதிர்வுகளுக்கு பாதிப்புக்குள்ளாகும் தன்மையை அதிகரிக்கின்றது.** இலங்கையின் கைத்தொழிற்றுறை, தைத்த ஆடைகள், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள், மட்பாண்டங்கள் மற்றும் பதனிடப்பட்ட உணவுகள் போன்ற ஒருசில உற்பத்தி வகைகளிலேயே கூடிய கவனம் செலுத்துகின்றது. ஏனைய கைத்தொழில் துறைகளின் விரிவாக்கத்துக்கு தற்போதிருக்கும் தடைகளை நீக்கல் கைத்தொழிற் துறையின் கூடிய பரந்தளவான தளத்துக்கும் மீள்எழுச்சி பெறுதலுக்கும் இட்டுச்செல்லும்.

- **2005 இன் பொருளாதார வளர்ச்சி 2004 இன் வளர்ச்சியை விட உயர்வாக விளங்கி நாட்டின் பொருளாதார அமைப்பின் மீள்எழுச்சி மற்றும் நாட்டின் பொருளாதார அமைப்பின் பாதிக்கப்படக்கூடிய தன்மை ஆகிய இரண்டையும் பிரதிபலிக்கின்றது.** சுனாமி குடித்தொகையின் கிட்டத்தட்ட 3 சதவீதத்தையும் பொருளாதார வெளியீட்டுக்கு 5 சதவீதத்தை விட குறைவாக பங்களிப்புச் செய்த மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறை ஆகிய இரு துறைகளையும் மிகவும் மோசமாகப் பாதித்தது. எனினும், மீள்எழுச்சியை வெளிப்படுத்தி மற்றொரு துறையான வேளாண்மைத் துறையில் எறிவு செய்யப்பட்ட வளர்ச்சியை விட கூடுதலான வளர்ச்சி பதிவு செய்யப்பட்டதால், 2005 இல் இறுதி வளர்ச்சி வெளியீடு சுனாமிக்கு முன்பு எதிர்பார்க்கப்பட்டதை விட சிறிதளவே குறைவானதாகும். அதேநேரத்தில் உயர் உள்நாட்டு வேளாண்மை வெளியீடு மற்றும் கூடிய வினைத்திறன் மிக்க மின்வலு உருவாக்கத்துக்கு உகந்ததாக விளங்கிய 2005 இல் நிலவிய சாதகமான காலநிலை நிலைமைகள் காரணமாகவே உயர் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விளங்கியதால், 2005 இன் உற்பத்தியின் வகைப்படுத்தல் பாதிப்படக்கூடிய தன்மையை எடுத்துக் காட்டுகிறது. இவ்விரு துறைகளிலிருந்தான பங்களிப்பு, இறக்குமதி வர்த்தகத்திலிருந்தான பங்களிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சி அதே போன்று மீன்பிடி மற்றும் சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் துணைத்துறையிலிருந்தான பங்களிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சியை கூடுதலான அளவில் எதிரீடு செய்யப் போதுமானதாக இருந்தது.

- **வேளாண்மை மற்றும் வலு உருவாக்கத்தில் சிறந்த செயலாற்றத்தை வழங்கும் வானிலை மீது பொருளாதார வளர்ச்சி கணிசமானளவிற்கு தங்கியிருத்தல் நீண்ட காலம் நீடித்து நிலைத்திருக்க மாட்டாது.** இதன் விளைவாக பணிகள் துறைக்கு உரியவை போன்றே கைத்தொழில் மற்றும் வேளாண்மைத்துறை ஆகிய இரண்டினதும் விரிவாக்கத்துக்காக மேலே குறிப்பிடப்பட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் மற்றும் சட்டவாக்கத்துக்கான மாற்றங்களும் அதன் நடைமுறைப்படுத்தலும் என்பவற்றை உள்ளடக்கிய நீண்டகாலம் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய 6-8 சதவீதமான வளர்ச்சிப் பாதையை அடைவதற்கான வலுவான கடைப்பாடே இலங்கைக்கான முக்கிய கொள்கை முன்னுரிமையாகக் காணப்பட்டுள்ளது.

- **செலவினப் பக்கத்தில், வெளிநாடு மற்றும் உள்நாட்டுக் கேள்வி ஆகிய இரண்டிலுமான உண்மை வளர்ச்சி வெளியீட்டிலுள்ள வளர்ச்சிக்கான உந்துசக்தியை வழங்கியது.** வெளிநாட்டுக் கேள்வியிலான வளர்ச்சி 2004 இலிருந்து மிதமடைந்திருக்கையில் இது பலமான உலகளாவிய போட்டிக்கு மத்தியிலும் செழிப்பாக தொடர்ந்து விளங்கியது. இது தேர்ச்சி மேம்பாடு மற்றும் தனியார் தயாரிப்புத்துறையில் புதிய தொழில்நுட்பங்களின் அறிமுகத்தினூடாக உற்பத்தித் திறன் அபிவிருத்திகள் மற்றும் கிரயச்செலவைக் குறைந்தளவில் மேற்கொள்ளப்பட்ட ஒன்றுபட்ட முயற்சிகளையும் மற்றும் உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதற்கு மீள்ஒழுங்குமுறைப்படுத்தல் செயல்முறையின் வெற்றியையும் பிரதிபலிக்கின்றது. ஆசியாவின் பாரிய பொருளாதாரங்களான இந்தியா மற்றும் சீனா விரைவான வீதத்தில் வளர்ச்சியடைந்து வருவதால், இலங்கையின் உற்பத்திகளுக்கான வெளிநாட்டுக்

கேள்வியிலான தொடர்ச்சியை உறுதிப் படுத்துவதற்கு இவ்உற்பத்தித் திறன் மேம்பாட்டுச் செயல்முறை தொடர்ந்து மேற்கொள்ளப்படல் வேண்டும்.

- **நுகர்வு மற்றும் முதலீடு ஆகிய இரண்டுக்குமான உள்நாட்டுக் கேள்வியிலிருந்து வெளியீட்டுக்கான உந்துசக்தியும் போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளில் காணப்பட்ட சுபீட்ச நிலையுடன் ஒப்பிடுகையில் மிதமடைந்தது.** 2003 இலும் 2004 இலும் மொத்த உள்நாட்டுக் கேள்வி உண்மை நியதிகளில் முறையே 8 சதவீதத்தக்கும், 6 சதவீதத்துக்கும் கூடுதலாக வளர்ச்சியடைந்த நிலையில் நாடு முழுவதிலும் அடைக்கப்பட்ட கேள்வியை எதிர்கொள்வதற்கு உற்பத்தி அதிகரித்தது. பொருட்கள் மற்றும் பணிகளுக்கான உள்நாட்டுக் கேள்வியிலான உண்மையானதும் நீடித்து நிலைத்திருக்கக் கூடியதுமான வளர்ச்சியுடன் இணைந்து உற்பத்தி முதலீடு மற்றும் உயர் உற்பத்தித்திறன் மட்டங்களில் மேற்கொள்ளப்படும் மேலதிக விரிவாக்கம் நாட்டில் பொருளாதார அபிவிருத்தியின் உயர் மட்டங்களை குறித்துக் காட்டும் இப்பொதுவான வளர்ச்சி உத்வேகத்தை அடையும் பொருட்டு முழுஅளவில் இயலுமான சூழலை உருவாக்குவதில் அரச கொள்கைகள் கவனஞ் செலுத்துவது அத்தியாவசியமாகும்.

- **எதிர்கால முதலீடு மற்றும் இயலளவு விரிவாக்கத்துக்கான தடைகளைத் தீர்ப்பதற்கான தேவை எவ்வளவு முக்கியமோ அதுபோல் குறுகிய காலத்தில் நுகர்வோர் மற்றும் உள்நாட்டு உற்பத்தியாளர்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பது அடுத்தடுத்து வந்த அரசுகளுக்கான கட்டாயத் தேவையாகும்.** 2005 இல் இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்கள் ஆகிய இரண்டினதும் நுகர்வல்லா இறக்குமதிகளிலான மெதுவடைவை இலேசாக எடுத்துக்கொள்ள முடியாது. ஏனெனில், இரு வகைகளும் எதிர்கால பொருளாதாரச் செயற்பாடு மற்றும் விரிவாக்கத்தின் முதன்மைக் குறிகாட்டிகளாகும். ஏதோ சில துறைகளில் வளர்ச்சி முழுமையான இயலளவுப் பயன்பாடு காரணமாக மெதுவடைந்திருக்கையில், ஏனைய துறைகளில் வளர்ச்சி போதுமானதற்ற உட்கட்டமைப்பு மற்றும் வினைத்திறனற்ற செயற்முறைகள் மற்றும் நடைமுறைகள் காரணமாக அடையக்கூடிய உள்ளார்ந்த வளத்துக்குக் குறைவாகவே காணப்பட்டது. இங்குகூட, இயலளவைக் கொண்ட அத்துறைகளிலான விரிவாக்கத்துக்கான உள்ளார்ந்த வளத்துடன் இணைந்துசெல்லும் வகையில் உட்கட்டமைப்பு, தொழிலாளரின் சுமூகமான தொழிற்பாட்டுக்கான செயல்முறைகள் மற்றும் நடைமுறைகள், மூலதனம் மற்றும் பொருட்களின் சந்தைகள் என்பவற்றை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டால் மட்டுமே இலங்கை நீடித்து நிலைத்திருக்கக்கூடிய உயர் வளர்ச்சிப் பாதையை அடைய முடியும்.